


# வித்தியா

இதழ் - 02
2000



வெளியீடு :
வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு.

எல்லாம் வல்ல இறைவா! உன்னருள் பொலிக!
எல்லா வளமும் எல்லோரும் பெறுக!
எல்லா உயிரும் இன்புற்று வாழ்க!

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

(மட்டக்களப்பு கல்வி வலயச் சஞ்சிகையின் சின்னம் **வித்தியா** – இதழ் 1)

இதழ் 02ல் '**வித்தியா**' தன்னை மேலும் மேம்படுத்திக் கொள்கிறாள்.
விளக்கமளிக்கிறார்: –
**திரு. எஸ். இரவீந்திரன்** – முதன்மையாசிரியர் (சித்திரப்பாடம்)

*நூல்* ***வடிவம்*** :– பிரகாசமளிக்கும் கதிரவனூடாக அறிவுச்சுடர் விடுகிறது.

*மரநிழல்* :– கல்வி மூலமாகப் பெறும் அறிவு நிழல் தருகிறது.
கல்வி, கலை, கலாச்சாரம் வளர்கிறது.

*காற்சிலம்பு* :– கிழக்கிலங்கையின் பாரம்பரியத்தினை விளக்கும் கண்ணகி வழிபாடும், கலையும்

*மீன்* :– நீரலையினூடாக மட்டக்களப்பில் எழும் மீனின் பாடுமிசை.

**நெற்கதிர்** :– மக்கள் வாழ்க்கைக்கு வளமளிக்கும் செல்வத்தின் செழிப்பு

***அலங்கார உருக்கள்*** :– இந்துக்கோயில்களில் அமைந்திருக்கும் சிற்ப,
சித்திர உருக்கள் எமது பண்பாட்டுப்
பாரம்பரியத்தினைக் குறிப்பது. (பத்மபேதி, பலாபெத்தி)

***ஹம்ச உருவம்*** :– எமது சமூகத்தின் அறிவது அறிந்து ஆன்று அடங்கிய நிலையினையும், ஆன்மீக அமைதியையும் காட்டி நிற்பது.

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது



# வித்தியா

R. Sivalingam's Books Collections
No : 6, Bunding's Road,
Batticaloa.
Date ................... No. ...................

இதழ் - 02
2000

R. Sivalingam's Books Collections
No : 6, Bunding's Road,
Batticaloa.
Date ................... No. ...................



வெளியீடு :
வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு.

# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு கல்விவலய அலுவலகத்தின் சஞ்சிகை வெளியீட்டுச் சங்கத்தினர் புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு முக்கியத்துவமளிக்கும் வகையில் **வித்தியா** சஞ்சிகையின் முதலாவது இதழை வெளியிட்டுள்ளமையை அறிந்து மிக மகிழ்ச்சியுற்றேன்.

கல்வி சார்ந்தோர், சிறந்ததேடல் உள்ளவர்களாகத் திகழ்ந்து தமது கருத்துமிக்க செயற்பாடுகளின் மூலம் பாடசாலைகளை அணுகும்போது தான் நமது எதிர்கால சந்ததியினரைத் தாம்வாழும் நடைமுறை உலகுக்குப் பொருத்தமான நற்பிரஜைகளாக வெளிக்கொணரமுடியும்.

மேலும் ஒவ்வொருவரும் தம்மிடையே ஒளிந்திருக்கும் ஆற்றலையும், ஆர்வத்தையும் வெளிப்படுத்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும்போதுதான் திறமைகளும் உணரப்படமுடியும். மாணவரிடையேயும், கல்வித்துறையைச் சார்ந்தோரிடையேயும் திறன்களை வளர்த்துக்கொள்ள சஞ்சிகை உறுதுணையாக அமைகிறது.

வித்தியாவின் இரண்டாவது இதழ், பல்கலைக்கழகக் கல்விமான்களின் கருத்துக்களையும், பாடசாலை மாணவர் ஆசிரியர், அதிபர்களின் எண்ணங்களையும் பகிர்ந்து கொண்டு வெளிவருவது அதன் சமூகமயமாக்கற் தன்மையைக் குறித்து நிற்கிறது.

மேலும், இச்சஞ்சிகை ஆழமான எண்ணக்கருக்களைச் செயற்படுத்தி ஆக்கபூர்வமான சிந்தனையைச் சிறப்பாக வெளிப்படுத்தி அழியாப்புகழுடன் என்றும் வளர எனது நல்வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் பெருமிதமடைகிறேன்.

**க. பரமேஸ்வரன்** (செயலாளர்)
வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
திருகோணமலை.

# வாழ்த்துச் செய்தி

கல்விச் செயற்பாடுகளைப் பொருத்தமான முறையில் முன்னெடுத்து விருத்திசெய்ய வேண்டும் என்ற பெருவிருப்புடன் வெளிவரும் "**வித்தியா**" சஞ்சிகைக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மட்டக்களப்பு கல்வி அலுவலக உத்தியோகத்தர்களின் கூட்டு முயற்சியால் இவ்வாண்டும் "**வித்தியா**" மலர்ந்திருக்கிறது. இம்மலர் வெளிவருவதற்கு உறுதுணையாக நின்று உழைத்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். காலத்தின் கஷ்டங்களைப் பொருட்படுத்தாது சமூக நலன் கருதி துணிச்சலுடன் இம்மலரினை வெளியிட்டுள்ளனர்.

கல்வித்துறை சார்ந்த பல விடயங்களை உள்ளடக்கிவரும் "**வித்தியா**" எமது சமுதாயத்தில் நல்ல தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. வாசிப்புப் பழக்கத்தினைத் தூண்டி எழுத்தாக்க உணர்வினை வெளிக்கொணரும் சக்தி இவ்வகைச் சஞ்சிகைகளுக்கு உண்டு.

கல்விச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் இக்கால கட்டத்தில் கல்விசார் விடயங்கள் பலவற்றையும் துல்லியமாக வெளிக்கொணரும் "**வித்தியா**" சமூக விழிப்புணர்வை ஏற்படுத்திக் கல்விச் செயற்பாடுகளைச் செவ்வனே முன்னெடுக்க உதவ வேண்டும்.

"**வித்தியா**" சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவந்து எமது சமூகவிருத்திக்கு உதவ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**இ. சிவானந்தன்**
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
வடக்கு கிழக்கு மாகாணம்.

மாகாணக் கல்வித்திணைக்களம்,
திருகோணமலை.



# வாழ்த்துச் செய்தி

*மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் **'வித்தியா'** சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினர் தமது சஞ்சிகையின் இரண்டாவது இதழை வெளியிடுவது மிகவும் பாராட்டுதற்குரிய விடயமாகும். இக்குழுவினருக்கு வழிகாட்டியாகவும், ஊக்குவிப்பாளராகவும் இருக்கும் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் **திரு. ஆர். மாணிக்கராஜா** அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.*

*எதிர்காலச் சந்ததியினர், நல்வளம் மிக்கவர்களாகவும், சமூகத்திற்குப் பொருத்தமானவர்களாகவும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து முன்னேற்றப்பாதையில் தொடர்ந்தும் காலடி வைக்கும் நற்பிரஜைகளாகவும் உருவாக வெறும் ஏட்டுக்கல்வியும் விதிக்கப்பட்ட பாடநெறியும் மட்டும் நிச்சயமாகப் போதவேபோதாது. இவற்றிற்கு மேலாக, நடைமுறை உலகோடு சமமாக இயங்கும் மனத்திறனும், சவால்களைச் சமாளிக்க வேண்டிய புத்தாக்க சிந்தனைகளும், பாடசாலை மாணவர்களிடையே இலகுவாக அமைவதற்கு வேண்டிய வழிகாட்டலும், பயிற்சியும் அவசியமாகும். இந்த வகையில் சஞ்சிகை வெளியீடுகள் அந்நோக்கங்களை அடைவதற்குரிய ஊக்குவிப்பு கருவிகளாக அமைகின்றன.*

*பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக அமைந்து, மாணவரது சிந்தனாசக்தியை அபிவிருத்திப் பாதையிலிட்டுச் சென்று நற்பிரஜைகளை உருவாக்கும் முயற்சியிலீடுபடும் **'வித்தியா'**வின் சமூகப்பணி வெற்றி பெறவும், மேலும், மேலும் புத்துணர்ச்சியுடன் சிறப்புற்றோங்கவும், தொடர்ந்தும் இச்சஞ்சிகை வெளிவர வேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, வாழ்த்துச் செய்தி அளிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.*

**திரு. ஆ. குணராஜரெட்ணம்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மட்டக்களப்பு மாவட்டம்.



# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு கல்வி வலய அலுவலகத்தின் சஞ்சிகை வெளியீட்டுச் சங்கத்தினர் '**வித்தியா**' சஞ்சிகையின் இரண்டாவது இதழை வெளியிடுவது குறித்து மனமகிழ்ச்சியடைவதோடு சங்கத்தினரை வெகுவாகப் பாராட்டுகிறேன்.

காலத்தின் தேவைக்கேற்ற வகையில் கல்வி மேம்பாட்டை ஆக்கபூர்வமான முறையில் வழிப்படுத்தும்போது, சமூகத்தின் விருப்பு வெறுப்புக்களையும் தெளிவுற உணர்ந்து கொள்வது கல்வி வளர்ச்சியை வளப்படுத்தும். '**வித்தியா**' தனது இரண்டாவது இதழில் பல்கலைக்கழக கல்வியியலாளர்களதும், பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்களதும் எண்ணங்களையும் தாங்கி வருவது வரவேற்கத்தக்கதாகும்.

எதிர்கால சமுதாயத்தை ஒழுங்குபடுத்திக் கட்டி எழுப்ப வேண்டிய பாரிய பொறுப்புக்களைச் சுமந்து நிற்கும் கல்விச்சமூகம் தனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் மேன்மையான கருத்துக்களையும், புத்தாக்கச் சிந்தனைகளையும் ஏற்படுத்தக் கூடியதாகச் சேவையாற்ற வேண்டியது அவசியமாகும்.

'**வித்தியா**' சஞ்சிகை வெளியீடு இக்கருத்தை வலியுறுத்துவது கண்டு மகிழ்வடைகிறேன். மேலும், பலவழிகளிலும் சிறப்புற்றோங்கி இச்சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவர வேண்டுமென வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**இ. மாணிக்கராஜா**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
மட்டக்களப்பு.

# மட்டக்களப்பு கல்வி வலயம் சஞ்சிகை வெளியீட்டுச் சங்கம்

## செயற்குழுவினர்

**காப்பாளர் : திரு. ஆர். மாணிக்கராஜா** (வலயக் கல்விப்பணிப்பாளர், மட்டக்களப்பு)



*இடமிருந்து வலமிருப்பவர் :*

**திருமதி. எம். சிவரெட்ணம்** இதழாசிரியர்
(உதவிக் கல்விப்பணிப்பாளர் - மனிதவள அபிவிருத்தி)

**திரு. ஏ.எம்.ஈ. போல்**
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், கல்வி திட்டமிடல்)

**திரு. ஆர். மாணிக்கராஜா -**
சங்கத்தின் காப்பாளர் (வலயக் கல்விப்பணிப்பாளர்)

**திரு. எஸ். சரவணபவான் -** சங்கத்தின் தலைவர்
(பிரதி வலயக்கல்விப் பணிப்பாளர்)

**திரு. எம். சிவநேசராசா -** கணக்காளர்

*நிற்பவர் :*

**திரு. கே. பாஸ்கரன் -**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்)

**திரு. எஸ். ஸ்ரீகிருஷ்ணராஜா -**
சங்கத்தின் செயலாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)

**திரு. த. யுவராஜன் -**
(செயற்றிட்ட உத்தியோகத்தர்)

**திரு. ஏ. நூர்முகம்மது -**
சங்கத்தின் பொருளாளர் உதவிக்கல்விப் பணிப்பாளர்

**திரு. வி. தங்கத்துரை -**
உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்)

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்.

# பொருளடக்கம் . . .


| | பக்கம் |
|---|---|
| இதழாசிரியர் எண்ணத்திலிருந்து | |
| 1. மனப்பாங்குகள் அபிவிருத்தி அடையுமா? | 07 - 09 |
| 2. மட்/ மாவட்டத்தில் மட்டக்களப்பு கல்வி வலயமும், விபரங்களும் | 10 - 12 |
| 3. கற்றல் கற்பித்தற் செயற்பாட்டை மேம்படுத்து . . | 13 - 14 |
| 4. The Role of RESC | 17 - 18 |
| 5. ஆரம்பப்பிரிவு முகாமைத்துவம் - விடய ஆய்வு | 19 - 20 |
| 6. பாடமேம்பாடும் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளும் | 21 - 23 |
| 7. குறுக்கெழுத்துப்போட்டி - (கணிதம்) | 24 |
| 8. Education for Life | 25 |
| 9. புதிய கல்விச் சீர்திருத்தத்தில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 26 - 27 |
| 10. பரதநாட்டியம் | 28 |
| 11. நவயுக மாணவர் நாங்கள் - (கவிதை) | 29 |
| 12. மட்டக்களப்புப் பிரதேசப் பாடசாலைச் சஞ்சிகைகள் ஒரு கண்ணோட்டம் | 30 - 32 |
| 13. புதிய கல்விச் சீர்திருத்தத்தில் வாழ்க்கைத் தேர்ச்சிகள் | 33 - 34 |
| 14. உடற்கல்வியின் முக்கியத்துவம் | 35 - 36 |
| 15. நீண்ட பயணத்தை நம் சூழலிலிருந்து ஆரம்பிப்போம் | 37 - 40 |
| 16. தமிழ் இலக்கியமும் பெண்ணுரிமையும் | 41 - 44 |
| 17. அரசசேவையில் லீவு பெறுவதெப்படி? | 45 - 46 |
| 18. ஒரு மழலையின் விண்ணப்பம் - (கவிதை) | 47 |
| 19. முத்தமிழ் வளர்ச்சியில் கணனியின் பங்களிப்பு | 48 - 49 |
| 20. ஆசிரியர் நிலையம் வழங்கும் தொடருறு கல்வி | 50 |
| 21. முரண்பாடு தீர்வுக்கல்வி - (சென்ற இதழ் தொடர்ச்சி) | 51 - 53 |
| 22. ஒரு இலக்கியத்தின் தோற்றம் | 54 - 55 |
| 23. திரு. எஸ். எஸ். மனோகரன் ஐயா சேவையின் வழியே . | 56 |
| 24. நினைவில் நிறுத்துவோம் | 57 |
| 25. நன்றி உளமார்ந்த நன்றி | 58 |

*இதழாசிரியர் எண்ணத்திலிருந்து . . .*

# மனப்பாங்குகள் அபிவிருத்தி அடையுமா?

மனித வளமானது அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றின் சேர்க்கை ஒரே சீராக அமையும்போது ஆரோக்கியமான ஆளுமையைப் பெற்றுக்கொள்கிறதெனலாம்.

- பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு, பாடசாலை, கல்லூரி ஆகியவற்றின் பரீட்சைகளுக்குத் தயார்ப்படுத்தல், கற்றோர், பெரியோர் கருத்துகளுக்குச் செவிசாய்த்தல், பொதுவாசிப்பு, அனுபவங்கள் முதலிய ஊடகங்கள் வாயிலாக அறிவு ஏற்படுகிறது. அறிவுடையதாக மனிதவளம் கணிக்கவும் படுகிறது.
- பிள்ளைகளிடம் இயற்கையாகவே சகல திறமைகளும் அமைந்திருந்தபோதும், சுய ஆர்வத்தினாலும், பயிற்சியினாலும், சந்தர்ப்பங்கள் / வாய்ப்புகள் கிடைக்கும் போது அவை விசேடமாக வெளிக் கொணரப்படுகின்றன. திறனோடு கூடியதாக திறமையுடையதாக மனிதவளம் போற்றப்படுகிறது.
- இவையிரண்டுமோ அல்லது ஒன்றோ அமைந்திருந்தாலும் கூட மனப்பாங்குகள் ஒழுங்குபெறாவிடின் மனிதன் சிறந்ததொரு வளமாக கொள்ளப்படாமலோ செயற்பட முடியாமலோ இருக்க வேண்டிய நிலை உருவாகிறது.
- கற்றோரும் திறமைசாலிகளும் சமுகத்தில் பல தொல்லைகளை ஏற்படுத்திய அநேக சந்தர்ப்பங்களுக்கும் கூட அவர்களது மனப்பாங்குகள் சரிவர நிலைப்படாததையே மிகமுக்கிய காரணமாகக் கருதவேண்டியுள்ளது.
- மனம்போன போக்கில் போகாது நிதானத்தை அவ்வப்போது கடைப்பிடிப்பதனால் சிந்தனையும் செயலும் சரியாகவும் தெளிவாகவும் அமைய அதிக வாய்ப்புண்டு.

மனிதவளம் ஒழுங்குபெறுவதற்கான ஆரம்பக்காலம் பாடசாலை என்றே கூறலாம். ஒரு பிள்ளை வீட்டில் தனது பெற்றோருக்கும் உற்றாருக்கும் பெறுதற்கரிய பெருஞ் செல்வம் பிள்ளையின் மழலைமுதல் அது செய்யும் எல்லாவிதத் தொல்லைகள் குறும்புகள் ஈறாக அவற்றில் திறமையையும் முழுத்திருப்தியையுமே பெற்றோர் கண்டு பூரித்திருப்பர். பிள்ளை பாடசாலையில் தன்னைப்போல் இன்னும் பலருடன் சேர்ந்து, ஆசிரியரின் வழிகாட்டலோடும் தன்னை இயைவுபடுத்த வேண்டிய கட்டாயத்திலுள்ளது. இச்சந்தர்ப்பத்தில்தான் பிள்ளை சிறந்த மனிதவளமாக அபிவிருத்தி செய்யப்படும் சூழல் உருவாகிறது. இதற்கான முழுப்பொறுப்பும் அல்லது மிக அதிகமான பங்குபொறுப்பும் ஆசிரியரையே சார்ந்ததாகும்.

- பிள்ளையைச் சிறந்த ஆளுமைகொண்ட மனிதவளமாக வெளிக்கொணர்வதில் நல்ல மனப்பாங்குகளை வளர்த்தலென்பது கணிசமான இடத்தினை வகிக்கிறது. பாடசாலைக் காலத்தில் சிறுபராயம் முதல் பாடத்தோடு மனப்பாங்குகளையும் ஒன்றரக்கலந்து ஊட்டவேண்டும்.
- குழந்தைகளுக்குக் கல்வியோடு சேர்த்துப் புகட்டவேண்டிய மனப்பாங்குகள் எவையென்பது பற்றிய தெளிவான எண்ணம் ஒவ்வொரு ஆசிரியப் பெருந்தகைக்கும் தெரிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். சாதாரணமாக, பயிற்சிக்கலாசாலையிலும், பட்டப்பின்படிப்பின் போதும் ஏனைய பாடவிதான கருத்தரங்குகளிலும் அறிவு, திறன், மனப்பாங்கு பற்றித் தப்பாமல் பேசப்படுவதைக் கேட்பதோடும், அதுபற்றிய குறிப்புகள் எடுத்துக் கொள்வதோடும் எமது ஆசிரிய சமுகத்தின் பெரும்பாலானோர் மனப்பாங்கு என்பதனை விட்டுவிடுகின்றனர்.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீத்தல் அரிது.

❄ கற்றல் / கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமிடத்து எமது ஆசிரியர்கள் மரபுவழி செயற்பாடுகளைத் திரும்பத் திரும்ப செயற்படுத்துவதற்கான நிலையிலுள்ளனர். தேவையேற்படுமிடத்து புத்தாக்கங்களை ஏற்றுக் கொள்ளும் மனநிலையினை வளர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக கற்றல் / கற்பித்தல் நடவடிக்கைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களை நுணுக்கமாக அவதானிக்க வேண்டும்.

❄ செயற்பாட்டுக் கற்பித்தல் முறைகள், பாடசாலைக் கணிப்பீட்டுக் கலாசாரம், பாடமேம்பாட்டுச் செயற்பாடுகள் சுயமாகக் கற்றல் ஆகியவற்றை முதலில் ஆசிரியர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள முன்வரவேண்டும். அதற்கான மனப்பாங்கினை தன்னுள்ளே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

❄ புதுச் சூழல்களைத் தொல்லை தருவனவாகவோ, சுமை ஏற்றுவன வாகவோ, அல்லது ஆற்றமுடியா தனவாகவோ உருவகப்படுத்தக் கூடாது ஆசிரியர் மிகவும் தெளிந்த மனநிலையில் மகிழ்ச்சியாகவும் எதையும் முயன்று சாதிக்கலாமென்ற எண்ணத்தினை தன்னுள் வளர்ப்பதோடு சக ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோரிடத்தும் ஏற்படுத்தும் கருவியாகவும் விளங்கவேண்டும்.

❄ மாணவர்களது வீட்டுச் சூழல்பற்றியும் ஆசிரியர் ஓரளவு அறிந்து அதற்கேற்ப தனது வழிநடத்தல்களை இயைவு படுத்திக்கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது. குடும்பநிலை, பொருளாதார நிலை, சமூகச்சூழ்நிலை ஆகியன மாணவரது மனதில் தாக்கங்களை ஏற்படுத்துவதில் கூடியளவு செல்வாக்குச் செலுத்துகின்றன. இவைபற்றிய தெளிவான நிலையினை ஆசிரியர் அறிந்து கொள்வது மாணவரது மனப்பாங்கு விருத்தியில் அவரது முயற்சிகள் வெற்றிபெற உதவும். ஆசிரியர் மனம்வைத்தால் ஒரு பாடசாலையிலிருந்து எத்தனையோ நற்பிரசைகளை வெளியீடு செய்யமுடியும்.

### மனப்பாங்குகள் எவை?

❄ எல்லாம் வல்ல இறைவனை வணங்குதல், தன்னையும் தனது சூழலையும் தூய்மையாகப் பேணுதல், பெற்றோரையும் பெரியோரையும் கனம் பண்ணுதல், ஆசிரியர்களின் நல்லாசி களைப் பெறுதல், பிறர் கருத்துகளுக்கு மதிப்பளித்தல், நியாயமானவற்றை ஏற்றுக்கொள்ளல், விட்டுக்கொடுத்தல், உதவிசெய்தல், ஆதரவளித்து அன்புடன் பழகுதல், தன்னைப்போல் பிறரையும் நேசித்தல், ஊக்குவித்தல், சுறுசுறுப்புடன் இயங்குதல், கோபத்தை அடக்கல், பிறரிடம் இரக்கம் காட்டுதல், நிதானமாக கருமங்களை கடைப்பிடித்தல் எதனையும் தெளிவாக அறிவதில் ஆர்வம்காட்டல் பண்பாகப் பேசிப் பழகுதல், ஒழுங்குடன் கட்டுப்பாடாக இருத்தல்,

**சரியான முடிவுகளை விரைவாக எடுக்கும் திறனை வளர்த்தல்.**

❄ நல்ல மனப்பாங்குகளை மாணவ சமுதாயத்திடம் / எதிர்கால நற்பிரசை களிடம் விதைப்பதிலும் வளர்ப்பதிலும் ஆசிரியர்களுக்குக் கூடியளவு வாய்ப்பும் பங்குமுள்ளது. பொதுவாக ஆசிரியர் களைப் பிள்ளைகள் மற்றெல்லோரையும் விட மேலாக மதிக்கிறார்கள். அவர்கள் சொற்களுக்குக் கூடியளவு செவிசாய்க் கிறார்கள். அவர்களைப் பின்பற்ற ஆசைப் படுகின்றனர். ஆகவே மாணவர்களது ஆரம்பநிலைக் கல்வியினூடாகவே பாடசாலை வாழ்க்கையின் தொடக்க நிலையிலேயே நல்ல மனப்பாங்குகள், மாணவர் அறியாமலேயே சாதாரண பழக்கவழக்கங்களாக ஆசிரியர் வாயிலாக விதைக்கப்பட்டு வளர்க்கப்படவேண்டும்.

### ஆசிரியர் இதனை எவ்வாறு ஆக்க பூர்வமாகச் செயற்படுத்தலாம் :

❄ நல்ல முன்மாதிரிகளை மாணவர் முன்னிலையில் வைப்பதன்மூலம்

❄ ஆசிரியரின் எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் முரண்பாடு ஏற்படாத வகையில் செயற்படுவதன் மூலம்.

- நடத்தையில் அர்ப்பணிப்பு தியாகம், கட்டுப்பாடு முதலிய நற்பண்புகளை வெளிப்படுத்துவதன் மூலம் (ஆசிரியர் தனது செயன்முறையை கடமையாகக் கொள்ளாது சேவையாகக் கொள்வதன் மூலம்)
- சுறுசுறுப்பாக இயங்குபவராக / இனிய வார்த்தைகள் பேசுபவராக / ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிப்பவராக அன்புடனும் ஆதரவுடனும் பழகுபவராக தோற்றமளிப்பதன் மூலம்
- நல்ல மனப்பாங்குகளைத் தினமும் அவ்வப்போது மாணவர்களுக்குச் சொல்வதன் மூலம்
- நல்ல சூழ்நிலைகளை உருவாக்குவதன் மூலம்
- சிந்தனையைத் தூண்டக்கூடிய செயற்பாடுகளைத் தோற்றுவிப்பதன் மூலம்

**நல்ல மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்வதற்கான பாடசாலைச் சூழல்கள் எவை?**

- ஒன்றுகூடல்கள்
- பயன்மிக்க களியாட்டங்கள், கலை கலாசார நிகழ்வுகள் பொருத்தமான வகையில் அமைத்தல்
- சமய சம்மந்தமான விழாக்களையும், பெருநாட்களையும் நினைவுபடுத்தும் நிகழ்வுகளையும் ஏற்படுத்தல்.
- பொதுச்சேவையாற்றியோர் / சரித்திரப்புகழ் மிக்க பெரியோர் சான்றோர் / வாழ்க்கை வரலாறுகளையும் அவர்கள் உலகுக்கீந்த நல்ல கருத்துகளை அறியப்படுத்தல்.
- எந்த நிகழ்வையும் மாணவர்களையே பொறுப்பேற்கச் செய்தல்.
- சிரமதான நிகழ்வுகளை ஏற்படுத்தல்

மனப்பாங்குகள் பிள்ளைகளிடத்து சிறந்த ஆளுமையை அமைப்பதில் அதிமுக்கிய பங்களிப்புச் செய்து மனிதவளத்தைச் சிறந்தொரு தொழில் நுட்பமாக உருவாக்கவல்லது என்பதனாலோ என்னவோ புதிய கல்விச் சீர்திருத்தங்களில் இந்த மனப்பாங்குகளுக்கு விசேடமான அழுத்தம் கொடுக்கப்பட்டு ள்ளமையைக் கண்டு பூரிப்படைகிறோம்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆


## ஆரம்பக்கல்வி உபகரணத் தொகுதிகள்

*இவ்வாண்டில் மாகாணக் கல்வித் திணைக்களம் மூலம் ஒதுக்கப்பட்ட 14 ஆரம்பக்கல்வி உபகரணத் தொகுதிகள் ஆரம்பக்கல்வியை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லும் பாடசாலைகளுக்கும், கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.*

# மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் பணிக்கூற்று

வடக்கு கிழக்குக் கல்வி அமைச்சின் கொள்கைகளுக்கு அமைவாக மாகாணக் கல்வித்திணைக்களத்தால் வழங்கப்படும் வளங்களையும் சேவைகளையும் பயன்படுத்தி தொலைநோக்கோடு திட்டமிட்டு, செயற்பாடுகளை அமுலாக்கி, மேற்பார்வை செய்து அரச கல்வித்துறையில் உச்சப்பயன்பாட்டினை எய்தும்வகையில் கற்ற பயன்மிக்க ஒழுக்கமும் நன்நோக்குமுடைய நற்பிரசைகளைக் கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்கல்.

## மட்டக்களப்பு மாவட்ட வரைபடத்தில் மட்டக்களப்பு கல்வி வலயம்




1. ஏறாவூர்ப்பற்று
2. ஏறாவூர் நகரம்
3. மண்முனை மேற்கு
4. காத்தான்குடி
5. மண்முனைப்பற்று
6. மண்முனை வடக்கு

## Batticaloa Educational Zone - 2000

| Division | No. of Schools | No. of Students | No. of Teachers | Students } RA<br>Teacher } TIO |
|---|---|---|---|---|
| Eravur Pattu | 22 | 5115 | 176 | 1:29 |
| Eravur Town | 10 | 7838 | 251 | 1:31 |
| Manmunai North | 41 | 21068 | 844 | 1:25 |
| Kattankudy | 16 | 8351 | 270 | 1:31 |
| Manmunai Pattu | 22 | 6113 | 279 | 1:22 |
| Manmunai West | 24 | 4524 | 162 | 1:28 |
| Total | 135 | 53009 | 1982 | 1:27 |

## School Type According to the Student Population in Batticaloa Zone - 01.06.2000

| Students No. | 1 AB | 1 C | Type - II | Type - III | Total |
|---|---|---|---|---|---|
| 1 - 50 | | | | 10 | 10 |
| 51 - 100 | | | 1 | 18 | 19 |
| 101 - 200 | | | 5 | 36 | 41 |
| 201 - 300 | | | 8 | 4 | 12 |
| 301 - 400 | | 1 | 5 | 2 | 8 |
| 401 - 500 | | 3 | 4 | | 7 |
| 501 - 600 | | 3 | 2 | 1 | 6 |
| 601 - 700 | | 5 | 3 | | 8 |
| 701 - 800 | | 2 | 3 | | 5 |
| 801 - 900 | | 2 | 1 | | 3 |
| 901 - 1000 | | 3 | | 1 | 4 |
| 1001 - 1250 | 4 | | | | 4 |
| 1251 - 1500 | 1 | 2 | 1 | | 4 |
| 1501 - 2000 | 2 | | | | 2 |
| 2001 - 2500 | 1 | | | | 1 |
| 2501 - < | 1 | | | | 1 |
| Total | 9 | 21 | 33 | 72 | 135 |

## Relationship between type of school and the student population in Batticaloa Educational Zone.

| Type of Schools | Student Population |
|---|---|
| 1 AB | more than 1000 students |
| 1 C | Between 300 and 1500 Students |
| II | Varies from 50 to 900 Students except one school with 1250 students |
| III | less than 100 in 28 schools |

**A.M.E. Paul** DDE (PL) (Planning Unit, Zonal Ed. Office. Batticaloa.)

## Staff Position - As at 2000.06.01
## Batticaloa Educational Zone

| Grade | In Schools | | | | In Office | | | | | | Grand |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Principal | Dy. Prin. | Sec. Head | Teacher | ZDE | Dy. De | ADE | Perf.ADE | ISA | Others | Total |
| SLEAS - II | 01 | | | | 01 | 02 | | | | | 04 |
| SLEAS - III | 02 | | | | | | 04 | | | | 06 |
| **Total** | 03 | 0 | 0 | 0 | 01 | 02 | 04 | 0 | 0 | 0 | 10 |
| SLPS - I | 08 | 01 | | | | | | 06 | | | 15 |
| SLPS 2 - I | 23 | 03 | | | | | | 03 | | 01 | 30 |
| SLPS 2 - II | 53 | 15 | 08 | | | | | 03 | | | 79 |
| SLPS - II | 03 | | | | | | | | | | 03 |
| SLPS - III | 07 | | 01 | | | | | | | | 08 |
| **Total** | 94 | 19 | 09 | 0 | 0 | 0 | 0 | 12 | 0 | 01 | 135 |
| SLTS - 1 | | | | 02 | | | | | 01 | | 03 |
| SLTS : 2 - I | 01 | | | 67 | | | | 04 | 06 | 02 | 80 |
| SLTS : 2 - II | 09 | | | 367 | | | | | 28 | 03 | 407 |
| SLTS : 3 - I | 26 | | | 1133 | | | | | 01 | 07 | 1167 |
| SLTS : 3 - II | 01 | | | 82 | | | | | | | 83 |
| **Total** | 37 | 0 | 0 | 1651 | 0 | 0 | 0 | 04 | 36 | 10 | 1740 |
| Graduate Trainee | | | | 27 | | | | | | | 27 |
| Teacher Trainee | | | | 142 | | | | | | | 142 |
| **Total** | 0 | 0 | 0 | 169 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 169 |
| **Grand Total** | 134 | 19 | 09 | 1820 | 01 | 02 | 04 | 16 | 36 | 13 | 2054 |

**A.M.E. Paul** DDE (Planning),
Planning Unit Zonal Education Office, Batticaloa.

## முகாமைத்துவ உதவியாளர்கள் நியமனம்

பொதுக்கல்விச் செயற்றிட்டம் IIஇன் கீழ் நூலக அபிவிருத்தி அதிகாரிகளாக நியமனம் பெற்ற 44 அதிகாரிகள் கடந்த செப்டம்பர் மாதம் தொடக்கம் முகாமைத்துவ உதவியாளர்களாக 44 பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அதிபரின் நிருவாக வேலைகள் அனைத்துக்கும் உதவியாக இருப்பர். இவர்களுக்கான கடமைப்பட்டியல் மாகாணக்கல்வித் திணைக்களத்தினூடாக அனுப்பப்பட்டுள்ளது.

*தகவல் :* **பிரதிக்கல்விப் பணிப்பாளர்** (கல்வி அபிவிருத்தி)

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.

# கற்றல் கற்பித்தற் செயற்பாட்டை மேம்படுத்துவது எப்படி? மாணவர், ஆசிரியர், அதிபர்கள் நோக்கில் சில குறிப்புகள்

**மா. செல்வராஜா** - கிழக்குப்பல்கலைக்கழகம்.

வகுப்பறைகளில் கற்றல், கற்பித்தற் செயற்பாட்டை மேம்படுத்தி வினைத்திறன் வாய்ந்த கற்றல் விளைவை ஏற்படுத்துவது கல்வி வளர்ச்சிக்கு அவசியமானது. வகுப்பறைகளில் கற்றல், கற்பித்தற் செயற்பாட்டை எவ்வாறு இலகுவாகவும், பயனளிக்கும் வகையிலும் ஏற்படுத்தலாம் என்பது தொடர்பாக ஒரு வினா மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலை மாணவர்களில் ஏறக்குறைய 250 பேரிடமும், 40 ஆசிரியர்களிடமும், 30 அதிபர்களிடமும் கேட்கப்பட்டது. அவ்வினாவுக்கு அவர்கள் அளித்த விடைகளை அடிப்படையாகக் கொண்டு அனுபவங்கள், உளவியல் கருத்துக்கள் சிலவற்றின் அடிப்படையில் கற்றல் - கற்பித்தலை மேம்படுத்துவதற்கான சில குறிப்புகள் இங்கு தரப்படுகின்றன.

## கற்றலுக்கான அடிப்படைத் தேவைகள்

கற்கும் சூழலில் சில அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படல் அவசியம். இதில் வகுப்பறையின் பௌதிக ஒழுங்கு, மாணவர் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், சுய மதிப்பீடு என்பன சில. வகுப்பறைகள் இடநெருக்கடி உள்ளதாகவும், காற்றோட்ட வசதி அற்றதாகவும் இருப்பின் மாணவர் கற்கக் கூடிய உள, உடல் கவி நிலையைப் பெறுதல் முடியாது. வசதியுள்ளபோது கற்கும் இடங்களை மாற்றிக் கொள்ளலாம். பாடசாலைகள் கலந்துரையாடல்களை மேற்கொள்ளக் கூடிய விசாலமான அறைகள், ஆய்வுகூடம், நூல்நிலையம் என்பனவற்றை கொண்டிருக்கலாம். அவ்வாறான வசதியுள்ள போது அவற்றை பயன்படுத்துவது மாணவர்களுக்கு உடல் அசைவு, சௌகரியம் என்பவற்றை ஏற்படுத்தும். சிறிய வகுப்பறையில் ஒரே பாங்கில் இருப்பதால் மாணவர்கள் களைப்படைவதுமுண்டு. பாடசாலை வளவினுள் காணப்படக் கூடிய மரநிழல்களையும் வசதியுள்ளபோது குழுக் கலந்துரையாடலுக்கு உபயோகிக்கலாம்.

இதுபோன்றே மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே உள்ள உறவு மிக முக்கியமானது. நல்ல உறவு எப்பொழுதும் நல்ல கல்விச்சூழலை ஏற்படுத்தும். ஆசிரியர்களைக் கனம் பண்ணுதல் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகல் என்பவற்றால் மாணவர் தமது புற ஊக்கலைப் பெற்றுப் பயில வாய்ப்புண்டாகின்றது. ஆசிரியர் - மாணவர் முரண்பாடு எந்த வகையிலும் அனுமதிக்கப்பட முடியாத ஒன்று. முரண்பாடு எப்பொழுதும் கல்வி முன்னேற்றத்திற்குத் தடையாக அமையக் கூடியது. சுயஊக்கல், சுயமதிப்பீடு, தெளிவான குறிக்கோள் என்பன மேலும் கற்றல் கவிநிலையை உயர்த்தும் அம்சங்களாகும். ஆசிரியர்கள் கற்றல் சூழலை உருவாக்குவதற்குப் பிரதானமாகக் கைக்கொள்ள வேண்டிய ஓர் அம்சம் ஊக்கற்கோட்பாடுகளை மாணவர்களிடம் பிரயோகிக்க முயல்வதாகும். கற்றல் கோட்பாடுகளையும், ஊக்குவித்தல் நுட்பங்களையும் உபயோகித்து மாணவர்களிடம் எவ்வாறு ஊக்கத்தை அதிகரிக்கலாம் என்பதை ஆசிரியர்கள் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டும். இதற்காக மாணவர்களைத் தனித்தனியாக விளங்கி அவர்களது அடைவுநிலை, அவர்களது நாட்டம்

உவப்பத் தலைக்கூடி உள்ளப்பிரிதல்
அனைத்தே புலவர்தொழில்.

என்பனவற்றை அடிப்படையாக வைத்து ஊக்குவிப்பு நுட்பங்களை மேற்கொள்ள வேண்டும். மாணவர் மனச்சோர்வுறும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுவதால் இதனை ஒரு பிரதான அம்சமாக ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டும்.

## நூலக வசதியும் பிற பௌதிக வளங்களும்

கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதில் பிரதானமாகக் கொள்ள வேண்டியது பாடசாலை நூலகமாகும். தேடிக்கற்றல், சுய கற்றல் போன்ற கற்றல் முறைகளை மாணவர்கள் மேற்கொள்வதற்காக அதிபர், ஆசிரியர்கள் நூலகத்தை விருத்தி செய்து கொடுப்பது அவசியம். இதற்காக நியமிக்கப்பட்ட நூலக அபிவிருத்தி உத்தியோகத்தரை முழுமையாகப் பயன்படுத்தி இவ்வசதியை ஏற்படுத்த வேண்டும். நூலக வசதியைப் பொறுத்தே மாணவர்களது கற்றல் மேம்பாடடைய முடியும். பாடசாலைக்கு "**இன்ரநெற்**" தொடர்புள்ள கணனி வசதிகளையும் ஏற்படுத்தும் சாத்தியப்பாடுகளையும் பாடசாலை அதிபர்கள் சிந்தித்தல் நன்று. ஒப்படை செய்வதில் தகவல்களைப் பெறுவது சில மாணவர் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகக் கூறுகின்றனர். குறிப்பாக க.பொ.த சாதாரண தரம், உயர்தர வகுப்பு மாணவர்கள் பொது அறிவு, பொது உளச்சார்புப் பாடங்கள் கற்பிக்கப்படுவதில்லையாதலால் அவற்றை மாணவர்களே கற்க வேண்டியுள்ளது. பல மாணவர்கள் பொது உளச்சார்பினைக் கற்க நூல்கள் தட்டுப்பாடாக இருப்பதைப் பிரச்சினையாகக் குறிப்பிடுகின்றனர். ஆகையால் நூலக அபிவிருத்தி முன்னுரிமை கொடுக்க வேண்டியதொன்றாகவுள்ளது. இது போன்றே விஞ்ஞான கூடம், மனையியல் கூடம், விவசாயப்பாடத்தைக் கற்பதற்கான வசதிகள் போன்ற பௌதிக வசதிகளும் பாடசாலையால் வழங்கப்பட வேண்டியவை. இருக்கும் வளங்களும் முழுமையாகப் பயன்படுத்தப்படாத நிலை பாடசாலைகளில் உண்டு. சில இடைநிலைப் பாடசாலைகளில் விஞ்ஞான உபகரணங்கள் உடைந்து விடும் என்ற காரணத்திற்காகவோ அன்றி காணாமற் போய்விடும் என்ற காரணத்திற்காகவோ ஆசிரியர்களாலும், அதிபர்களாலும் பயன்படுத்தப்படாமல் பூட்டி வைக்கப்பட்டிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## சில கற்கும் முறைகள்

❊ செயல்மூலம் கற்பது விருப்பமானதும் பயனளிப்பதும் என்பது மாணவர்களது தொகையில் 60% க்கு மேற்பட்டோர் புலப்படுத்திய துலங்கலாகும். செயற்பாட்டுடன் கூடிய கற்றல் – கற்பித்தல் ஒன்றுக்கு மேற்பட்ட புலன்களைத் தொடர்புபடுத்துவதாக விளக்கமான கற்றல் ஏற்படுகின்றது என்பது மாணவர்களது கருத்தாக காணப்பட்டது.

❊ மாணவர் சிறு சிறு குழுக்களாக இருந்து கற்பதிலும் விருப்பம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். மாணவர்கள் தம் சக பாடிகளுடன் கலந்துரையாடிக் கற்கும்போது தமது நண்பர்களிடம் தயக்கமின்றித் தமது சந்தேகங்களைத் தெளிவாக்கிக் கொள்வர். மேலும் நண்பர்கள் அவருக்கு உகந்த முறையில் விளக்கத்தை ஏற்படுத்தவும் முடியும். இதில் நட்பு சார்ந்த அம்சம் இருப்பதால் பயம், தயக்கம் என்பன இன்றிக் கற்கும் ஒரு சூழல் காணப்படுகின்றது.

❊ இன்று நடைமுறையில் இருக்கும் தேடிக் கற்றல், ஒப்படைமுறை, செயல்திட்டம் என்பனவற்றை மாணவர்களில் பலரும் வரவேற்பதை அவர்களது விடைகள் புலப்படுத்துகின்றன. இத்தகைய முறைகளால் தமது அறிவு விசாலமடைவதாகக் கூறும் மாணவர்கள் இவற்றில் நேரம் சற்று அதிகமாகவே செலவாகின்றதென்றும் கூறினர். அத்துடன் இவற்றில் பணச்செலவும் இருப்பதால் வறிய மாணவர்கள் இடர்

படுவதாகவும் தெரிவித்தனர். பல மாணவர்கள் படிப்பதற்குத் தமக்கு நேரம் போதாதெனக் கூறியுள்ளனர்.

❀ நேரம் தொடர்பாக மாணவர்கள் கவனம் எடுத்தல் அவசியம். நேரத்தை சேமிக்க முடியாத தாகையால் தற்போதைய நேரத்தை மிகவும் திறனுள்ள வகையில் பயன்படுத்து வது அவசியமா கின்றது. பொதுவாக வீடுகளில் கற்கும்போதும் பாடசாலை வேளைகளில் கற்கும் போதும் தமக்குரிய மிகச்சிறந்த (பயன் கூடிய) நேரத்தை அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதனை (Prime Time) என அழைப்பர். இத்தகைய நேரம் பலருக்கு அதிகாலையாக இருக்கலாம். அல்லது முற்பகலாக இருக்கலாம். அல்லது நடுச்சாம மாகவும் இருக்கலாம். இது ஒவ்வொருவருக்கும் வித்தியாசப் படும். சிலர் நடு இரவில் விழித்துக் கற்பர். வேறு சிலர் முன் உறங்கி அதி காலை எழுந்து கற்பர். சிலர் பிற்பகல் 8 மணியில் இருந்து தொடர்ந்து இரவு 1 மணிவரை கற்றுத் துயில்வர். இதில் ஒருவர் இன்னொருவரைப் பின்பற்ற முடியாது அவரவர்க்குப் பொருத்தமான நேரத்தை அவரவரே இனம் கண்டு பயன்படுத்த வேண்டும். இந்த முறையினால் 20 % மான நேரத்தில் 80 % மான கற்கும் பணியை பூர்த்தி செய்ய முடியும் எனக் கொள்ளப்படுகின்றது.

❀ கற்றலைப் பயனுள்ளதாக்கும் இன்னொரு முறை வினாவிடை முறையாகும். இதனைப் பல மாணவர்கள் வரவேற்பதாகக் காணப்படுகின்றது. இதனை உளவியலில் நிரப்பல் விதி. என்று அழைப்பர். இம்முறை மிக நீண்ட காலமாகவே சிறந்த கற்றல் முறையாகப் பின்பற்றப்பட்டு வரு கின்றது. நமது பாடசாலைகளில் இம்முறை பெரிதும் விரும்பப் படுகின்ற முறையாகக் காணப்படு கின்றது. வகுப்பறைக் கற்றலில் இம்முறை மாணவர் ஆசிரியர் தொடர்பான கற்றல் செயற்பாட்டிலும், மாணவர்களுக்கிடையே மேற் கொள்ளப்படும் கற்றல் செயற் பாட்டிலும் ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

❀ கற்பதில் பிறிதொரு முறை கற்ற விடயத்தை படமாக / சித்திரமாக உருவகித்துக் கொள்ளல் ஆகும். இன்று மாணவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்வதில் சிரமம் அடைவதாகக் கூறுகின்றனர். ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன. இதற்காகக் கற்கும் விடயங்களை தமது மனதிற்குப் பிடித்த வகையில் உருவகப்படுத்திப் பழகுதல் நன்று. ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய விடயங் களைத் தமது படிப்பறையில் எப்பொழுதும் பார்வைக்குப் படக் கூடிய இடங்களில் எழுதி ஒட்டி விடுவதும் நன்று. படித்தவற்றை மனதில் மீள் ஒழுங்குபடுத்திக் கொள்ளல், ஏற்கனவே உள்ள அறிவுடன் புதிய அறிவை இணைத்துக் கொள்ளல் என்பனவும் ஞாபகத்தில் வைத்திருக்கக் கூடிய சில முறைகளாகும். மாணவர் தமது குறிப்புப் புத்தகங்களில் நிறங்களை உபயோகித்தல், முக்கிய விடயங்களைச் சிவப்புக் கோடுகளால் அடையாளம் பண்ணல் என்பனவும் பலராலும் பின்பற்றப்படுகின்ற சில முறைகள்.

❀ சுயமாகத் தேடிக்கற்கும் விடயங்கள் அவர்களது அனுபவத்துடன் இணைந்து மறக்க முடியாத விடயங்களாகின்றன. சுய தேடலை மாணவர்கள் வரவேற்கின்றனர். இத்துடன் களவேலைகளையும் பெரிதும் விரும்புகின்றனர். இவை அனுபவங்களுடன் தொடர்புபட்டுக் கற்றலை மேம்படுத்துவனவாக

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு.

அமைகின்றன. ஆனால் கள வேலைகள் சூழ்நிலையைக் கவனத்திற் கொண்டு ஆசிரியர்களது மேற்பார்வை, வழிகாட்டல் என்பனவற்றுடன் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். இத்தகைய முறைகளில் கற்பது மாணவர்களிடம் தன்னம்பிக் கையையும் வளர்க்கும். இப்பண்பு உயர்கல்வியை நோக்காகக் கொண்டவர்களுக்கு ஆய்வு ஊக்கத்தைத் தரும்.

## ஆசிரியர்களும் அதிபர்களும்

❊ ஆசிரியர்களும் அதிபர்களும் மாணவர்களது கல்வி தொடர்பான தேவைகளை அறிந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பவர்களாக, அவர்களது கற்றலில் ஏற்படக் கூடியதாக தடைகளை நீக்கு பவர்களாக விளங்குதல் வேண்டும். ஆசிரியர்கள் தொடர்ந்து புதிய கற்பித்தல் முறைகளை உருவாக்கு பவர்களாகவும் இருக்க வேண்டும். இதற்காக மாணவர்கள் கற்கும் முறைகள் தொடர்பான செயற்பாட்டாய் வினை (Action Research) வகுப்பறை களில் சிறியளவில் மேற்கொள்ளலாம். இது உரையாடல் மூலமும் இடம்பெறலாம். பெரிதாக நேரத்தை எடுக்கும் ஆய்வாக இருக்க வேண்டியதில்லை. புதிய சீர்திருத்தத்தை ஒட்டி இவ்வாய்வு முறையைத் தேசிய கல்வி நிறுவகம் ஊக்குவித்து வருகின்றது.

❊ ஆசிரியர் பெற்றோர் தொடர்பு மாணவர்களது கற்றலில் உடன்பாடான மேம்பாட்டை ஏற்படுத்த வல்லது. மாணவர்களது நிலை தொடர்பாக ஆசிரியர் பெற்றோருடன் கலந்துரையாடுவது பெரும் பயன்தரக்கூடியது. பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரது பங்களிப்பையும், கவனத்தையும் பெறுவதற்கு இது ஒழுங்கான கால இடைவெளியில் மேற்கொள்ளப்படல் நன்று. கிழக்காசிய நாடுகள் சிலவற்றில் இம்முறை ஆசிரியர்களால் "Home Visit" எனும் பெயருடன் மேற்கொள்ளப் படுகின்றது.

❊ பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்கள் மாதிரி வகுப்புக்களைப் பிற ஆசிரியர்களுடன் நடாத்தித் தமது தொழிற் திறன் விருத்தியை ஏற்படுத்துதல் மிகவும் பயன் தரக் கூடியதாக இருந்ததனைப் பிற மாவட்டங்களில் மேற்கொள்ளப் பட்ட ஆசிரியர் தொழிற்துறை விருத்திச் செயற்றிட்டங்கள் மூலம் அறிய முடிந்தது. ஒரு சாதாரண ஆசிரியன் ஒரு சிறந்த ஆசிரியராக மலர்வதற்கு இது பயனுள்ள முறை என்பதை அனுபவங்கள் புலப்படுத்துகின்றன. ஒவ்வொரு பாடசாலையும் இத்தகைய முறைகளை ஆசிரிய அபிவிருத்திக்காகப் பின்பற்றுதல் நன்று. ஆசிரியர் அபிவிருத்தி என்பது ஒரு முடிவடையாத பயணமாகும். புதிய புதிய கற்றல் முறைகளையும் திறன்களையும் மாணவர்களுக்குத் தொடர்ந்து அறிவுறுத்துவதும் ஆசிரியர்கள், அதிபர்கள் மேற்கொள்ளக் கூடிய சில செயற்பாடுகளில் இடம்பெற வேண்டும். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை இலகுவாகவும் அதிக பயன்தரக்கூடிய வகையிலும் ஏற்படுத்தி மாணவர் சமூகத்தை நிபுணத்துவக் கற்றலை (Mastery Learning) நோக்கி வழி நடத்தும் பொறுப்பும் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் பணியாகும். பொதுவாக கற்றல் மேம்பாடும் அதனை இலகுபடுத்துவதும் மாணவர், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு கூட்டு முயற்சியாகும்.

யாதானும் நாடாமல் ஊராமல் என் ஒருவன்
சாந்துணையும் கல்லாதவாறு.

# The Role of RESC in implementing Educational Reforms

**V. Kamaladhas**
Co - Ordinator RESC
Batticaloa.

**What is a RESC?** *RESC, (abbreviation of Regional English Support Centre), is an in - service Training Centre that exists to support English language teaching (ELT) in Sri Lanka. There are 30 RESCs in Sri Lanka and in addition to conducting in - service training courses for teachers, they also house a collection of ELT resources and run special programmes for teachers and children in their areas. RESC is empowered to provide advice on all aspects of ELT at primary and secondary levels.*

**Who is in charge of RESC?** *RESCs have been established by the Ministry of Education and Higher Education in Co - operation with provincial Education Departments and the National Institute of Education. The Department of English, NTE, selects and nominate RESC staff for appointment by the PDEE of relevant provinces. The secretary / MOE & HE has given directives for the release of four teachers of English to fill the posts of a Co ordinator, a Teacher - in - Charge and two teacher Assistants in each RESC to implement the work which is prescribed by the NTE and the PDE of the area. The staff are recruited from experienced practising teachers who are released full - time from their school work to serve in the RESC. The NIE train the staff professionally and Co - ordinate their work islandwide. The Ministry of Education and Higher Education in collaboration with the British Council, UK, provide the staff with further professional and academic training as teacher educators who can face the requirements of theNew Educational Reforms currently implemented in Sri Lanka. The MOE & HE maintains monitoring and supervising through Provincial Education Departments. The ZDEE of zones coming under the region served by the RESCs collaboratively manage the work done by RESCstaff in their zones. The PDEE lay guidelines for the collective effort of the Teacher Centres and RESCs have to take towards introducing the new teaching - learning classroom culture and the teacher behaviour.*

**What is the future of RESCs?** *From 2001 all RESC are to be brought under the direct purview of the TETD of the education ministry. RESCs will be affiliated to the Teacher Centres and their National Colleges of Education in order to speed up Developing English language requirements of teachers and their teaching skills because of the importance to be given to English medium Education in the near future.*

**What do the RESCs do now?** *In addition to assisting Teacher Centres and English Units of their regions, RESCs at present conduct a twelve - day training course also known as PELP workshops for primary English teachers sponsored by the primary English language project of the Ministry of Education. This project is expected to be completed in August 2001. In - service Training Certificates are awarded by the Ministry of Education for teachers who complete this course. In 2001 the secondary English Language Project course is to be implemented to help teachers to handle the new text - books effectively. However, one should remember that RESCs are only useful if English teachers, principals, ZDEE and Students visit them for assistance.*

**Why should one visit RESCs?** *Number of teachers and principals find it difficult to use the Experiential approach to teaching - learning process prescribed in the Reforms. Many others find they are very weak in their English and they have to improve it to face the future demands for English medium education. Considering this theat the NIE has trained the RESC staff and equipped them to deliver the goods to their regions. Most staff have been trained abroad for this purpose. For a teacher of English RESC is the only place where they can find help and*

*professional support to do their job well.*

*What is the difference between the approaches to teaching before and after the Reforms? A look at the following table (Table - 1) would give a brief idea of what it is all about. One will notice that there is a complete change in the teacher student relationship and the teaching - learning culture.*

TABLE - 1 Comparative View of the Past & Present Approaches to Education

| **Dimension** | **Traditional Model Behaviourism** | **Experiential Model Constructivisim** |
|---|---|---|
| 1. View of learning | Transmission of knowledge | Transformation of knowledge |
| 2. Power relation | Emphasis on teacher's authority | Teacher as a 'learner among learners' |
| 3. Teacher's role | Providing mainly frontal instruction professionalism as individual autonomy | Facilitating learning (largely in small groups) collaborative professionalism |
| 4. Learner's role | Relatively passive recipient of information mainly individual work | Active participation largely in co operative small small groups |
| 5. View of knowledge | Presented as 'certain' application, problem solving | Construction of personal knowl - edge, identification of problems |
| 6. View of curriculum | Static; hierarchical grading of subject matter, predefined contents | Dynamic; looser organization of subject matter, including open parts and intergration |
| 7. Learning experiences | Knowledge of facts, concepts and skills; focus on content and products | Emphasis on process: learning skills, self inquiry, social and communication skills |
| 8. Control of process | Mainly teacher structured learning | Emphasis on learner self directed learning |
| 9. Motivation | Mainly extrinsic | Mainly intrinsic |
| 10. Evaluation | Product - oriented achievement testing criterion - referencing (and norm - referencing) | Process - oriented reflection on process, self - assessment; criterion - referencing |

(Extract·taken from "**Experiential Language Learning**"

பாடசாலை முகாமைத்துவப் பிரிவு
மட்/ வலயக்கல்வி அலுவலகம்

# ஆரம்பக்கல்விப் பிரிவு

# முகாமைத்துவம்

பாடசாலை கற்றல் / கற்பித்தல் செயற்பாடுகளின் முழுநோக்கமும் மாணவரின் நடத்தையில் பொருத்தமான மாற்றத்தை வருவித்தலாகும் என்பது கல்வியியல் சிந்தனையாகும்.

நாமும் சற்றுச் சிந்திப்போமா?

## விடய ஆய்வு : 01

*200 மாணவர்களையும் 08 ஆசிரியர்களையும் கொண்ட அந்தப் பாடசாலையின் தரம் 02 வகுப்பறை போதுமான வசதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. காலை 9.00 மணிக்கும் ஒரு மாணவி தயங்கித்தயங்கி வகுப்பறை வாயிலில் நுழைந்து கொண்டிருக்கிறாள். அப்போதுதான் வகுப்பாசிரியர் வரவு இடாப்பை அடையாளப்படுத்திவிட்டு மாணவரை அவர்களது குழுவில் திரும்பவும் அமருமாறு கேட்டுக்கொண்டு செய்த வேலையைத் தொடருமாறு கூறுகிறார். பின் ஒரு குழுவின் வேலையைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது மற்றொரு குழு மாணவி "எப்பவும் டீச்சர் அந்தக்குழுவைத்தான் பார்ப்பா எங்களுக்குக் கிட்ட வரமாட்டா" என்கிறாள்.*

*இன்னுமொரு குழுவிலிருந்து ஒரு சத்தம் இவ்வாறு வருகிறது. "டீச்சர்! இந்தக் கலா வாயைத் திறக்கமாட்டாவாம். 'பட்டம் பறக்கிறது' என்று வாசிக்கிறா இல்ல" அடுத்த குழுவிலிருந்து "டீச்சர் எங்கள் குரூப் இந்த அட்டை எல்லாம் வாசித்து முடித்துவிட்டோம். நாங்கள் படம் கீறப்போறோம்" என்று சத்தம் போடுகிறார்கள். வகுப்பறை மூலையிலிருந்த குழுவில் இரு மாணவர் எழுந்து நின்று ஏதோ வாக்குவாதமும் அடிபிடியுமாகக் காணப்படுகின்றனர். சில மாணவர்கள் ஏதோ புதினம் பார்ப்பவர்களாகத் தோன்றுகின்றனர்.*

*எனினும் அந்த வகுப்பறையில் குழுமுறைக் கற்பித்தல் நடப்பது போலும், எல்லா மாணவர்களும் கற்றலில் ஈடுபட்டு தங்கள் குழுக்களில் அமர்ந்துள்ளமையும் புலப்படுகிறது.*

1. *இந்த வகுப்பாசிரியரின் கற்றல் / கற்பித்தல் நடவடிக்கைகளின் ஒழுங்குமுறை பற்றிய உங்கள் கருத்தென்ன என்பதை விளக்கவும்.*
2. *மாணவர் அனைவரையும் கற்றலில் ஈடுபடுத்த எவ்வாறு திட்டமிடலாமென்பதைமிட்டு ஒரு குறிப்புரை தரவும்.*

## விடய ஆய்வு : 02

*புதுநகர் விபுலாநந்த கனிஷ்ட வித்தியாலயத்தில் 250 மாணவர்களும் அதிபருடன் ஐந்து ஆசிரியர்களும் கற்றல் / கற்பித்தல் நடவடிக்கைகளிலீடுபடுகின்றனர். இவ்வருடம் தரம் 1ல் இன்னுமொரு பிரிவு அமைப்பதற்கான அனுமதியை அதிபர் பெற்றுக்கொண்டதோடு புதுமாணவர்கள் இருபிரிவுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். தரம் 5ல் நாற்பது மாணவர்கள் உள்ளனர். கடந்த வருடங்களில் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் ஓரிருவர் சித்திபெற்றமையையே காட்டுகிறது.*

*இந்நிலையில், பங்குனி மாதம் விமலா ரீச்சர் இப்பாடசாலைக்கு மாற்றலாகி வருகிறார். அவருக்கு தரம் 4 வகுப்பு பொறுப்பாக கொடுக்கப்படுகிறது. கடந்த மூன்று மாதங்களாக அந்த வகுப்பு மாணவர்கள் வகுப்பாசிரியர் இல்லாது பதில் ஆசிரியர்களாலேயே நடாத்தப்பட்டுள்ளனரென்பதை விமலா ரீச்சர் புரிந்துகொண்டார். வகுப்பிற்குத்தேவையான பாடவிதானம், பாடத்திட்டம், கையேடுகள், வழிகாட்டிகள், பாடப்பதிவு, விசேட செயற்றிட்டம் எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை. தரம் 5 வகுப்பாசிரியரிடம் இதுபற்றி விசாரித்தபோதும் திருப்தியான பதில் கிடைக்காமையினால் அதிபருடன் கலந்துரையாடி தான் மேற்கொள்ளப்போகும் சில செயற்பாடுகளுக்கு அனுமதி தரும்படி கேட்டுக்கொண்டார். அவையாவன,*

1. ஆரம்ப மேற்பிரிவுக்கான பாடவிதானம் ஆசிரியர் கைந்நூல் வழிகாட்டிகள், பாடத்திட்டம் ஆகியவற்றை உடனடியாகப் பெற்றுத்தருதல்.

2. இவ்வகுப்புகளுக்கு மேலதிக கற்றல் / கற்பித்தல் ஒழுங்குகளை செயற்றிட்டமாக நடைமுறைப்படுத்த அனுமதியும் ஆதரவும்.
3. ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வகுப்புக்களை ஒழுங்குசெய்தல்.
4. 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளைப் 10% த்தால் உயர்த்தும் செயற்றிட்டத்தை அமுலாக்க அனுமதி.

**பின்வரும் வினாக்களுக்கு விடை காண்க.**

1. விபுலாநந்த கனிஷ்ட வித்தியாலய அதிபர், விமலா ரீச்சர் ஆகியோரின் ஆளுமை பற்றியதொரு கணிப்பீடு தருக.

2. பாடசாலையின் வகுப்பறை முகாமைத்துவம் பற்றிய ஒரு குறிப்புரை தருக.

3. விமலா ரீச்சரின் கற்றல் / கற்பித்தல் செயற்பாடுகளின் திட்டம் வெற்றி தருமா?

## புலமைப்பரிசில் பாராட்டு வைபவம்

*1999ம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களில் கோட்ட ரீதியில் கூடிய புள்ளிபெற்ற தலா மூவர் வீதம் 18 மாணவர்கள் வலயமட்டத்தில் பாராட்டப்படவுள்ளனர். இதற்கான நிதி வலயப்பரீட்சைச்சபையால் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வைபவம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.*

*தகவல் :- பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)*

# பாடமேம்பாடும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும்

இ. ஜெயராஜா - முதன்மை ஆசிரியர் (சமூகக்கல்வி)

## பாடமேம்பாடு என்றால் என்ன?

வழமையான வகுப்பறைக் கற்பித்தலின் மூலம் மாணவர்களால் விளங்கிக் கொள்ள முடியாத விளங்க வைக்க முடியாத விடயங்களை இலகுவாக அறியவும், கண்டறி கற்றல் மூலம் விளங்கிக்கொள்ளவும் மேம்பாடு உதவுகிறது. மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளே பாடமேம்பாடாகும். இதனால்

- ❖ கவர்ச்சியான முறையில் கற்றல் கற்பித்தலை செய்ய முடிகிறது.
- ❖ பாடங்களின் தரமேம்பாட்டிற்கு உறுதுணையாக அமைகிறது.
- ❖ அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ள முடிகிறது.
- ❖ செய்முறை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கிறது.

## பாடமேம்பாட்டுச் செயற்பாடு யாருக்கு?

மாணவர்களின் கற்றல் தரத்தை உயர்த்த பாடமேம்பாடு அவசியமாக உள்ளது போல ஆசிரியர்களுக்கு புதிய அனுபவத்தைப் பெற இச் செயற்பாடுகள் அவசியம்.

- ❖ மீத்திறன் குறைந்த மாணவர் கட்கு டானிக் போன்றது.
- ❖ வகுப்பறையில் நான்கு சுவர் களுக்குளிடையிலிருந்து வெளியே சென்று தமது திறன் களை வெளிப்படுத்தத்துடிக்கும் மாணவர்கட்கு இச் செயற்பாடு அவசியம்
- ❖ புத்தகப் பூச்சிகளாகவுள்ள ஆசிரியர்கட்கும் மேலும் புதிய அனுபவங்களை அறிந்து கொள்ள தமது அறிவை வளர்த்துக் கொள்ள விரும்பும் ஆசிரியர்களும் அவசியம்.
- ❖ படைப்பாற்றல் சிந்தனைக்கிளறல் போன்றவற்றால் பிரகாசிக்க முனைபவர்கட்கு

## எப்போது பாடமேம்பாட்டுச் செயற்பாடு செய்யப்படவேண்டும்

- ❖ வகுப்பறைக் கற்பித்தலினால் விளக்க வைக்க முடியாத அனுபவங்களைப் பெறவேண்டிய வேளைகளில்
- ❖ வகுப்பறைக் கற்பித்தல் நேரத் திற்கு புறம்பாக போதிய நேர மெடுத்து சுதந்திரமாக செயற் படக் கூடிய வேளைகளில்
- ❖ ஏனைய வகுப்புகளின் பாதிப்பு க்கள், இடைஞ்சல்கள் இல்லாது வேறு இடத்தில்.
- ❖ கற்பித்தல் உபகரணங்களால் விளங்கிக் கொள்ளமுடியாத விளங்க வைக்க முடியாத வேளைகளில் - உதாரணமாக முப்பரிமான இலங்கைத் தரைத் தோற்ற உபகரணத்தால் மாணவர் அறிய முடியாதவற்றை வெளிக்களப்பயணம் மேற் கொண்டு மலையகப்பகுதி போன்றவற்றை பார்வையிட்டு அனுபவக்கற்றலைப் பெறுதல்.
- ❖ வகுப்பறையிலோ, பாடசாலை வளவிலோ வழமையாகச் செய்ய ப்படும் பரிசோதனைகள், அவதா

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்.

னிப்புகளால் மாணவர் அடைய முடியாதவற்றை அடைய பாட மேம்பாட்டுச் செயற்பாடு அவசியம்.

1. உதாரணமாக

ஐயன்கேணியிலுள்ள தும்புத் தொழிற்சாலையை சென்று பார்வையிடுவதன் மூலம் தும்பை தூய்மையாக்கி பொருட்கள் தயாரிப்பதை கண்டறிய முடிகிறது.

ஏற்கனவே சில விடயங்களில் நடைபெற்றுவருவதை மேலும் விரிவு படுத்தலாகவுள்ளது.

**பாடமேம்பாட்டினால் வெற்றி கிடைக்குமா**

ஆம் நிச்சயமாக உலகில் இன்று முன்னேற்றமடைந்த கனடா, ஜப்பான் போன்ற நாடுகளில் பாலர் வகுப்புத் தொடக்கம் வாழ்நாள் முடியும் வரை இவ்வாறான கற்றல் முறையே நடைமுறையிலுள்ளது.

- ❖ மாணவர் செயற்றிறன், படைப் பாற்றல் என்பவற்றின் மூலம் நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய மனிதவளத் தினை இம் முறை உருவாக்கு கிறது.
- ❖ புதிய ஆராய்ச்சிகள் கண்டு பிடிப்புகள் விஞ்ஞானிகள் போன்ற வர்களை உருவாக்க பாடமேம் பாட்டுச் செயர்பாடுகளுடன் கூடிய கல்வி முறை சந்தர்ப்பத்தை அளிக்கிறது.

**எல்லாப் பாடங்களுக்குமா? எத்தனை பாடமேம்பாடு?**

எல்லாப் பாடங்களுக்கும் பாடமேம்பாடு செய்யப்படலாம். குறிப்பாக அனுபவக் கற்றலை மாணவன் பெற வேண்டிய வேளைகளில் அவ்வலகுகளுக்கு செய்யப்பட வேண்டும்.

ஒரு களப்பிரயாணத்தினூடாக பல பாடங்கள் பற்றிய விடயங்களை ஒரே தடவையில் அறியமுடிகிறது. உதாரணமாக விகாரை ஒன்றைப் பார்வையிடும் போது வரலாறு, சித்திரம், கட்டடக்கலை போன்ற பல விடயங்களை அறிய முடிகிறது.

ஒரே தடவையில் பல பாடங்கள் தொடர்பாக திட்டமிட்டால் நேரத்தை சிக்கனப்படுத்தி மேம்பாட்டுத் திட்டத்தை செய்து முடிக்கலாம். உதாரணமாக மட்டக்களப்பு நகரில் வானிலை அவதான நிலையம், ஒல்லாந்தர் கோட்டை, கிழக்குப் பல்கலைக்கழக விவசாயபீடம், சித்தாண்டி ஆலயம், வாழைச்சேனை காகித ஆலை, ஓட்டமாவடி பாலம் போன்றவற்றை பல பாடங்கள் தொடர்பாகப் பார்வையிடலாம்.

- ❖ உதாரணமாக தரம் 6 சுற்றாடல் கல்வியில் உணவு வீண்விரயம் என்ற அலகினை கற்றுக் கொள்ள உணவு விடுதிகளை சென்று பார்வையிட்டு அனுபவத்தைப் பெறலாம்.
- ❖ மனையியல் பாடத்தில் புரியாணி செய்யும் முறையினை அறிந்து கொள்வதுடன் நில்லாது அது செய்யப்படும் முறை செய்து பார்த்தல் போன்ற அனுபவங் களைப் பெறலாம்.
- ❖ வசதிக்கு ஏற்பவும் தேவைக்கு ஏற்பவும் பொருத்தமான மேம்பாடு எத்தனையும் செய்யப்படலாம். அதற்கு வரையறை இல்லை உதாரணமாக 2ம் உலக யுத்தம் பற்றி அனுபவக்கற்றலைப் பெற படக்காட்சியைக் காண்பிக்கலாம். அவ்வாறே சீன நாகரிகத்தை சீனாவுக்குச் சென்று பார்வை யிடமுடியாததால் படக்காட்சி களைக் காண்பித்து அனுபவ அறிவைப் பெறலாம்.

**பாடமேம்பாடு செய்யக் கூடிய முறைகள் எவை?**

வகிமா/மாகதி/எஸ்ஓ/ப/ 318 ஆம் இலக்க 1998.12.24 திகதியிடப்பட்ட பாடமேம்பாடு தொடர்பான சுற்று நிருபத்தின்படி செய்யப்படலாம்.

ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

# பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்


| நிகழ்ச்சித்திட்டங்கள் | செயற்றிட்டம் |
|---|---|
| 1 மாணவர் புத்தாக்கங்களை ஊக்குவித்தல் | 1.1 புத்தாக்க உபகரண தயாரிப்பு.<br>1.2. சஞ்சிகை ஆக்கங்கள் தயாரிப்பு.<br>1.3 புத்தளிப்பு கருவி தயாரிப்பு.<br>1.4. கண்டுபிடிப்புக்களை மேம்படுத்தல்.<br>1.5. புத்தாக்க வெளிப்பாடு கண்காட்சி |
| 2 உடலியல் திறன்களை விருத்தி செய்தல் | 2.1. அணிநடை பயிற்சி செயற்பாடு.<br>2.2. வலைப்பந்து சுற்றுப்போட்டி |
| 3 கலை, இலக்கிய திறன் மேம்பாடு | 3.1. நாடகப் பட்டறைகள்.<br>3.2. கவிதை, சிறுகதை தயாரிப்பு.<br>3.3. இசை, நடன விருத்தி செயற்பாடு<br>3.4. சித்திர திறன் விருத்தி. |
| 4 மொழித்திறன் வளர்ச்சி | 4.1. தமிழ் மொழி விருத்தி செயற்பாடு.<br>4.2. ஆங்கிலமொழி திறன் விருத்தி செயற்பாடு<br>4.3. சிங்களமொழி திறன் விருத்தி செயற்பாடு |
| 5 மாணவர் மன்றங்கள் ஒழுங்கமைத்தல் | 5.1. இளம் கண்டுபிடிப்பாளர் சங்கம் அமைத்தல்<br>5.2. சாரணர், பெண் சாரணிய மன்றங்கள் அமைத்தல்<br>5.3. சமய மன்றங்கள் அமைத்தல்.<br>5.4. இனட்ரக்ட் சங்கம் அமைத்தல்.<br>5.5. விஞ்ஞான கலை இலக்கிய மன்றங்கள் அமைத்தல் |
| 6 சமூக தொடர்புகளை விருத்தி செய்தல் | 6.1. சிரமதான செயற்பாடுகள்.<br>6.2. பெற்றார் சந்திப்புக்கள்.<br>6.3. சமூக நிலைய தரிசிப்புக்கள். |
| 7. கல்லூரி பாரம்பரியங்களையும், பண்பாடுகளையும் மேம்படுத்தல். | 7.1. பாடசாலை தினவிழா ஒழுங்கமைத்தல்<br>7.2. ஸ்தாபகர் தினவிழா ஒழுங்கமைத்தல்<br>7.3. ஆசிரியர் தினவிழா ஒழுங்கமைத்தல்<br>7.4. பாட தினங்களை ஒழுங்கமைத்தல்.<br>7.5. பரிசளிப்பு விழாக்களை ஒழுங்கமைத்தல் |
| 8. களப்பணம்<br>9. விசேட செயல் திட்டங்கள் | 8.1. பரிகாரக் கற்பித்தல்.<br>8.2. மேலதிக கற்பித்தல்.<br>8.3. ஆசிரிய பயிற்சி.<br>8.4. பௌதீகவள அபிவிருத்தி. |


புதிய கல்விச் சீர்திருத்தத்தின் வெற்றியானது ஆசிரியர்களது கையில் குறிப்பாக பாடமேம்பாட்டுச் செயற்பாடுகளில் தங்கியுள்ளது ஆசிரியர்கள் தங்களது நேரம், ஆற்றல் போன்றவற்றை வெளிப்படுத்தி தியாக உணர்வுடன் செயற்பட்டால் பாடமேம்பாட்டுச் செயற்பாடு வெற்றியளிக்கும்.

**"பிறர் பிள்ளையை நீ தலைதடவினால்**
**உன் பிள்ளை தானாய் வளரும்"**

## குறுக்கெழுத்துப்போட்டி (கணிதம்)

எஸ். இரத்தினசிங்கம்
உதவிக்கல்விப் பணிப்பாளர் (கணிதம்)
வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு.




### குறுக்காக

(a) 30 இற்கும் 40 இற்குமிடைப்பட்ட அடுத்துவரும் நிறையெண்கள் இரண்டின் பெருக்கம்.

(c) 738 x ☐ = 738738 என்பதில் ☐ என்ற கூட்டில் வரவேண்டிய எண்.

(e) 2 ஆல் வகுக்க மீதி 1 உம் 3 ஆல் வகுக்க மீதி 2 உம் 4 ஆல் வகுக்க மீதி 3 உம் 5 ஆல் வகுக்க மீதி 4 உம் 6ஆல் வகுக்க மீதி 5 உம் வரும் எண்.

(h) 85 ரூபாய் என விலை குறிக்கப்பட்டுள்ள ஒரு பொருளை 20% கழிவுடன் விற்கும் விலை.

(j) 698896 இன் வர்க்க மூலம்

(k) x, y, a என்பன நேர்நிறையெண்களாக இருக்க $y = x^a$ என்பதில் x, 40 இலும் பெரிதாகும்போது y இற்குப் பொருத்தமான பெறுமானம்.

(m) 101 பாகையின் மிகை நிரப்பி

(n) 3 இன் அடியில் இவ்வெண்ணின் மடக்கை 8.

(r) 6 cm பக்கமுடைய சதுரமுகியின் மேற்பரப்பளவு - சதுரசென்ரி மீற்றரில்

### மேலிருந்து கீழாக

(a) இவ்வெண்ணின் வர்க்கமூலம் 306

(b) அருகிலுள்ள படத்தில் எல்லாக் கோணங்களும் செங்கோணங்களாகும். இதன் சுற்றளவு.

(c) 11 இன் மடங்கு

(d) 4 : 3 = 24 : ☐ இதில் ☐ இல் வரும் பெறுமானம்.

(f) $\left(\dfrac{2^{-1} + 3^{-1}}{25}\right)^{-1}$ இன் பெறுமானம்

(g) 2700 இன் 12% ஐக் கழிக்க கிடைக்கும் பெறுமானம்.

(i) n ஒரு நிறையெண்ணாக இருக்க $2^n$ எனும் வடிவில் எழுதக்கூடிய எண்.

(l) இவ்வெண்ணின் காரணித் தொடையின் உறுப்புக்களின் எண்ணிக்கை 12

(p) 3x + 7 = 178 ஐத் திருப்தியாக்கும் x இன் பெறுமானம்.

(q) இவ்வெண்ணை $a^b$, $b^a$ என இருமுறையிலும் எழுதலாம்.

**விடையைக் கண்டுபிடித்து பூரணப்படுத்துங்கள்.**

கற்றிலன் ஆயினும் கேட்க அஃது ஒருவர்க்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை.

# Education for Life

Bro. A. James Peiris (Principal)
St. Michaels' College,
National School, Batticaloa.

- Education and discipline are inseparable twins. Those who are educated are always disciplinarians.
- Education is the key to change - change for the better.
- An educated man can cope with personal and social problems far better than the unedu cated.
- Education is the life oriented and need based formation leading to an intergrate devel opment and maturing of the various dimensions of one's personality which contribute to the general betterment of the society.
- Education should not be limited to formal learning, but to the training of the students in a variety of fields, thus enabling them to be active participants in building a new society.
- Only an education which involves commitment to moral values is capable of ridding our minds of its forms of harmful thoughts and actions.
- Education is a training to be a complete man or woman - a perfect human being.
- A human being is not, in any proper sense, a human being till he is educated.
- Education does not mean teaching people to know what they do not know but it means teaching them to behave as they do not behave.
- Education is not accumulating knowledge, stuffing our minds with technical knowl - edge but aspiring for higher moral values that break the barriers of hatred and selfish and build bridges of understanding and widen the horizon of acceptance of all human beings as they are.
- Education is for life not for living.

## Winners at the English Day National Level Contests - 1999 from the Batticaloa District are as follows.

| Winner | School | Event | Place |
|---|---|---|---|
| 1. Miss. Jeyakoddy Tharaniga | Bt/St. Cecilia's M.V | Grade 6 | Recitation First |
| 2. Miss. Lohasinee Kugathasan - | Bt/ Vincent Girl's N.S | Gr. 6 | First |
| 3. Miss. E. Miralini | Bt/ Chenkalady M.V. | Gr. 6 | Copy Writing Second. |
| 4. Miss. Carmeline Chrysostum - | Bt/ St. Cecilias' G.M.V. | Grade 8 | Recitation First |
| 5. Miss. Delukshi Navaretnam - | Bt/ Vincent Girl's N.S. | Grade 9 | Recitation Second |
| 6. Mas. Y. Niroshan | Bt/ St. Michael's N.S. | Grade 10 | Copy Writing First |
| 7. Miss. Nilukshie Soosaithasan | Bt/ Vincent Girl's N.S. | Grade 12 | Oratory (Impro.) Third |
| 8. Miss. Suganya Muthulingam | Bt/ St. Cecilia's G.M.V. | Grade 12 | Oratory (Prep) Third |
| 9. Mas. C.S.T. Fernando | Bt/ St. Michael's College N.S. | Gr. 13 | Oratory (Prep.) First |
| 10. Senior Poetic Drama | Bt/ St. Michael's College N.S. | Grade 10 - 13 | First |
| 11. Best Actor's Award | Bt/ St. Michael's College N.S. | Mas. Seevaratnam Skantan (Othello) | |

*Congratulations to the Winners from Batticaloa at the National Level English Day Competitions - 1999*

Z.D.E., Batticaloa.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

# புதிய கல்விச் சீர்திருத்தத்தில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டதன் அவசியம்

**A.M. றபீக் -** முதன்மை ஆசிரியர் (விஞ்ஞானம்) மட்/ வலயக்கல்வி அலுவலகம்.

இருபத்தோராம் நூற்றாண்டில் சிறந்த கல்விமுறை ஒன்றை உருவாக்குவதற்காக புதிய கல்விச் சீர்திருத்தங்கள் முன் வைக்கப்பட்டன. 1992இல் தேசிய கல்வி ஆணைக்குழு மூலம் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பாடம் தரம் 7 தொடக்கம் 11 ஆந்தரங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பாடம் புதிய தோற்றமுடையதாக இருப்பதால் ஆசிரியர்களும் மாணவர்களும் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளனர். கற்றல் - கற்பித்தல் மாணவர் மையமாக இருக்க வேண்டும் இதற்காக ஆசிரியர் தொழிற்பாட்டு முறைக் கற்றலை மாணவர்களுக்கு வழங்கக் கூடியவாறு வகுப்பறைக் கற்பித்தல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கல்விச் சீர்திருத்தத்திற்கான வேலைத்திட்டத்தில் விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் 1999ஆம் ஆண்டில் 9 ஆந் தரத்திலும், 2000 ஆம் ஆண்டில் 7,10 ஆந் தரத்திலும், 2001 ஆம் ஆண்டில் 8,11 ஆந் தரத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. வாரத்தில் 6 பாடவேளை கற்பித்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் பாடத்தின் தேவை.**

நாம் வாழும் சமுதாயம் வேகமாக மாற்றமடைந்து வருகிறது. இதற்கு அடிப்படைக்காரணம் நவீன விஞ்ஞான தொழிநுட்பவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமாகும். இம்மாற்றங்கள் மனித வாழ்க்கை முறையில் பல தாக்கங்களை ஏற்படுத்தக் காரணமாக அமைந்துள்ளன.

இம்மாற்றங்களினால் வாழ்க்கை முறையில் சாதகமான அல்லது பாதகமான மாற்றங்களை ஏற்படுத்தப்படலாம். எனவே, எமது சூழலைப் பற்றி விஞ்ஞான அறிவுமட்டும் போதாது இன்று எமக்கு தொழில் நுட்ப அறிவும் அவசியமாகத் தேவைப்படுகிறது.

வர்த்தகப் போட்டிகள் அமைந்த சமூக அமைப்பில் ஒரு நாட்டின் அபிவிருத்தி பற்றி சிந்திக்கையில் தொழில் நுட்ப திறனுடைய வழிவகைகளைத் தேடக்கூடிய பிரசைகளை உருவாக்குவதற்கு தொழில் நுட்பவியல் உதவுவதால் இத்தகைய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் பாடம் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

18ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் ஆரம்பித்த கைத்தொழில் புரட்சியினால் மனித உழைப்புக்குப் பதிலாக இயந்திரத் தொழிற்பாடு முன்னுரிமை பெற்றது. தொடர்ச்சியாக தொழில் நுட்ப முன்னேற்றங் காரணமாக 1957ல் சோவியத் நாடு, ஸ்புட்னிக் - 1 செயற்கைக் கோளை விண்வெளிக்கு ஏவி விட்டதன் காரணமாக தொழில் நுட்பத்தில் புரட்சி ஏற்பட்டது.

1940களில் கணனி கண்டு பிடிக்கப்பட்டது தொழில் நுட்பத்தின் முக்கிய மைல்கல்லாகும். 1970 தொடக்கம் 1980 ஆம் ஆண்டு தசாப்தத்தில் மனிதன் தகவல் யுகத்திற்கு காலடி எடுத்து வைத்தான் கணனி முன்னேற்றத்தினால் தொடர்பாடல் துறையில் வளர்ச்சி ஏற்பட்டது.

விஞ்ஞானிகளிலும் தொழில் நுட்பவியலாளர்களும் தங்களது கண்டு

பிடிப்புக்களின் போது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு கையாண்ட முறைகள் இக்கலைத்திட்டத்தில் புகுத்தப்பட்டு ள்ளது.

**பிரச்சனை தீர்க்கும் வழிமுறைகள்**

1. பிரச்சனையை நன்கு விளங்கிக் கொள்ளல்.
2. எதிர்பார்க்கும் பயனை அறிதல்
3. பல்வேறு தீர்வுகளை முன் வைத்தல்.
4. மிகவும் உசிதமான தீர்வு ஒன்றைத் தெரிதல்.
5. தெரிந்தெடுத்த தீர்வை செயற் படுத்தல்.
6. தேவைப்பட்ட பயன் கிடைத்ததா என மதிப்பிடலும், மதிப்பீட்டின் அடிப்படையில் மாற்றங்களைச் செய்தலும்.

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்தை வகுப்பறையில் கற்பிக்கும் போது தொழிற்பாட்டு முறைக்கற்றலை பின்வரும் தலைப்புக்களில் நடைமுறைப் படுத்தலாம் :-

**தரம் 7 தொடக்கம் 11 வரை கல்வி கற்கும் மாணவர்கள் பெறவேண்டிய கற்றல் திறன்கள் :-**

**தொடர்பாடற்றிறன்**
**கணிதத்திறன்**
**திட்டமிடுந்திறன்**
**ஆய்வுப்பயணங்களில் ஈடுபடுந்திறன்**
**ஆராய்யுந்திறன்**

**மாணவர் மையக்கல்வி முறையில் பின்வரும் உத்திகளை கற்றல் - கற்பித்தலில் பயன்படுத்தமுடியும் :-**

களப்பயணம்
திருத்தமாகக் கேட்டல்
திருத்தமாகப் பேசுதல்
விஞ்ஞான - தொழில்நுட்ப தினக்குறிப்பைப் பேணல்
பல்வேறு நடத்தைத்திறன்
பல்வேறு தலைப்புக்களில் சுவர்ப் பத்திரிகை, சுவரொட்டிகள் தயாரித்தல்
ஆக்க பூர்வமான கட்டுரை எழுதல்
கல்விச்சுற்றுலா
நிகழ்வொன்றை ஆராய்தல்
விவாதத்திறன்
அறிக்கைப்படுத்தல்
சிறுகுழுக் கலந்துரையாடல்
ஆசிரியர் முன்மாதிரி
சிந்தனை தூண்டும் வேலைத்திட்டங்கள்
முக்கிய பிரமுகர்களின் பிரசங்கம்
விஞ்ஞான தொழில் நுட்பக் கண் காட்சி
விஞ்ஞான தொழில் நுட்ப தினம்
புதிய கண்டுபிடிப்புக்கள் உருமாதிரி அமைத்தல்
மேடை நாடகம்

**களப்பயணம்**

விஞ்ஞானபூர்வமான அனுபவங்கள் வகுப்பறை ஆய்வு கூடங்கள் ஆகிய வற்றிற்கு மட்டும் வரையறைப்படுத்தப் படவில்லை. வெளியே நாம் காணும் சுற்றாடல் விஞ்ஞானம் கற்பதற்கு மிகப் பொருத்தமான இடமாகும். கள ஆய்வுகள் மூலம் நேரடி அனுபவங்களை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கலாம்.

தரம் 9 இல் அலகு 9.7 சக்தியைப் பயனுறிதியுடைய விதத்தில் பயன்படுத்தல் என்னும் தலைப்பில் உள்ளது சக்தி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் குறிக்கோளை கற்பிப் பதற்கு களப்பயணம் மிகவும் உதவும்.

இதற்காக பாடசாலை நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரங்கள் பயன்படுத்தப்படலாம். மாணவர்களை ஆசிரியர் பின்வரும் இடங்களுக்கு அழைத்துச் சென்று பல்வேறு சந்தர்ப் பங்களில் பயன்படுத்தப்படும் சக்தியின் பணப்பெறுமதியை மதிப்பிடலாம்.

மரஆலை, காற்றுமூலம், நீர் பம்பும், இடம், பேக்கரி, சூரிய கலங்கள் பயன்படுத்துமிடம், நீர்ப்பம்பும் நிலையம், வாகனம் திருத்துமிடம், அரிசி ஆலை, மின்சாரசபை அலுவலகம்.

இங்கு சக்தியைப் பெற்றுக் கொள்ளும் விதம் மின்மானி வாசிப்பை அவதானித்து செலவிடப்படும் சக்திப் பணப்பெறுமதியை ஒப்பிட்டுப்பார்க்க முடியும். இங்கு பயன்படுத்தப்படும் மின் உபகரணங்களின் வாற்றுப்பெறுமானத்தை அளவிடமுடியும்.

இவ்வாறு தொழிற்பாடுகளைத் திட்டமிட்டு கற்பித்தலை மேம்படுத்தலாம்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

# பரத நாட்டியம்

**திருமதி. வ. நேரு** - முதன்மையாசிரியர் (நடனம்)

பரத நாட்டியத்தினை ஒரு பாடமாக பாடசாலைகளில் தரம் 7 முதல் தரம் 13 வரை மாணவர்கள் கற்கின்றனர். தரம் 6 இல் இப்பாடம் ஒரு ஒன்றிணைந்த பாடமாக சங்கீதம், சித்திரத்துடன் இணைத்து கற்பிக்கப்படுகின்றது மாணவரது இரசனை, வெளிப்பாடு, ஆக்கத்திறன், ஈடுபாடு என்பவற்றினை வெளிக்கொணர இப்பாடம் இன்றியமையாததொன்றாகும் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மூலமாக தரம் 6 இல் ஒன்றிணைந்த பாடமாக கற்ற பாடம் தனித்தனியே சித்திரம், சங்கீதம், நடனம் என தரம் 7 முதல் கற்பிக்கப்படுகின்றது.

ஆசிரியர்களது கற்பித்தல் தற்போதைய கல்வித் திட்டங்களின் எதிர்பார்ப்புக்கமைய செயற்பாடுகள் மூலம் இடம் பெற்று மாணவர்களிடையே அழகியல் உணர்வை வளர்த்து விடுவதோடு நின்றுவிடாது, அவை சமுதாயத்திற்கு நற்பிரஜைகளை உருவாக்கவும் உதவுகின்றது. எனவே இப்பாடத்தினை இலகுவாகவும் செயற்பாடுகளுடன் கூடியதாகவும் கற்பித்து உயர்மட்ட விளைவுகளைப் பெறும் சில உத்திகள் வருமாறு.

- ஆசிரியர் மாணவர்களிடையே ஒரு பரஸ்பர உறவினை ஏற்படுத்திக் கொள்ளல்.
- இலகுவான வினைத்திறனுடன் கூடியதான செயல் முறைகளில் மாணவரை ஈடுபடுத்தல்

**(உ ம்) துள்ளுதல், கைகளை சுழற்றுதல், அரைமண்டி முழுமண்டி பயிற்சி.**

- மாணவரை மையமாக வைத்து கற்றல் கற்பித்தலில் ஈடுபடல்

**(உ ம்) ஆசிரியர் தரத்திலிருந்து மாணவர் மட்டத்திற்கு இறங்கி செயற்பாடுகளில் ஈடுபடல்.**

- அறிமுறையுடன் கூடிய செயல் முறைப்பாடமாக இது விளங்குவதால் ஆசிரியரது செயற்பாடுகளை அதிகமாக்குதல்.
- முகபாவங்களை சிறப்புற வெளிப்படுத்தக் கூடியதாக அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளை ஒப்பிட்டு காட்டி கற்பித்தல்.

**(உ ம்) தெருவில் கண்ட ஒரு விபத்து (பயம், இரக்கம்)**

- பாடசாலையில், வகுப்பறையில் மாணவரிடையே ஏற்படுகின்ற கைகலப்புக்கள் (கோபம், வீரம்)
- வரைதல் ஆற்றல் உள்ளவர்களை அடவுகளின் நிறை பயிற்சி நிலைகளை வரைய தூண்டுதல்

**(உ ம்) அரைமண்டி**
**நாட்டடவு**
**குதித்துமெட்டடவு.**

- மாணவரை தன்னிச்சையாக இயங்கவைத்து அவர்கள் ஆற்றல்கள் வெளிப்பாடுகளை அவதானித்தல்.
- மாணவருடைய ஆக்கங்களுக்கு முதலிடம் கொடுத்தல்
- எதனையும் இரசிக்கும் ஆற்றலை வளர்த்தல்

**(உ ம்) இயற்கை அசைவுகள்**
**செயற்கை அசைவுகள்**
**பாடல்கள்**
**இசைக் கருவிகள்**

இவ்வாறான ஒரு சூழலை மாணவரிடையே உருவாக்கிக் கொள்ளும் போது அழகியல் இரசனை வளர்ப்பது மட்டுமன்றி கற்றல் கற்பித்தல் பாடத்தில் ஒரு ஈடுபாடு என்பன மிகவும் இலகுவாகவும் மகிழ்ச்சியானதாகவும் இடம் பெறும்.

அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார் என்னுடையரேனும் இலர்.

# நவயுக மாணவர் நாங்கள் !

**இப்றாஹீம் நத்வீ** - மட்/ஹைறாத் வித்., காத்தான்குடி.

நாங்கள் நவீன காலத்து மாணவர்கள்!
எங்கள் காலத்தில்தான்
கல்வியலாளர்களின் சிந்தனைகள்
புதிய திருப்பம் பெற்றுள்ளன.
எங்கள் முன்னோர்கள்
உயிரெழுத்துக்களை
**'ஆனா, ஆவன்னா, ஈனா'** என்று
பிழையாக மொழிந்தார்கள்.
ஆனால் நாங்கள்
அ,ஆ,இ என்ற
உரியபடி மொழிகின்றோம்.
நாங்கள் எழுதும்
புலமைப் பரிசில் வினாத்தாள்கள்
எங்கள் ஆசிரியர்களைக் கூட
தடுமாற வைக்கின்றன.
எங்கள் முன்னோர்கள்
குறைந்த புள்ளிகளுடன்
பல்கலைக்கழகம் புகுந்து
பட்டங்கள் பெற்றனர்
ஆனால் –
எங்கள் நவீன இளைஞர்கள்
கூடிய புள்ளிகளைப் பெற்றும்
வளாகம் புக முடியவில்லை.
எங்கள் இளவல்களின்
கல்விச் சிந்தனை கண்டு
பல்கலைக் கழகங்கள் கூட
பயப்படுகின்றன.
அதனாற்றான் சொல்கிறோம்
நாங்கள் நவீன காலத்து
மாணவர் என்று!

அன்றைய அறிஞன்
பறவையைக் கண்டான்
விமானம் படைத்தான்
நவீன மாணவர் நாம்
எதிர் காலத்தில்
பறவையாய்ப் பறப்போம்
பாம்பாய் ஊர்வோம்
மீனினும் நீந்துவோம்
விண்வெளியில்
பாடசாலை நடாத்துவோம்
வீதி நெரிசலைத்தவிர்த்து
ஆகாயத்தில் பறக்கும்
ஆட்டோக்களையும், கார்களையும்
உற்பத்தி செய்வோம்
கம்பியூட்டர் மனிதர்களைப்
படைப்போம்
அவர்களுக்கு உணவு தேவையில்லை,
உடை தேவையில்லை,
உறக்கமற்றவர்கள்,
களைப்பற்றவர்கள்
வேதனமின்றி
தொடர் வேலை செய்வார்கள்,
மனித உடலுக்கு
ஓய்வளித்து
கணனி மனிதன் மூலம்
நாட்டை வளப்படுத்துவோம்

எங்கள் நவீன சிந்தனைக்கு
இன்றைய வகுப்பறைகளும்
உபகரணங்களும்
பொருத்தமற்றவையே!
கரும்பலகையும் எழுதுகோலும்
எங்கள் விவேக சிந்தனைக்கு
ஆப்புவைக்கின்றன
எமது எதிர்கால உலகம்
இவற்றுக்கு பென்ஸன் வழங்கும்
வகுப்பறைகள்
கணனிமயமாக்கப்படும்.
நாங்கள் சுயமாகச்சிந்திப்போம்,
சுயமாகத் தொழிற்படுவோம்,
ஆய்வுகள் நடத்துவோம்.
எல்லாப் பாடசாலைகளிலும்
ஆய்வுகூடங்கள் நிறுவுவோம்
ஆங்கிலேயரும் வியக்குமளவு
எமது ஆற்றல் வெளிக்கொணரப்படும்.
நாங்கள்
இருபத்தோராம் நூற்றாண்டை அடைந்த
நவீன மாணவர்கள்!!!

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

# மட்டக்களப்புப் பிரதேசப் பாடசாலைச் சஞ்சிகைகள் ஒரு கண்ணோட்டம்

**- கலாநிதி செ. யோகராசா -**

பாடசாலைக் கல்வி என்பது, கலைத் திட்டத்திற்கமைவான கல்விப் போதனைக்கப்பால் மாணவரது பல்வேறு ஆளுமைகள், ஆற்றல்கள் என்பவற்றை இனங்கண்டு வளர்த்தெடுப்பதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கமைவாக, பாடசாலைகளில் வருடாந்த விளையாட்டுப் போட்டி, மாணவர்மன்றம், கலைவிழா, பொருட்காட்சி, கல்விச்சுற்றுலா முதலியன இடம் பெறுகின்றன. சாரணர் இயக்கம் முதலியன செயற்படுகின்றன, சஞ்சிகைகள் வெளியிடப்படு கின்றன. இவற்றுள், குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசப் பாடசாலைச் சஞ்சிகைகள் பற்றிச் சிலகுறிப்புகள் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.

மட்டக்களப்பு பிரதேசப் பாடசாலைச் சஞ்சிகைகளைப் பொறுத்தவரையில் அதன் வரலாறு (எனது ஆய்வின்படி) ஏறத்தாழ ஐம்பதாண்டுகளைக் கண்டுள்ளது. மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி வெளியிட்ட **'ஜெயசேகரி'** (1946)யிலிருந்து அவ்வரலாறு தொடங்குகிறது ஆரம்பநிலையில் இத்தகைய சஞ்சிகைகள் கையெழுத்து வடிவிலேயே வெளிவந்துள்ளன. பின்னர் அச்சுருப்பெற்று இன்று ஒட்டமாவடி ம. ம. வித்தியாலயம் (உதயநிலா) தொடக்கம் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி (அணையாவிளக்கு) வரை ஏறத்தாழ 25 சஞ்சிகைகளளவில் வெளிவருகின்றன. கடந்த மூன்றாண்டுகளாக வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இவ்விருமாகாண பாடசாலைகளுக்கு இடையிலே நடத்தி வருகின்ற பாடசாலைச் சஞ்சிகைப் போட்டியிலும் இப்பிரதேசப் பாடசாலைகள் பல ஆர்வத்துடன் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய (போட்டிக்கு அனுப்பப்படும் சஞ்சிகைகள் தவிர ஏனைய) பாடசாலைச் சஞ்சிகைகளைக் கவனத்தில் எடுக்கும்போது உள்ளடக்க அடிப்படையில் அவற்றை மூன்று வகைப்படுத்த முடிகின்றது. அவையாவன

(அ) மாணவரதும், ஆசிரியரதும் ஆக்கங்களைத் தாங்கி வருவதுடன் அதற்குச் சமமாக பாடசாலை தொடர்பான விடயங்களையும் கொண்டமைவன. மட்டக்களப்புப் பிரதேசத்திலே வெளிவருவனவற்றுள் இவையே கணிசமானவை.

(ஆ) பாடசாலை தொடர்பான விடயங்கள் அதிகமாகவும் மாணவரதும் ஆசிரியரதும் ஆக்கங்கள் குறைவாகவும் கொண்ட மைவன.

(இ) மாணவரது ஆளுமையையும், ஆற்றலையும் வளர்ப்பதனை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு அவர்களது படைப்புகளை மட்டுமே தாங்கி வெளிவருவன இத்தகைய பாடசாலைச் சஞ்சிகைகள் அபூர்வமாகவே வெளிவந்துள்ளன. இவ்விதத்தில் மட்டக்களப்பு கோட்டைமுனை மகா வித்தியாலயம் (தவணை இதழாக 1987 ஆம் ஆண்டுப் பகுதியிலே) வெளியிட்ட **'பரணி'** விதந்துரைக்கப்பட வேண்டியது.

இனி மேலே வகைப்படுத்திய மூன்று வகைப்பட்ட பாடசாலைச் சஞ்சிகைகளிலும் இடம் பெறுகின்ற விடயங்கள் பற்றிக் கவனிப்பது பொருத்தமானது.

மாணவர்களது ஆக்கங்கள் என்கின்றபோது முக்கியமாக இடம்பெறுபவை கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என்பனவே. இவை இருவகைகளில் தெரிவுசெய்யப்படுகின்றன.

(I) பாடசாலைப் போட்டிகளிலோ பொதுப்போட்டிகளிலோ (எ-டு தமிழ்த்தினப் போட்டி) தெரிவுசெய்யப்படுவனவற்றைப் பிரசுரித்தல்

(II) சஞ்சிகைக்காகவே எழுதப்படுவனவற்றைப் பிரசுரித்தல்

தவிர மாணவர் தேடித்தொகுத்தளிக்கும் பொன்மொழிகள், பொது அறிவுக்

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச்செயல்.

கேள்விகள், துணுக்குகள், விடுகதைகள் முதலியனவையும் இச்சஞ்சிகைகளின் வெற்றிடங்களை நிரப்பி வருகின்றன.

ஆசிரியரது ஆக்கங்கள் பெருமளவு கட்டுரைகளாகவே உள்ளன. இவை ஏதோவிதத்தில் பாடத்திட்டத்திலடங்கும் விடயங்கள் பற்றியனவாகவுள்ளன.

பாடசாலை தொடர்பான விடயங்கள் என்கின்றபோது மன்ற அறிக்கைகள், போட்டிமுடிவுகள், மாணவத்தலைவர் பற்றிய விபரங்கள், சிறந்த பரீட்சைப் பெறுபேறுபற்றிய விவரங்கள் (சில சந்தர்ப்பங்களில் பாடசாலை வரலாறு) முதலியன அடங்குகின்றன.

(III) ஆற்றல் வாய்ந்த மாணவர்கள் இனங் காணப்படுமிடத்து தொடர்ந்து அடுத்தடுத்த வருடங்களிலும் எழுதத் தூண்டலாம் தவிர, அத்தகைய மாணவர்களை பத்திரிகைகளுக்கு எழுதியனுப்பவும் ஆற்றுப்படுத்தலாம்.

(IV) ஒவ்வொரு சஞ்சிகைகளையும் விமர்சனத்திற்குட்படுத்த வேண்டும். மாணவர்களைப் பாராட்டுவது அவசியமாயினும் நாசூக்காக அவர்களது படைப்புக் குறைகளை உணர்த்துவது அவசியமே.

(V) மாணவரது ஆக்கங்களை வருட ஆரம்பத்திலேயே பெறத் தொடங்குவது பயன்மிக்கது.

(VI) இவ்வாறு நோக்கும்போது ஆசிரிய குழாம் சஞ்சிகை தொடர்பாகத் திட்டமிட்டுச் செயற்படுவது முக்கியத்துவம் பெறுகின்றது.

(VII) ஆசிரியர்களது ஆக்கங்கள் என்கின்றபோது பாடசாலை ஆசிரியர்களிட மிருந்து மட்டுமன்றி வேறு உயர்கல்வி நிறுவன ஆசிரியர்களிடமிருந்து ஆக்கங்களைப் பெறுவதில் கவனஞ் செலுத்துவதும் அவசியமாகும் 'ஏர்' (98,99) பூபாளம் (98) ஆகியன சஞ்சிகைகள் இவ்வாறு செயற்பட்டு வருகின்றன. ஆயினும் இவ்வாறு பெறப்படுவன மாணவர்களுக்குப் பயன்படுமாறு அமைவது உவப்பிற்குரியது. (உதாரணமாக கலைப்பிரிவில் தமிழ் படிக்கும் மாணவர்களெனில் **'சமகால ஈழத்து இலக்கியச் செல் நெறிகள்'** தொடர்பாக எழுதும்படி பல்கலைக்கழக ஆசிரியர்களை கேட்கலாம்)

(VIII) பாடசாலைச் சஞ்சிகைகளுக்கு நிதிப்பிரச்சினை இருக்கின்ற நிலைமில் பாரம்பரியச் சடங்கு சம்பிரதாயங்களுக்கு (எ-டு ஆசியுரை, வாழ்த்துரை) அவை ஆட்படுவது தவிர்க்கப்படவேண்டும். வேண்டுமாயின், இரண்டொரு வாக்கியங்களில் வலயக் கல்வி அதிகாரிகள் (பெயர்களைக் குறிப்பிட்டு) வாழ்த்துகின்றார் என்று குறிப்பிடலாம். இவ்விடத்தில் ஒரு பிரபல பாடசாலையில் 56 பக்கங்களுடன் வெளிவந்த (1993) சஞ்சிகையில் சடங்கு சம்பிரதாயங்களுக்கு 05 பக்கங்களும் மாணவர் தலைவர் விவரம் பரீட்சை, விளையாட்டுப்போட்டி முடிவுகளுக்கு 07 பக்கங்களும் ஆக 12 பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளமை நினைவிற்கு வருகின்றது. அடுத்து மதிப்பீட்டு நோக்கில் மேற்கூறிய உள்ளடக்கங்கள் பற்றி அவதானிப்பது அவசியமாகின்றது.

மாணவரது கட்டுரைகள் பொதுவாக அவசரத் தயாரிப்புகளாக உள்ளன. அல்லது வகுப்பறையிலே எழுதியவையாக உள்ளன. அன்றேல் மறு அவதாரங்களாக அமைகின்றன ஆயினும் பல சந்தர்ப்பங்களில் மாணவரது கவிதைகள் சிறந்த இளங்கலைஞர்களை இனங்காட்டுவனவாக அமைவதுண்டு. (எ-டு ஸ்ரீ மகாவிஷ்ணு வித்தியாலயத்தின் 'ஏர்' **சஞ்சிகையிலே (1998) சி. அரியதாசன் எழுதிய "ஞாபகமா உனக்கு?"** என்ற கவிதை)

எனினும் மாணவர் எழுதும் '**சிறுகதை**'கள் பெரும்பாலும் '**கதை**'களாகவே காட்சிதருகின்றன. (ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களே சிறுகதை என்ற பெயரில் **கதை**'களை எழுதும்போது இவர்கள் மன்னிக்கப்படக் கூடியவர்களே)

மாணவர் தொகுத்தளிக்கும் பொது அறிவுக்கேள்விகள் பெரும்பாலும் பாடநூல்கள் சார்ந்தனவாக விளங்குவது கண்கூடு.

இனி இத்தகைய பாடசாலைச் சஞ்சிகைகள் ஆரோக்கியமானவிதத்தில் எதிர்காலத்தில் எவ்வெவ்விதங்களில் மாற்றம் பெறமுடியுமென்ற வினா எழுகின்றது. இத்தொடர்பில் பின்வரும் அம்சங்களைக் குறிப்பிடுவது பொருத்தமானதென்று கருதுகின்றேன்.

(i) மாணவரது படைப்புகள் ஆசிரியர்களது திருத்தங்களுக்குட்பட வேண்டும்.

ஆற்றின் அளவறிந்து ஈக அது பொருள் போற்றி வழங்கும் நெறி.

(ii) மாணவர்களது படைப்புகள் சில சந்தர்ப்பங்களில் சொந்த ஆக்கங்களாக இல்லாதிருப்பது நாமறிந்ததே. இயன்றவரையில் இத்தகைய சந்தர்ப்பங்களைத் (தவறுகளைக்) குறைக்க முயல வேண்டும்.

(iii) கட்டுரை, சிறுகதை, கவிதை தவிர நாடகங்கள் எழுதும்படி தூண்ட வேண்டும் (சிறந்த நாடகப் பிரதி கிடைப்பின் தமிழ்த் தினப் போட்டிகளுக்குக் கூட பயன்படுத்த முடியும்) விமர்சனக்கட்டுரைகள் எழுதுவதிலும் சிரத்தை ஏற்படுத்த வேண்டும்.

இறுதியாக பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகளது உரத்த சிந்தனைக்கு ஒரு விடயத்தை முன்வைக்க விரும்புகின்றேன். **'பாடசாலைச் சஞ்சிகை'** என்பது

(i) மாணவர்களது ஆக்கங்களுக்கா?

(ii) அவற்றோடு ஆசிரியர்களது ஆக்கங்களுக்கா?

(iii) அவற்றோடு பாடசாலை பற்றிய ஆக்கங்களுக்குமா? இவற்றுள் எதனை முதன்மைப்படுத்த வேண்டும் என்பதே அவ்விடயமாகும்.

முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக விளங்கிய திரு. கே. தியாகராஜா அவர்கள் ஒருதடவை அர்த்த புஷ்டியுடன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமையை எடுத்தாண்டு இக்கட்டுரையை முழுமை செய்வது பொருத்தமானது.

**"ஒரு பாடசாலையின் பூரணத்துவம் அதன் சஞ்சிகை வடிவில் தெரிய வரும் என்று கூறுவது பிழையாகாது"**

**************************************

## விசேட வகுப்புகள்

*மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் வலயக் கல்வி அலுவலகம், கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளான மட்/ கரடியனாறு ம.வி., மட்/ மகிழவட்டவான் ம.வி, மட்/ கன்னன்குடா ம . வி. ஆகியவற்றின் 2000ம் ஆண்டில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு தங்குமிட வசதியுடன் கூடிய மேலதிக வகுப்புக்களை கல்லடி கல்விச் செயற்பாட்டுத் தொகுதியில் சுமார் 19 தினங்கள் நடாத்தி முடித்துள்ளது. இதன் மூலம் இப்பகுதி மாணவர்கள் பெரிதும் நன்மை பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.*

# புதிய கல்விச் சீர்திருத்தங்களில் வாழ்க்கைத்தேர்ச்சிகள் பாடம்

திருமதி. ரீ. அருட்ஜோதி முதன்மை ஆசிரியர் - வாழ்க்கைத் தேர்ச்சிகள்

கல்வியை வாழ்க்கையிலிருந்து வேறுபடுத்த முடியாது. ஆயினும் இதுவரை எம் நாட்டில் மாணவர்க்கு வழங்கப்பட்ட கல்வி பல்கலைக்கழகப் பிரவேசத்தை மட்டும் கவனத்தில் கொண்டுள்ளமை கண்கூடு. அதேவேளை உயர்கல்வி பெறும் வாய்ப்பினை இழந்த எத்தனையோ இளம் தலைமுறையினர் தாம் சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படும் நிலைக்குத் தம்மை வளர்த்துக் கொள்ள முடியவில்லையே என ஏங்கித் தடுமாறுகின்றனர். இப்படிப்பட்ட நிலைமையைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு மாணவனும் தான் யார்? தனது பொறுப்பு என்ன? எதிர்காலச் சமுதாயத்தில் தன் நிலைப்பாடு எது? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காணத்தூண்டும் பாடமாக வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடம் புதிய கல்விச் சீர்திருத்தங்களில் அறிமுகப்படுத்தப்படுகிறது. அவ்வாறாக நிதானமாக ஒழுக்கமுடைய நல்லதொரு சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் நோக்குடன் 1999ம் ஆண்டு வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடம் தரம் 9ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாண்டு தரம் 7லும், 2001ம் ஆண்டில் தரம் 8லும் இப்பாடம் கற்பிக்கப்படும்.

## வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடத்தின் நோக்கங்கள்

ஒவ்வொரு மாணவரும் தன்னைப் பற்றிய தெளிவான அறிவினைப் பெற்று வாழ்க்கையின் உயர்வினை அடையத் தக்க தேர்ச்சிகளைப் பெறுதல்

தன்னைச் சமூகத்துக்குப் பொருத்தப் பாடடையச் செய்யத்தக்க நற்பண்புகளான சாதகமான தொடர்பாடல், கூட்டுணர்வுடன் சேவை செய்தல் முதலான தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.

தனக்கும் சமூகத்திற்கும் பயன்தரு கற்றற் தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.

ஒவ்வொருவரும் எதிர்காலத்தில் தமக்குப் பொருத்தமான தொழில் பற்றிய அறிவைப் பெறுதலும் அப் பாதையில் தம்மைப் பொருத்தப்பாடடையச் செய்தலுமாகும்.

மாணவர்களது ஆக்கபூர்வமான சிந்தனைகளைத் தூண்டவும், படைப் பாற்றல்களையும், ஆக்கத்திறன்களையும் மேம்படுத்தவும், சிறந்த பொருத்தமான ஆளிடைத் தொடர்புகளை ஏற்படுத்தவும், சமூக மேம்பாட்டுக்கு ஒத்துழைத்து தன் சமத்துவத்தைப் பேணவும், மொத்தத்தில் ஒவ்வொருவரும் தம் ஆளுமையை வளர்க்க இப்பாடம் வழிகாட்டுகிறது.

## வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடக்கற்பித்தல்

இப்பாடம் கற்பிக்கப்படும்போது ஆசிரிய மாணவர் தொடர்பில் மிகுந்த நெகிழ்ச்சித்தன்மை காணப்படல் அவசியம் அதாவது மாணவன் ஆற்றலை மேம்படுத்தி அவன் ஆளுமையை வளர்க்கத்தக்க முறைகளில் கற்றல் - கற்பித்தல் நடைபெறவேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. இங்கு விரிவுரைகள், கருத்தரங்குகள் முற்றாகத் தவிர்க்கப்பட்டு தற்கால உலகுக்கு பொருத்தமான

தத்தம் மாணவர்கள் எதிர்பார்க்கும் நோக்கத்தை அடையச் செய்யத்தக்க துடிப்புள்ள கற்பித்தல் முறையே பொருத்தமானது. ஆசிரியர்கள் ஒவ்வொரு வரும் மாணவர்க்கு வழிகாட்டுபவராக மட்டுமல்ல செயலிலீடுபடுபவராக மாறி மாணவரின் பல்வேறு திறன்களை இனங்கண்டு அவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

**வளப்பயன்பாடு :**

இப்பாடத்திற்கு நான்கு சுவர்களும் கதிரை மேசைகளுடனுமான வகுப்பறைச் சூழல் அவசியமற்றது. பல்வேறு திறன்களை ஊக்குவிக்கத்தக்க இயற்கைச் சூழல்களும் விவசாயக் காணிகளும், செயற்பாட்டறைகளுமே பெரிதும் உதவத்தக்கவை. ஆசிரியரால் நெறிப்படுத்தப்படும் மாணவர்கள் ஒவ்வொரு அலகு மூலமும் தாம் பெற்ற அனுபவங்களை வெளிக்கள வேலைப் புத்தகத்திலும் பயிற்சிப் புத்தகத்திலும் தம்மாலியன்றவரை வடித்துக் காட்டுவர். அதற்காக ஆசிரியர்கள் தத்தம் மாணவர்க்குப் பொருத்தமான கற்பித்தல் முறையைக் கையாண்டு மாணவர் தேர்ச்சிகளை விருத்தியடைய வழி காட்டுவர். கற்றல் - கற்பித்தல் நடைபெறும்போது பாடசாலை வளங்கள் மட்டுமல்ல வெளிவாரி நிறுவனங்கள் ஆற்றல் மிக்க தனிப்பட்ட நபர்கள் என்போரினது உதவியையும் பெற்றுக் கொள்ளல் பயன்மிக்கதாகும்.

**கணிப்பீடு :**

இப்பாடத்திட்டத்தில் பெரும் பாலும் மனப்பாங்கு விருத்தி, செய்முறைகள், தேர்ச்சிகள் என்பவற்றை ஊக்குவிக்கத்தக்க அலகுகளே கற்பிக்கப் படுகின்றன. ஆதலால் இங்கு கணிப்பீடு எழுத்துப் பரீட்சை முறையிலமையாது ஆனாலும் ஒவ்வொரு அலகினையும் கற்பித்த பின்னர் மாணவர் அடைவினை மதிப்பிட தனக்குகந்ததொரு கணிப்பீட்டு முறையைக் கையாளலாம் பொதுவாக தொடர் மதிப்பீடு நேர்முகப்பரீட்சை, நியம அளவீடு, பயிற்சிப் புத்தகம், வெளிக்களப் புத்தகம் என்பன பேணல் முதலான வழிகளில் மாணவர்களை மதிப்பிட முடியும். எவ்வாறாயினும் மாணவர்க்குப் பொருத்தமான முறையில் ஒவ்வொரு மாணவரும் அவதானிக்கப்பட்டு கணிப்பீடு நடைபெற்று வருட இறுதியில் மதிப்பீட் டறிக்கை மாணவர்க்கு வழங்கப் படல் வேண்டும்.

**அடைவுகள் :**

வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடம் பாடசாலைகளில் முறையாகக் கற்பிக்க ப்படுமேயாயின் எதிர்காலத்தில் சிறந்த தொரு சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும் என்பதில் ஐயமில்லை. இப்பாடத்தில் உள்ள ஒவ்வொரு அலகிலும் ஒவ்வொரு தேர்ச்சி மிக நுட்பமாகப் புலப்படுத்தப்படுகிறது. மாணவர்களிடமுள்ள எளிதான தொழில் நுட்பத் தேர்ச்சிகள் வளர்க்கப்படும் நோக்குடைய இப்பாடம் துடிப்புள்ள ஆசிரியர்களால் உயிர்ப்புடன் கற்பிக்கப் படுதலும் - அதற்குப் பாடசாலைக் கொள்கைகளும் மேற்பார்வையும் இணக்கமாக அமைதலும் மிக அவசிய மானவைகளாகும்.

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

# உடற்கல்வியின் முக்கியத்துவம்

**எம். குருகுலசிங்கம்** - உதவிக் கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி)

ஆயிரம் கலைகள் தோன்றினாலும் அற்புதமான விஞ்ஞான முன்னேற்றத்தினை நிகழ்த்தினாலும், அத்தனை சுகத்தினையும் அனுபவிக்க உடல் மிக முக்கியமானது. அந்த உடலினைக் காக்கும் கலையில் உடற் கல்வியானது உலகில் மிக முன்னணியில் நிற்கின்றது.

உடற் கல்வியானது பல உபாயங்களைக் காட்டுகின்றது. உண்மையான ஆரோக்கியத்தினை அறிந்து ஆனந்தத்தினை வளர்த்து அதிசயமாக வாழ வழிகாட்டுகின்றது இதன் நிமித்தம் உடற்கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

எங்கள் மூதாதையோர் விவசாயம் செய்தல், கட்டிடங்கள் கட்டுதல், குளங்கள் அமைத்தல், பூ வேலைப்பாடுகள் செய்தல் போன்ற உடலை வருத்தும் செயல்களில் ஈடுபட்டனர். அவர்களின் உடல்நலத்தைப் பேணிக்கொள்ள அவ்வுடல் வருத்தும் செயற்பாடுகள் உதவின. எனினும் தற்கால சமுதாயத்தில் அதிகமானோர் உடற் செயற்பாடுகளற்ற தொழில்களில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறான தொழில்களில் ஈடுபடுவோருக்கு குறைந்த பட்சம் ஓடுதல், பாய்தல், எறிதல், ஏறுதல் போன்ற சிலச் செயற்பாடுகளாவது தேவை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தினமும் ஏதாவது ஒரு நேரத்தில் தொழிலாளர்களை உடற்பயிற்சியில் ஈடுபடுத்துவதால் உற்பத்தியை அதிகரிக்க எடுத்த முயற்சி ஜேர்மன் வரலாற்றில் அறியக் கூடியதாக இருக்கின்றது. அலுவலகங்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்வோரை வேலை செய்யும் நேரத்தில் பத்து நிமிடம் நேரம் ஒதுக்கப்பட்டது. முற்பகல் வேலை நேரத்தில் குறித்த நேரத்தில் கொடுக்கப்படும் அடையாள அறிவிப்புடன் எல்லோரும் வெளியே வந்து ஏதாகிலும் ஒரு அப்பியாசத்தில் ஈடுபட்டனர். இதற்காக சங்கீதமும் வழங்கப்பட்டது என சொல்லப்படுகின்றது. உடற்பயிற்சி முடிந்த பின்னர் வேலைகளில் ஈடுபட்டனர். இதனால் கூடிய செயற்திறனை அடையக்கூடியதாக இருந்தது. இந் நிறுவனம் மனிதனின் செயற்திறனை அதிகரிப்பதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்ததென்பது இதனால் விளங்குகின்றது.

இலங்கையில் உடற்கல்வி ஓர் உயர்ந்த நிலையில் இல்லாமைக்கான காரணத்தை சிந்தித்துப் பார்த்தோமேயானால் எமது வளங்கள் மிக வரையறுக்கப்பட்டவை உடற்கல்வியின் முக்கியத்துவத்தை சிறப்பை அறிந்தவர்கள் மிகச்சிலரே. தொழில்களை பெறுக் கொள்வதன் பொருட்டு அறிவை மேம்படுத்தும் போட்டியினால் பாடசாலை மாணவர்களுக்கு உடற்செயற்பாடுகளில் ஈடுபட போதிய நேரமில்லை. பெரும்பாலான கல்வியாளர்களும், ஆசிரியர்களும், கல்வி தொடர்பான பட்டம், பட்டமேற்படிப்பு மட்டங்களில் இப்பாடத்திலுள்ள முக்கியத்து வத்தை குறிப்பிட்டு எழுதியுள்ளார்கள். இருந்தபோதிலும் நிர்வாகப் பகுதி தன்வசம் ஆனபின் அதை செயற்படுத்தாது விடுவது மாத்திரமல்ல அதற்கு தடையும் போடுகிறார்கள்.

எனினும் அபிவிருத்தி நாடுகள் இப்பாடம் தொடர்பாகக்காட்டும் அக்கறையை நோக்குவோமேயானால் அவர்கள் உடல் கல்வியின் உதவியினால் பொருளாதார சமுக நலன்களை அடைகிறார்கள் மனித உழைப்பை அதி உயர்மட்டத்தில் நடைமுறைப்படுத்திச் செல்வதற்கும். உற்பத்தியை பெருக்குவதற்கும் உள ஆரோக்கியமான பயனுள்ள பிரசைகளை உருவாக்குவதற்கும் துணிச்சலான போட்டியிடும் தன்மையை உண்டாக்கு வதற்கும் சிறந்த முகாமையாளர்களை உருவாக்கவும் உடற்கல்வியைப் பயன்படுத்து கின்றார்கள்.

மனித உடலின் என்புகள், தசை நரம்பு, குருதி, சுவாசம், சமிபாடு, கழிவகற்றல், அகஞ்சுரக்கும் சுரப்பிகள், பிறப்பு உறுப்புகளின்

செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங்கொளல்.

வளர்ச்சி, வேகம், உடற்சமநிலை, செயற்திறன், கலங்களின் சக்தி போன்றவற்றை உடற் செயற்பாடுகளின் மூலம் ஏற்படுத்திக் கொள்ளலாம். தொடர் செயற்பாட்டிற்காக நரம்பு. தசைகளின் சமநிலையும், தசை ஆக்கமும் பெற்றுக் கொடுக்க முடியும். நரம்பிழையத் தொகுதிக்கு பெற்றுக் கொடுக்கப்படும் உடற்பயிற்சியினால் இருதய நோய்கள் குறைக்கப்படுவதோடு கடின உழைப்புத் தன்மையும் கிடைக்கும். உடற் செயற்பாடும் முன்னேற்றமடையும். குறைந்த உழைப்பில் வேலை செய்யக்கூடிய செயற்பாடுகள் இதனை தவிர வேறு முறைகளில் பெற்றுக் கொள்ளமுடியாது.

உடற்றகமையில் உள்ளடக்கப்படும் வேகம், சக்தி, தாங்குமியல்பு, நெகிழும் தன்மை, சமநிலை என்பவற்றைக் கொடுக்கும் கைகண்ட மருந்து உடற்செயற்பாடுகளாகும். நீண்ட காலம் வாலிபத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் அதிக இதயத்துடிப்பு, தேவையற்ற பருத்த உடல் தன்மையிலிருந்து மீளவும் உடற்செயற்பாடுகள் அவசியமாகும். தனியாள் மனவெழுச்சிக் கட்டுப்பாட்டுக்காகப் பெறப்பட்ட இடம் விளையாட்டு மைதானமாகும்.

விளையாட்டு செயற்பாடுகள் மூலம் பயம், சோர்வுத் தன்மை, வெட்கம் என்பன அற்றுப்போகும் பொறுமை, வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளல் மத்தியஸ்தரின் தீர்ப்பினை ஏற்றல் ஆகியவற்றைப் பழகிக் கொள்ள முடியும்.

(மனிதனின் கூர்ப்பிற்கேற்ப அவனுடைய நிலைப்பாடு) மனித கூர்ப்பில் அவனுக்குப் பொருந்தும் சுத்தமான காற்று, சூரிய வெளிச்சம், சத்துள்ள உணவு, வெளியகம் போன்ற பலதரப்பட்ட செயற்பாடுகளினால் பூரணமான சூழலுக்கு ஆளாகின்றான் இயற்கையிலேயே அவன் ஜீவனாகும். அவனும் இந்நிலைப்பாட்டில் அதிக உள மனவெழுச்சியுடையதுமான இடையூறு களைக் கொண்டு தரும் சூழ் நிலையை விட எந்நேரமும் உடற்செயற்பாடுகள் சுற்றாடலில் வாழ்வதற்கு அவன் அதிக பொருத்தமாக வுள்ளான் உயிரியல் விஞ்ஞான முறையில் அவனை இச் சூழலிருந்து அப்புறப்படுத்தல் மனித விருத்திக்கும், நன் நிகழ்ச்சிக்கும் பொருத்தமற்றது. அதனால் உடற்கல்வியின் மூலம் இக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது. நடுத்தர வயதிலேற்படும் பழமையான நோய்கள் மனவெழுச்சித் தாக்கத்துடன் கூடிய நரம்புத்தொகுதித் தளர்ச்சிகளும் அசைவுகளின் தளர்ச்சித் தன்மைகள் அதிகரித்துக் கொண்டிருக்கும். உடற்செயற்திறன்கள் குறைவடையும் அறிவு தொடர்பாக மாத்திரம் கவனம் செலுத்துவதால் தனி ஆள் விருத்தி முடிவடைந்த வேகமாகும். அக்குறைபாடுகளை சமாளித்துக் கொள்வதற்கு உடற்கல்வி அவசியமாகின்றது.

மனிதனின் கணத்தாக்கம் அல்லது தூண்டலுக்குட்பட்ட பலதரப்பட்ட செயற்பாடுகளுக்கு அடிப்படையாவது பரம்பரை பழக்க வழக்கங்களாகும் ஆகவே பிள்ளைகள் உண்டாகியிருப்பது எலும்பு, தசைகளினால் மாத்திரமல்ல. ஓடுதல், எறிதல்,. மிதத்தல், ஏறுதல், தொங்குதல் ஆகிய செய்கைகளின் மூலம் அசைவுகளில் ஈடுபடுத்தல் பிள்ளைகளிடத்திலுள்ள எதிர்பார்ப்புடன் உடற்கல்வி தொடங்கப்படுகிறது என்பது உண்மையாகும். உடற் கல்வி மூலம் உடல் ரீதியாகப் பூரணமாக்கப்பட்டதும் உளவியல் ரீதியாக ஊக்கமளிப்பதும். திருப்தி அடைதலுமான. சமுகரீதியில் பொருத்தப்பாடும். சந்தர்ப்பங்களில் பங்குபற்றுவதற்காகத் தனி நபருக்கு அல்லது குழுக்களுக்கு விவேகமுள்ள தலைமைத்துவம், போதியளவு வசதிகளும், போதியளவு சந்தர்ப்பத்தையும் பெற்றுக் கொடுத்து நாட்டிற்கு நட்பிரஜையை உருவாக்க முடிகின்றது.

கல்லைச் செதுக்கி தன் கற்பனையுடன் சிலையை வடித்துக் காட்டுகின்ற சிற்பியைப் போல மனித உள்ளங்களை கல்வியின் மூலம் செப்பனிட்டு சீரமைப்படுத்தி சிறப்பு நிலைக்கு உயர்த்துவது உடற்கல்வியாகும் என்பதில் ஐயமில்லை.

# நீண்ட பயணத்தை நம் சூழலில் இருந்து ஆரம்பிப்போம்

பேராசிரியர் சி. மௌனகுரு

அண்டப் பெருவெளியில் உள்ள பல்கோடிக்கணக்கான சூரியக் குடும்பங்களுள் ஒரு சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த புவிக் கோளத்திலே மனித இனம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இப்புவியில் வாழும் பல்கோடி உயிரினங்களுள் மனிதரும் ஓர் உயிரினமாகும்.

சூழலுக்கும், அதாவது இயற்கைக்கும் மனிதருக்கும் உள்ள உறவு முக்கியமான உறவாகும். உறவென்பதை விட இயற்கையின் ஒரு கூறே மனிதரெனலாம். இதனை விஞ்ஞானம் விளக்கும்.

கூர்ப்பு முறையிலே வளர்ச்சியினை மனித இனம் பெற்றதென்பர். கூர்ப்பு என்பதனைப் பரிணாமம் எனவும், உள்ளது சிறத்தல் எனவும் அழைப்பர். உள்ளது சிறந்து மேலும் இன்னொரு நிலைக்குச் செல்வதே கூர்ப்பு ஆகும்.

ஜடத்தின் ஒரு கூர்ப்பு தான் உயிர் என்கிறது விஞ்ஞான ஆய்வு. தண்ணீர் ஆவி என்ற நிலைக்குக் கூர்ப்படைந்து குணாம்ச மாற்றம் பெற்றது போல ஜடம் கூர்ப்படைந்து உயிரானது என்கிறது மெய்யியல் (Philosophy).

இந்த உயிரின் கூர்ப்பில் மனிதர் தோன்றினர் என்கிறது விஞ்ஞானம் (Science) அப்புராதன மனிதர்களின் தன்மை, தோற்றம் என்பதை விளக்குகிறது மானிடவியல் (Anthropology) இங்கே ஜடமாகிய இயற்கையே மனிதராக மாறிய வரலாற்றைக் காண்கின்றோம். இதை மதங்கள் வேறு வகையாக விளக்கின. இயற்கையைக் கடவுளாக அவை உருவகித்தன. பகவத்கீதையில் கண்ணன் உலகின் அனைத்தும் நானே என்கின்றான்.

இவ்வுலகமும் பிரபஞ்சமும் தோன்றி 15 பில்லியன் ஆண்டுகளாகின்றன என்பர் வானவியலாளர். ஒரு பில்லியன் ஆண்டு என்பது ஆயிரம் கோடி ஆண்டு. இத்தனைக்கும் மனிதரின் வயதெல்லை, நோய் நொடியின்றி முழுவாழ்வு வாழ்ந்தால் ஆக எண்பதே ஆண்டுகள் தான்.

பல ஆயிரம் கோடி வயதுடைய உலகமும் எண்பதே ஆண்டு வயதுடைய மனிதரும்.

பிரமாண்ட தோற்றமும், நீண்ட வயதுமுடைய இந்த உலகில் அற்பமான மிக மிக அற்பமான இந்த மனிதரால் தான் உலகுக்கு ஒரு அர்த்தப்பாடு கிடைக்கிறது. இப் பிரபஞ்சத்தினதும் உலகத்தினதும் மிக நீண்ட கால வரலாற்றைச் சுருக்கமாக அறியும் பொருட்டு கார்ல்சாகன் (Carlsagan) என்பவர் ஒரு கலண்டர் முறையை வகுத்தார்.

"A Cosmic Calander" என்ற தன் கட்டுரையில் 15 பில்லியன் ஆண்டுகளை ஓராண்டாகச் சுருக்கி விட்டார்.

இத்திட்டத்தில் ஜனவரி முதலாம் நாள் வான்கங்கை தோன்றியதாகவும், செப்டம்பர் 25ம் நாள் முதல் உயிரினம் தோன்றியதாகவும் அவ்வுயிரினத்தின் கூற்றில் டிசம்பர் 31ம் திகதி இரவு 10.30க்கு முதல் மனிதன் தோன்றியதாகவும் சாகன் குறிப்பிடுகின்றார். எனவே மனிதர் தோன்றி வாழ்ந்த காலம் எவ்வளவு குறைவானது என்பது இதனால் புலனாகின்றது.

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச்செயல்.

உலக வரலாற்றோடு ஒப்பிடுகையில் ஒரு வருட வரலாற்றில் மனித வரலாறு ஆக எட்டு மணிநேர வரலாறு தான். கார்ல்சாகரின் கலண்டரின் படி 8380 மணிநேர வரலாறு உடைய உலகத்தில் மனிதனின் வரலாறு 8 மணிநேரம் தான்.

இந்த மிகக் குறைந்த கால வாழ்வு கொண்ட தனது வரலாற்றில் 80 வயது வரையும் வாழக்கூடிய இயற்கை அமைப்புக் கொண்ட உயிரியான இந்த மனிதர் தான் உலகத்தை ஆரம்பத்தில் விளங்கிக் கொண்டிருக்கின்றனர். விளங்கிக் கொண்ட படியினால் தான் இயற்கையின் உட்பாதங்களில் இருந்து தப்பி அம்மனிதரால் வாழ முடிந்திருக்கின்றது. ஏனைய பழைய உயிரினங்கள் அழிந்து விட மனிதராகிய இவ்வுயிரினம் அழியாமல் இன்றும் இருக்கக் காரணம் இதுவே.

இவ்வுயிரி தான் இயற்கையை விளக்கவும் முனைந்துள்ளது. தம் முன் பரந்து கிடந்த இயற்கையை விளக்க முற்பட்டபோது தான் மதமும் விஞ்ஞானமும் பிறந்தன. மதம் ஒரு வகையாக இயற்கையை விளக்கியது. விஞ்ஞானம் இன்னொரு வகையாக இயற்கையை விளக்கியது. மதம் உள்ளத்திற்கு ஆறுதல் தந்தது. விஞ்ஞானம் உடலுக்குச் சுகங்களை ஏற்படுத்தியது.

இவ்வுயிரிதான் இயற்கையை மாற்ற முனைந்தது. இயற்கையை மாற்ற முனைந்தபோது நாகரிகங்கள் வளர்ந்தன. மனித நாகரிக அபிவிருத்தி வளர்ச்சி நடைபெற ஆரம்பித்தது.

இவ்வுயிரிதான் இயற்கையை அழிக்க முனைந்தது. அழிக்க ஆரம்பித்த பின்னர் தான் நாகரிகங்கள் தோன்றின. மனித நாகரிக வளர்ச்சி மனிதரிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்தது. இதனால் போர்கள் எழுந்தன. திட்டமில்லாத அபிவிருத்தி, போர் ஆக்கிரமிப்பு என்பன இயற்கை அழிவில் மனித இனத்தை ஈடுபடுத்தியது. இன்று மனித இனம் இயற்கை அழிவால் ஏற்படும் பயங்கர ஆபத்தை உணர்ந்துள்ளது. ஏனைய அழிவுகளை விட இயற்கை அழிவு மனித குலத்தையே அழித்துவிடும் என்பதைத் தன் அறிவாலும், அனுபவத்தாலும் கண்டு கொண்ட மனித இனம், இன்று அவ்வியற்கை அழிவைத் தடுக்கவும் அவ்வியற்கையைத் தமக்கு இயைய உருவாக்கவும் முனைந்துள்ளது. அதன் ஒரு வெளிப்பாடே முழு உலகமும் சூழல் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் இச் செயலும் நாளுமாகும். இவ்வண்ணம் இயற்கையை விளங்கியும், விளக்கியும், மாற்றியும், அழித்தும் தமக்கியைவை உருவாக்கியும் வாழ்ந்து வளர்ந்து வரும் இம் மனித உயிரி தொடர்ந்து இயற்கைச் சூழலைத் தன் வயப்படுத்தி வாழுமா? அழியுமா? அல்லது ஏனைய உயிரினங்களைப் போல கூர்ப்பின் உச்சத்தில் மாறுமா? மறையுமா? இவை நம் முன்னுள்ள கேள்விகள். எனினும் ஒன்று மட்டும் உண்மை. தன்னில் ஓர் அங்கமான இயற்கையோடு நடத்திய போரிலேதான் இவ்வுயரிய உயிரினம் வளர்ந்து வந்திருக்கிறது விஞ்ஞானம் அபரித வளர்ச்சியடைந்து சமத்துவ சமுதாயம் மலர்ந்து எல்லார்க்கும் எல்லாமே கிடைக்கும் முரணற்ற ஓர் சமூக அமைப்புக் கொண்ட நிலை வந்தாலும் கூட தொடர்ந்தும் இயற்கைக்கும் மனிதருக்கும் போர் நடந்து கொண்டிருக்கும் என்றும் இப்போரிலே தான் மனித குலம் தொடர்ந்து வளரும் என்றும் மெய்யியலாளர் சிலர் கூறியுள்ளனர்.

இவ்வியற்கையின் மாற்றங்களை இரண்டாக வகுக்கலாம்.

ஒன்று இயற்கையில் இயல்பாகவே ஏற்படும் மாற்றங்கள் உதாரணங்கள் எரிமலை வெடிப்பது, ஆறுகள் பெருக்கெடுப்பது, கடல் கொந்தளிப்பது, நிலநடுக்கம், சில உயிரினங்கள் அழிவது என்பன.

இன்னொன்று மனித செயல்களால் இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் உதாரணங்கள் காடுகளை மனிதன் அழித்தல், தொழிற்சாலைகள்

பெருக்கத்தால் வளியில் மாசு ஏற்படுதல், போர் நடத்தல் என்பன.

இயற்கையில் ஏற்படும் முதலாவது மாற்றமான இயல்பான மாற்றத்தை கட்டுப்படுத்துதல் மிகச் சிரமம். (அதனையும் விஞ்ஞானத்தால் கட்டுப்படுத்த மனித இனம் முயல்கிறது) ஆனால் மனிதரால் ஏற்படும் இரண்டாவது மாற்றங்களை மனிதரால் கட்டுப்படுத்த முடியும். இத்தாக்கங்களை உணர்ந்ததும் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற தீவிர உணர்வை மனிதன் பெற்றதும் சென்ற நூற்றாண்டிலே தான்.

சூழல் மாசடைதல் காரணமாக தமது மூலவளங்கள் மாத்திரமல்ல ஏனையவர்களின் மூலவளங்களும் பாதிப்புக்குள்ளாவது பற்றிய விபரங்கள் உலகளாவிய வகையில் அறியப்பட்டன. சூழல் மாசடையக் காரணமாக இராத நாடுகள் கூட சூழல் மாசடைவதால் பாதிக்கப்படுவதை உலக நாடுகள் உணர்ந்தன. மனித குலத்திற்கு ஏற்பட்ட இப்பயங்கரத்தினை உணர்ந்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 1972ல் சுவீடனிலும், 1992ல் பிறேசிலிலும், 1994ல் பிரித்தானியாவிலும் இச்சூழல் மாசடைவது சம்பந்தமான பெரிய அளவிலான மாநாடுகளைக் கூட்டியது. உலகத் தலைவர்களும், அறிஞர்களும் இம்மாநாடுகளில் பங்கு கொண்டனர். தமக்குள் விவாதித்துக் கொண்டனர். திட்டங்களை உருவாக்கினர். செயற் படுத்த ஆரம்பித்தனர்.

வளர்ந்த நாடுகளின் சூழலியற் பிரச்சினைகள் வேறு வளர்முக நாடுகளுக்குரிய சூழலியற் பிரச்சனைகள் வேறு. வளர்ந்த நாடுகள் தமது இயற்கைச் சூழலை அழித்து பௌதிக நிலையில் வளர்ந்து விட்டதனால் மீண்டும் இயற்கை சூழல் தேவைப்படுகின்றது. நல்ல காற்று, நல்ல இயற்கைத் தாவரங்கள், நல்ல தண்ணீர், நல்ல சூழல் என்பன அவர்களது பிரச்சினைகள். வளர்முக நாடுகளுக்கு இயற்கைச் சூழல் நிறைய உண்டு. இந்த இயற்கை வளங்களை அழித்துத்தான் அவை அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டி யிருக்கின்றது. இயற்கையை அழிக்கா விட்டால் தொழிற்சாலைகளை, நகரங்களை அவைகளால் உருவாக்க முடியாது. தொழிற்சாலை, நகரம் என்று அபிவிருத்தியடையாவிடின் வறுமை யினின்று அவை மீள முடியாது. வறுமையே இந்நாடுகளுக்கு ஒரு பிரச்சினை. உண்மையிலே வளர்முக நாடுகளுக்கு ஒரு பெரிய அச்சுறுத்தல் சூழல் மாசடைதல் அல்ல. வறுமை தான் என்பது பலரது அபிப்பிராயமாகும்.

வளர்முக நாடுகளில் இருந்து வசதி வாய்ப்புக் கருதி மக்கள் பலர் வளர்ச்சியடைந்த நாடுகளில் குடியேறி வளர்ச்சியடைந்த நாடுகளின் சூழலை மாசுபடுத்துகின்றனர் என்றும், வளர்முக நாடுகளில் வளர்ச்சியிருப்பின் அந்நாட்டு மக்கள் தம் நாடுகளில் குடியேறுவார் என்றும், கண்ட வளர்ந்த நாடுகள் வளர்முக நாடுகட்கு பல ஸ்தாபனங்கள் மூலம் நிதியுதவி வழங்குகின்றன என்ற கருத்தும் உண்டு.

சூழல்மாசடைதல் அதனைத் தீர்த்தல் சம்பந்தமாக பல்வேறு கருத்தோட்டங்களும் இவற்றுக்குப் பின்னால் ஓர் உலக அரசியலும் இருப்பினும் இன்று அனைத்து நாடுகளும் ஒன்றுபட்டுச் சூழல் மாசடைதலால் வரும் தீமைகளை அறிந்துள்ளன. பெரிய, சிறிய நாடுகள் யாவும் தத்தம் அளவில் இப்பிரச்சினைகளை ஆராய்கின்றன. முடிவெடுக்கின்றன, செயற்படுகின்றன.

நாடுகளுக்குள் பிரதேச ரீதியாகவும் இவை இனம் காணப்படு கின்றன. இவ்வகையில் மட்டக்களப்பு பிரதேசத்தின் சூழலியற் பிரச்சினைகள் இனம் காணப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் நடைபெறும் காடழிப்பு ஒரு முக்கிய சூழலியற் பிரச்சினையாகும். யுத்தக் காரணங்களினால் வனவளம் இங்கு பாழாகின்றது. மழை வீழ்ச்சியை இது தடுப்பதுடன் வெள்ளப்பெருக்குக்கும் காரணமாகின்றது. அத்தோடு மட்டக்களப்பின் வாவி மாசடைதல், வனவிலங்குகளின் உயிரழிப்பு, பீடை நாசினிகளைப் பயிருக்குப் பாவிப்பதனால் வளி மாசடைதலுடன் மக்களின் உணவே

நஞ்சாக மாறுதல், இயற்கைச் சூழலைத் திட்டமிடாமல் கண்டபடி மாற்றல் இதனை அதிகாரிகள் கண்டும் காணாமல் இருத்தல் போன்ற நிகழ்வுகள் மட்டக்களப்பில் நடைபெறுகின்றன.

இரண்டு உதாரணங்களை இங்கு நான் கூறமுடியும். ஒன்று அண்மைக் காலமாக மட்டக்களப்புப் பகுதியில் வீடுகள் பெருமளவு கட்டப்படுகின்றன. இவ் வீடுகளைக் கட்ட இவர்கள் தேர்ந்தெடுத்த இடங்கள் மட்டக்களப்பில் ஆங்காங்கே காணப்பட்ட பள்ள நிலங்களான நீரேந்தும் நிலங்களாகும். அந்நீரேந்தும் நிலங்கள் இயற்கையாக நீரையேந்தி வைத்திருப்பதனாலேயே வருடம் முழுவதும் கிணற்றில் எமக்குத் தண்ணீர் கிடைக்கிறது. ஆனால் வீடு கட்டுவோர் இந்நிலங்களில் மண் நிரப்பி அதன் மீது வீடுகளைக் கட்டுகின்றார்கள். இதனால் இரண்டு ஆபத்துக்கள் ஏற்படுகின்றன.

ஒன்று நீரேந்தும் நிலங்கள் தம் இயல்பினின்று மாறுவதனால் அதில் நீரேந்தப்படுவதில்லை. நீரேந்தப்படாமை யினால் கிணறுகளில் தண்ணீர் வற்றி விடுகின்றது.

இரண்டாவது மேலதிக நீர் நிற்க இடமில்லாமல் பரந்து சென்று வெள்ளப்பெருக்குகளை ஏற்படுத்து கின்றது. இது சம்பந்தமாகத் திட்டமிடும் மட்டக்களப்பின் அதிகாரிகள் கூட இவற்றில் எந்தக் கவனமும் எடுப்பதாகப் படவில்லை.

மற்ற உதாரணம் நமது பல்கலைக்கழகமாகும். இந்த வளாகத்திற்கு வெளியேயும் சிலவேளை உள்ளேயும் மான் இறைச்சி விற்கப்படு வதாக அறிகின்றோம். அழிந்து செல்லும் ஓர் உயிரினத்தை அழிக்கும் இச் செயலுக்கு சூழல் பாதுகாப்பினர் அனுமதியளிக்கலாமா? நம்மைச்சுற்றி நடைபெறும் அநியாயங்களைக் கண்டு நாம் வாழாதிருக்கலாமா?

எனவே சூழல் பாதுகாப்பு என்ற விழிப்புணர்வை முதலில் நாம் மக்களிடையே நம் சூழலிலே ஏற்படுத்த வேண்டும்.

கருத்தரங்குகள், கூட்டங்கள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், நாடகங்கள், வீடியோப் படக்காட்சிகள் என்பன மூலமும் முடிந்தால் ஊர்வலங்கள், எதிர்ப்புக் கோஷங்கள் என்பன மூலமும் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது சூழல் மாசடைதலின் ஆபத்தை உணர்ந்த அனைவரினதும் கடமையாகும். இது நீண்டதோர் பயணமாகும்.

முதலில் நம் பயணத்தை நமது சூழலிலேயே ஆரம்பிப்போம்.

## புலமைப்பரிசில் பாராட்டு வைபவம்

*1999ம் ஆண்டில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களில், கோட்ட ரீதியில் கூடிய புள்ளி பெற்ற தலா மூவர் வீதம் 18 மாணவர்கள் வலய மட்டத்தில் பாராட்டப்படவுள்ளனர். இதற்கான நிதி ஒதுக்கீடு வலயப் பரீட்சைச்சபையால் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வைபவம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.*

# தமிழ் இலக்கியமும் பெண்ணுரிமையும்

வி. தங்கத்துரை (உதவிக் கல்விப் பணிப்பாளர் - தமிழ்)

உலகின் எந்தவொரு மொழியையும் விட அதிக இலக்கியச் செல்வங்களையுடையது தமிழ்மொழி. சங்ககாலம் தொடக்கம் இன்று வரையான இலக்கிய ஆக்கங்களில் ஆங்காங்கே பெண்ணுரிமை பற்றிப் பேசப்படுவதைக் காண்கின்றோம். இன்றும் பெண்ணுரிமையைக் கருவாகக் கொண்டு பல்வகைப்பட்ட இலக்கிய ஆக்கங்கள் படைக்கப்படுகின்றன. பெண் உரிமைக்காக முறைசார்ந்த இயக்கங்கள் எழுந்துள்ள இக்காலகட்டத்திலும் இனிமேல் வருங்காலங்களிலும் பெண்ணுரிமைக்கான இலக்கியங்கள் படைக்கப்படுவதும் தவிர்க்க முடியாதது.

நவயுகக் கவிஞன் பாரதி **'கற்புநிலையென்று சொல்லவந்தார் இருகட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்'** என்றும் **'ஆணும்பெண்ணும் நிகர் எனக் கொள்வதால் அறிவில் ஓங்கிஇவ் வையம் தழைக்குமாம்'** என்றும் பலவாறு கூறினாலும் கூடப் பண்டைக்காலம் தொட்டே ஆண் உரிமை பெண்ணுரிமையைப் பாதித்தே வந்துள்ளதென்பதை இலக்கிய ஆதாரங்கள் மூலம் நிலைநாட்டலாம்.

காவற்பெண்டு என்ற ஒரு பெண்பாற் புலவர் புறநானூற்றிலே இவ்வாறு பாடுகின்றார்.

**"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்**
**யாண்டுளனோ வென வினவுதி யென்மகன்**
**யாண்டுள னாயினும் அறியே னோரும்**
**புலிசேர்ந்து போகிய கல்லளை போல**
**ஈன்ற வயிறோ விதுவே**
**தோன்றுவன் மாதோ போர்க்களந்**
**தானே"**

உன் மகன் எங்கேயென்ற வினாவுக்கு அப்பெண் கூறிய விடை இது. **"என் மகன் எங்கிருப்பான் என்பது எனக்குத் தெரியாது. எங்கேயாவது போர்க்களத்தி லிருப்பான். புலி கிடந்துபோன கற்குகை போல அவனைப்பெற்ற வயிறுதான் என்னிடத்திலிருக்கிறது"** என்கிறாள் அவள். இந்தப் பாடல் மறத்தமிழரின் மாண்புமிகு வீரத்தைக் கூறுவதாகப் புறநானூறு புகல்வது உண்மையா? இல்லை. இங்கு பெண்ணுரிமை தான் பேசப்படுகின்றது. தன் வயிற்றில் உதித்த அந்த ஆண்மகன் தன்னை நினையாமலே போய்விட்டான். ஆணும் பெண்ணும் நிகர் எனக் கொள்வதானால் இவ்வாறு அவன் செய்யலாமா? இங்கு தாய்மை - பெண்மை எவ்வாறு தாழ்த்தப்படுகின்றது என்பதைப் பாருங்கள். தன்னை மகன் பிரிந்து போனதிலிருந்து கண்ணீரோடு புரளும் அந்தத் தாய் **'புலிசேர்ந்து போகிய கல்லளைபோல ஈன்ற வயிறோ இதுவே'** என்று அங்கலாய்க்கின்றாள். தன்னை உற்பத்தியாக்கிய அந்த வயிற்றைத்தானும் இந்த ஆண்குலம் மதிக்கின்றதா? இல்லையே. இங்கு பேசப்படுவது என்ன? பெண்ணுரிமை தானே!

புறநானூற்றிலே இன்னுமொரு கட்டத்துக்கு நாம் வருகின்றோம். இதோ தந்தையை இழந்து தவிக்கின்ற பாரிமகளிர் இவ்வாறு புலம்புகின்றனர்.

**"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்**
**எந்தையு முடையேம் எம்குன்றும் பிறர்கொளார்**
**இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்**
**வென்றெறி முரசின் வேந்த ரெம்**
**குன்றும் கொண்டார்யாம் எந்தையு மிலமே"**

பாரிமகளிர் தமக்குக் கிடைக்கவில்லை என்பதால் மூண்டபகை, அந்த அப்பாவிப் பெண்களின் உரிமையையே பறித்துவிட்டது. அன்றைய நிலவில் அம்மகளிர் தமது தந்தையைப் பெற்றிருந்தனர். குன்றுக்கும் உரிமையுடையவராயிருந்தனர். ஆயின், இன்றைய நிலவில் அந்தப் பிறப்புரிமைகள் பெண்மையின் பிறப்புரிமைகள் ஆண் வர்க்கத்தால் பறிக்கப்பட்டுவிட்டன. என்னே அவலம் இது!

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல்தலை.

இனிப் புறநானூற்றைவிட்டு புதுமை பொலியும் சிலப்பதிகாரத்துக்கு வருவோம். அங்கே பெண்ணுரிமைக்காகத்தானே போரிடுகிறாள் கண்ணகி. கோவலன் கண்ணகியின் உரிமைகளை மதித்திருந்தால் அவன் கொலையுண்டிருப்பானா? மதுரை மாநகரந்தான் அழிந்திருக்குமா? மாதவியின் உரிமைகூட இங்கு மதிக்கப்பட்டதா? பெண்மை கிள்ளுக்கீரையாக ஆக்கப்பட்டிருக்குமா? ஒரு பாவமுமறியாத மாதவியின் மகள் மணிமேகலை, தன் பிறப்புரிமைகளைத் துறந்து துறவுபூண நேர்ந்திருக்குமா? இங்கே சிலப்பதிகாரமும் முழுக்கமுழுக்கப் பேசுவது பெண்ணுரிமையன்றி வேறென்ன?

பல்லவர் காலத்துப் பக்திஇலக்கியங்கள் கூடப் பெண்ணுரிமையைத்தான் மறைமுகமாகப் பேசுகின்றன. அகத்துறை சார்ந்த பக்தி இலக்கியங்கள் எல்லாம் பெண்ணுரிமையைத்தான் கூறுகின்றன. இதோ அப்பர் பெருமான் பின்வருமாறு பாடுகின்றார்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னர் அவனிருக்கும் ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே
நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்
தாளே."

இது அப்பராகிய ஆண்மகன் கூறும் பெண்ணுரிமை. ஒரு பெண் ஒரு தலைவனைக் காதலிக்கவும் அவனை அடைந்து இன்புறவும் உரிமை பூண்டவள். அந்த உரிமையை அவளிடமிருந்து யாராலும் பறிக்க முடியாது என்பதை அப்பர் வாக்கால் இங்கு அறிகின்றோம்.

ஆண்டாளின் பக்திச்சுவை ததும்பும் பாடல்கள் அனைத்தும் பெண்ணுரிமை பற்றிப் பேசுவனவேயாம். இதோ கண்ணனின் கைத்தலத்துள்ள வெண்சங்கிடம் அவள் இவ்வாறு கேட்கின்றாள்.

"கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்
திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்
சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி
வெண்சங்கே"

தன் காதலனின் வாய்ச்சுவையையும் அதன் நறுமணத்தையும் கேட்டறிய அந்தப் பெண்ணுக்கு இருக்கும் உரிமையைத்தான் பறிக்க யாரால் முடியும்?

காவிய காலத்தில் எழுந்த இலக்கியங்களில் மகாபாரதம் பெண்ணுரிமையையே அடித்தளமாகக் கொண்டது. பாஞ்சாலி என்ற பாத்திரம் அதற்காகவேதான் படைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. பாண்டவரின் தாயான குந்திதேவி இவ்வாறு தன் பிள்ளைகளைப் பார்த்துக் கூறுகின்றாள்.

"பிள்ளைகாள் நீவிர் பெற்ற அருங்கனியை
ஐவீரும் ஒருவீராய்ப் பகிர்ந்து நுகர்மின்"

தாய்சொல்லைத் தட்டாத தனயர்கள் பாஞ்சாலி என்ற ஒரு பெண்ணைப் பங்குகொள்கிறார்கள். இங்கு அப்பெண்ணின் உரிமைகள் எந்தளவு பாதிக்கப்பட்டிருக்கும் என்பதைக் கூறவேண்டியதில்லை. தாயாகிய பெண்மையைப் போற்றியவர்கள் தாரமாகிய பாஞ்சாலியின் பெண்மையைப் போற்றினார்களா? பஞ்சவர் மாத்திரமா, கௌரவர்கூட அவளது பெண்மையைப் போற்றினார்களா? இல்லையே. அவர்களும் அவளது பெண்ணுரிமையைப் பந்தாடுகின்றனர். அந்தப் பெண்ணின் அவலம் கண்டும் பேதலித்துப் பேசாமடந்தைகளாக இருக்கும் நாட்டு மக்களையே அந்தப் பெண்ணுரிமை காக்கச் சாடுகின்றான் பாரதி.

"ஊரவர்தம் கீழ்மை உரைக்கும் தரமாமோ
வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற்
போக்கியே
பொன்னையவள் அந்தப் புரத்தினிலே
சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத்
துணையாமோ?"

இங்கு பாரதியால் பெண்ணுரிமையன்றி வேறென்ன பேசப்படுகின்றது. மேலும்,

"என்னை முதல்வைத் திழந்தபின்பு
தன்னை என்
மன்னர் இழந்தாரா? மாறித் தமைத்தோற்ற
பின்னரெனைத் தோற்றாரா?"

என்று நீதிகேட்ட, தனிமனித உரிமையைக் கேட்ட பாஞ்சாலிக்குப் பதில் கூறியவர் யார்? பாண்டவர் உட்படச் சபையில் இருந்த பலரும், *'முற்றும் உரையிழந்து மூங்கையர்போல்'* வீற்றிருந்த செயல் பெண்ணுரிமையை முற்றுமுழுதாக மறுத்த, மதிக்காத நிலையல்லவா? பகிர்ந்து நுகர முற்பட்டவர்கள் பயந்து ஒதுங்கியதேன்? **'தன்னைத் தோற்றபின் என்னைத் தோற்கத் தருமனுக்கு என்ன அருகதை உண்டு?'** என்ற பாஞ்சாலியின் அவலக் குரல் அமிழ்ந்து போனதற்குக் காரணம் ஆண் உரிமையல்லவா?

கம்பராமாயணமும் பெண்ணுரிமையிலேதான் காலூன்றி நிற்கின்றது. இராமாயணக் கதைக்குத் திருப்புமையமாக அமைவது கைகேயி தன் உரிமையை வாதாடிப் பெற்றமைதான். அந்த உரிமை அவளுக்கு வழங்கப்படாதிருந்தால் இராமாயணக் கதையே இல்லை. மேலும், இராவணன் சீதையைக் கவர்ந்து அவளது பெண்ணுரிமைக்குக் களங்கம் ஏற்படுத்தாதிருந்தால் இராமாயணப் போருக்கே இடமில்லை. இராமாயணப் பெண்ணுரிமையைக் கிண்டலாகப் பாடுகின்றார் நமது தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.

**"வண்ணானின் மொழிகேட்டு வனம் விடுத்த**
**சீதைதனை**
**இந்நாளும் தேடுதல்போல் இருங்குரங்கு**
**நெருங்கிடுமே."**

இங்கும் என்ன நடந்தது. யாரோ ஒரு தெருப்போக்கனின் வார்த்தைகளைக் கேட்டு அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, மங்கலநாண் பூட்டி, கைத்தலம் பற்றிய மனைவியை இராமன் அம்போ என்று காட்டில் விட்டது அப்பட்டமாகப் பெண்ணுரிமையை மீறும் செயலல்லவா!

மேலும், கவியரசர் கம்பரால் மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட ஒரு கதாபாத்திரத்தையும் எம்மால் காணமுடிகின்றது. இராமாயணத்திலே **'தாயென நினைவான் முன்னே கூற்றென வந்ததமியள்'** கைகேயியின் வார்த்தைகளைக் கேட்டு,

**"மன்னவன் பணியன்றாகில் நும்பணி**
**மறுப்பனோ என்**
**பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன்**
**பெற்றதன்றோ."**

என்று கானகம் புறப்பட்ட இராமனுடன் **'ஈண்டுநின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு'** என்று கூறி **'அண்ணல் இருக்குமிடம் அடியவளுக்கு அயோத்தி'** என்ற கருத்துடன் இராமனுடன் கூடவே புறப்பட்டுவிட்டாள் சீதை. இராமனின் சிற்றன்னையாகிய சுமித்திரையோ ஒருபடி மேலே சென்று, தன் மகன் இலக்குவனைப் பார்த்து,

**"மகனே இவன்பின் செல்; தம்பி எனும்**
**படியன்று; அடியாரின் ஏவல் செய்தி;**
**மன்னும் நகர்க்கு இவன் வந்திடின் வா;**
**அது அன்றேல்**
**முன்னம் முடி."**

என்று கட்டளையிட்டாள், **'தாயிற் சிறந்ததொரு கோயிலில்லை'** என்று அன்னையின் ஆணையைச் சிரமேற்கொண்டு புறப்பட்டுவிட்டான் இலக்குவன். ஆயின், இலக்குவனுக்கென்று பொறுப்புக்கள் இல்லையா? இல்லறத்தானுக்குரிய கடமைகள் இல்லையா? அவனால் மதிக்கப்பட வேண்டியவர்கள் அன்னையும் அண்ணனும் அண்ணியுந்தானா? மணநாள் பார்த்து, மங்கலநாண் பூட்டிய மனைவியாகிய ஊர்மிளையைப் பரதன் மறந்ததேன்? அதுவும் பதினான்கு ஆண்டுகள்! இலக்குவன் மாத்திரமா மறந்தான்! மாமியாகிய சுமித்திரையும் அல்லவோ ஊர்மிளையை, அவளது உணர்ச்சிகளை! அவளது பெண்ணுரிமையை மறந்துவிட்டாள். இங்கு பெண்ணுக்குப் பெண்ணல்லவோ எதிரியாக மாறிவிட்டாள். இராவணனது சிறையிலே சீதை இருந்தபோது,

**"அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும்**
**விருந்து கண்டபோது என்னுறுமோ . ."**

என்று இராமனை நினைந்து புலம்புவதாகக் கூறும் கம்பர், அதேவேளை இன்னொரு பெண்ணான ஊர்மிளையின்

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

உணர்ச்சிகளைக் கருத்திற் கொண்டாரா? அங்கே சீதை கைது செய்யப்பட்டிருந்தாள். இங்கே ஊர்மிளை கைவிடப்பட்ட நிலையில் இருந்தாள். யாரால்? கட்டிய கணவனால். வனத்திலே வாழ்ந்தாலும் இராமனும் சீதையும் தமது சுய உணர்ச்சிகளுக்கு வடிகால் தேடியே இருந்தனர். ஆனால், நாட்டில் வாழ்ந்த ஊர்மிளையின் நிலைபற்றி கம்பர் சிந்திக்கவில்லையே. அவள் ஆன்மீக நெறியிலே தன்னை நிறுத்தி, நல்லாடை, நகை துறந்து வாழ்ந்திருந்தாலும் இது எந்தளவுக்கு நியாயமானதாகும். பரதனது மனைவிபற்றியும் சத்துருக்கனது மனைவிபற்றியும் கம்பர் குறிப்பிடவில்லைதானே, அப்படியிருக்க ஊர்மிளைபற்றி மாத்திரம் உருகவேண்டியது ஏன்? என்று கேட்பது எந்த வகையிலும் நியாயமாகாது. ஏனெனில், அவர்கள் தமது கணவர்களைப் பிரிந்து வாழவில்லையே! இன்றைய தமிழ் சினிமாக்களில் வரும் உபகதாநாயகிகள் இடையில் மறைந்து போவதைப்போல ஊர்மிளையும் கம்பரால் மறக்கப்பட்டாளா? அல்லது திட்டமிட்டு மறைக்கப்பட்டாளா? **'நுண்மான் நுழைபுலம்'** உடையவர்தாம் இதற்கு விடைபகரவேண்டும்.

இவ்வாறு இலக்கியங்களில் பெண்ணுரிமை பற்றிப் பேசப்பட்டாலும் பெண் உரிமை வேட்கையை எரிமலையாக்கியவன் மகாகவி பாரதி என்றால் அதில் மிகையில்லை. **'பெண்கள் விடுதலைக் கும்மி'** என்னும் பாடலில் பாரதி

**"ஏட்டையும் பெண்கள் தொடுவது**
**தீமையென்**
**றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்**
**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்**
**போமென்ற**
**விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"**

என்று பெண்ணுரிமைக்காக முழக்கமிடுகின்றான்.

மேலும், **'அம்மாக்கண்ணு பாட்டு'** என்னும் பாடலில்,

**"பாட்டைத் திறப்பது பண்ணாலே - இன்ப**
**வீட்டைத் திறப்பது பெண்ணாலே" என்றும்,**
**"சோற்றைப் புசிப்பது வாயாலே - உயிர்**
**துணி வுறுவது தாயாலே"**

என்றும் கூறிப் பெண்மையை மேலும் உயர்த்துகின்றான். பாரதியின் பெண்ணுரிமை முழக்கத்தில் பிறந்தவள்தான் புதுமைப்பெண்.

**"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட**
**பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சா நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்**
**செம்மைமாதர் திறம்புவ தில்லை யாம்."**

இங்கு பெண்ணுரிமை காக்கப் புறப்படும் புதுமைப்பெண்ணை யாராலும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது என்பதே வெளிப்படை.

பாரதிதாசனோ பாரதியிலும் பன்மடங்கு வீறுகொண்டு பெண்ணுரிமைக்காகப் பாடினான். பாலிய விவாகத்தால் கைம்மையூண்ட கன்னிப் பெண்களுக்காகக் கண்ணீர் விட்டான். வாழாவெட்டியாக அந்தப் பெண்மை வீணே மண்ணில் கிடப்பதைக் கண்டு நெஞ்சம் நெருக்குருகினான்.

**"கோரிக்கை யற்றுக் கிடக்கு தன்னே**
**வேரிற் பழுத்த பலா**
**கொடுமை யென்றிடப் பட்டதன்னே -**
**குளிர்**
**வடிகின்ற வட்ட நிலா."**

பாரதிக்குப் பின் இலக்கியம் படைத்த, படைக்கும் பலரும் பெண்ணுரிமையைக் கருவாகக் கொண்டு படைப்பிலக்கியம் படைத்தனர்; படைக்கின்றனர். காலத்தாலழியாத பல இலக்கியங்கள் பெண்ணுரிமைக்காகப் படைக்கப்படுகின்றன. பெண்ணுரிமைக்காக இன்னும் பல இலக்கியங்கள் படைக்கப்படுதல் வேண்டும். ஆம்! ஆணும் பெண்ணும் சரிநிகர் என்னும் உரிமை கிட்டும்வரை இந்தப் பெண்ணுரிமை இலக்கியம் படைக்கப்படத்தான் வேண்டும். அது தவிர்க்க முடியாதது.

# அரச சேவையில் லீவு பெறுவதெப்படி?

கே. சிவலிங்கம்
நிருவாக உத்தியோகத்தர்,
வலயக் கல்வி அலுவலகம்

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் லீவு சலுகையாகக் கருதப்பட வேண்டும். அது அவர்களுக்குரிய உரிமை இல்லை. லீவு வழங்கும் அதிகாரி, லீவை அனுமதிக்கலாம், அனுமதிக்காமலும் விடலாம்.

லீவுகள் பல வகை. அதற்கு உரிய விண்ணப்பத்தில் உரிய நேரத்தில் விண்ணப்பித்து லீவு பெற வேண்டும். ஒன்பது மாத சேவை பூர்த்தி செய்த பின்பு, தனக்கு உரித்தான ஓய்வு லீவு பெற தகுதி பெறுகின்றார் கள். சேவை செய்யும் உத்தியோகத்தர் லீவு அனுமதி பெறாமல் செல்ல முடியாது. தனது சேவைக்காலத்தில், சேவைக்கு வராது விடுபடும் காலம், ஏதாவது லீவு மூலம் அனுமதி பெற்று நிரப்பப்பட வேண்டும். அரசாங்க விடுமுறை யெனப் பிரகடனப்படுத்தப்படும் காலப்பகுதியும், சனி, ஞாயிறு விடுமுறை காலப்பகுதியும் தவிர்ந்த, ஏனைய அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் கடமையாற்ற வேண்டியது அலுவலகர்களின் அவசிய கடமையாகும்.

நிரந்தர நியமனம் பெற்றவர்கள் பின்வரும் லீவைப் பெறத் தகுதி பெற்றவர்கள். (01) அமைய லீவு, (02) சுகயீன லீவு, (03) பதில் லீவு, (04) ஓய்வு லீவு, (05) விபத்து லீவு, (06) விசேட லீவு, (07) காலம்கடந்தலீவு, (08) இளைப்பாறும் நோக்கத்துடன் லீவு, (09) கடமை லீவு, (10) முழுச்சம்பளமற்றபடிப்பு லீவு, (11) சம்பளபடிப்பு லீவு, (12) பிரசவ லீவு, (13) கட்டாய லீவு, (14) அரைச்சம்பள லீவு, (15) தீவிற்கு வெளியே கழிக்கும் லீவு, (16) சம்பள மற்ற லீவு, (17) குறுகிய கால லீவு, (18) காச நோய் லீவு, (19) புற்றுநோய் லீவு, (20) தொழு நோய் லீவு.

மேற்படி லீவுகள், நிரந்தர அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பருவ மன்ற ஆணையாளர்கள், பயிற்சியாளர்கள், அமைய உத்தியோகத்தர்கள், ஒப்பந்த அடிப்படையில் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் வெவ்வேறு எண்ணிக்கையிலான லீவுகளைப் பெற தகுதியுடையவர்களாவார்கள்.

## அமைய லீவு :-

ஒரு முறையில் ஆறுநாள் லீவு அனுமதி பெறலாம். வருடத்தில் 21 நாள் லீவு பெறலாம். பயிற்சியாளர்கள் 09 மாத சேவை பூர்த்தி செய்த பின்பு 07 நாட்கள் பெறலாம்.

## சுகயீன லீவு :-

சுகயீன லீவு இரண்டு நாளைக்கு மேல் விண்ணப்பித்து பெறும்போது வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு வருடத்தில் 24 நாட்கள் சுகயீன லீவு பெறலாம். ஆசிரியர்கள் சுகயீன லீவு 20 நாட்கள் பெறலாம். பயிற்சியாளர்கள் 09 மாதம் பூர்த்தி செய்த பின்பு 14 நாட்கள் பெறலாம்.

## பதில் லீவு :-

அரச உத்தியோகத்தர் அரச கடமைகளை அவசிய தேவை பொருட்டு லீவு நாட்களில் நிறைவேற்ற வேண்டுமெனில், திணைக்களத் தலைவரின் முன் அனுமதியுடன், அச் சேவையை நிறைவேற்றலாம். அவ் லீவை ஒரு வருடத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம்.

## ஓய்வு லீவு :-

ஒரு ஆண்டில் ஒரு மாதத்திற்கு மேற்படாத ஓய்வு லீவு கொடுக்கலாம். பதவி நிலை உத்தியோகத்தர்கள் இவ் லீவை வெளிநாட்டு லீவுடன் சேர்த்துப் பெறலாம்.

## விபத்து லீவு :-

இவ் லீவுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெறும் உத்தியோகத்தர் நலன் சேவை செய்யும் திணைக்களத்துக்கு ஊடாக செயலாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும். செயலாளரின் அனுமதியுடன் இவ் லீவைப் பெற்றுக் கொள்ளலாம்.

## காலம் கடந்த லீவு :-

பயன் படுத்தாத ஓய்வு லீவினை, ஒரு உத்தியோகத்தர் உத்தியோகத்தரின் சுகயீனத்திற்கு, அவரின் குடும்ப சுகயீனத்திற்கும், குடும்பத்தில் ஏற்படும் நோயும், உத்தியோகத்தரின் திருமணம், வீட்டில் ஏற்படும் தொற்றுநோய், சமயச் சடங்கு போன்றவற்றிற்கு பெற்றுக் கொள்ளலாம். தொடர்ச்சியான இரண்டு வருட பயன்படுத்தாத சுகயீன லீவாக இருக்க வேண்டும்.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

**இளைப்பாறும் நோக்கத்துடன் லீவு**

இளைப்பாறும் உத்தியோகத்தர் முந்திய இரண்டு வருடத்திற்குரிய மீதியாகவுள்ள ஓய்வு லீவைப் பெறலாம். முன் கூட்டியே இவ் லீவைப் பெற அனுமதி பெற வேண்டும்.

**கடமை லீவு :-**

உத்தியோக ரீதியான கடமைக்கும், சேவைக்காலப் பயிற்சி காலத்திற்கும் கடமை லீவு அனுமதிக்கலாம்.

**முழுச் சம்பளமற்ற படிப்பு லீவு சம்பளமற்ற படிப்பு லீவு :-**

சேவையில் உறுதிப்பட்ட உத்தியோகத்தர், வெளி நாட்டிலோ, உள்நாட்டிலோ கல்வியை கற்க இவ் லீவைப் பெற உரித்துடையவராவார்.

**பிரசவ லீவு :-**

ஒன்பது மாதம் பூர்த்தி செய்த பெண் உத்தியோகத்தர் முதலிரண்டு உயிருள்ள பிள்ளைக்கு 84 நாள் லீவு விடுமுறை தவிர்த்து பெறலாம். ஏனைய பிள்ளைகளுக்கு 42 நாள் லீவு பெறலாம்.

**கட்டாய லீவு :-**

வைத்திய காரணங்களுக்கு அல்லது குற்றவியல் நடவடிக்கைக்கு இவ் லீவு வழங்கலாம்.

**அரைச்சம்பள லீவு :-**

தனது லீவு முடிவு பெற்றதும் தனது சேவைக்காலத்தில் 1/6 பங்கு வீத லீவு அனுமதிக்கலாம். ஒரு வருடத்திற்கு மேற்படக்கூடாது.

**தீவிற்கு வெளியே கழிக்கும் லீவு :-**

நியமனம் உறுதி செய்யப்பட்ட உத்தியோகத்தர் தொழில் வாய்ப்பு காரணமாகவும், சமய யாத்திரை தொடர்பாகவும் மூன்று மாதத்திற்கு முன்பு லீவு விண்ணப்பம் அனுப்பி இவ் லீவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**குறுகிய கால லீவு :-**

ஒரு மாதத்தில் இரு தடவை 1 1/2 மணித்தியாலம் லீவைப் பெறலாம்.

**காச நோய் லீவு / புற்றுநோய் / தொழு நோய் லீவு**

வைத்திய பரிசோதனை சபையினால், பரிசீலனை செய்து இந்நோய்க்குரிய லீவு அனுமதிக்கப்பட்டால் முன்வரும் காலப்பகுதிக்கு விசேட லீவு அனுமதிக்கலாம்.

காச நோய்க்கு – 09 மாதம்
புற்று நோய்க்கு – 06 மாதம்
தொழு நோய்க்கு – 22 மாதம்

❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊

*1999ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் மட்டக்களப்பு வலயத்தில் உள்ள 1சி பாடசாலைகளுள் கூடுதலான சித்திகளைப் பெற்ற பாடசாலையாக மட்/ ஏறாவூர் றகுமானியா ம.வி. தெரிவு செய்யப்பட்டு ஆளுநரின் விருதினைப் பெற்றுள்ளது.*

# ஒரு மழலையின் விண்ணப்பம்

இந்த
மொட்டு மலர்களின்
உலகை – நான்கு
குட்டிச் சுவர்களுக்குள்
முடக்கி விடாதீர்கள்!

பட்டுச் சிறகடித்துப்
பறக்க நினைக்கும்
எங்கள்
கற்பனைப் பறவையைக்
கட்டிப்போட்டு விடாதீர்கள் !

நாங்கள்
வெறுங் காகித மலர்களல்ல
ஜீவமலர்கள்!
எங்களுக்கு
இயற்கை மணமுண்டு
நீங்கள்
செயற்கை மணமூட்ட முயன்று
எங்கள் ஜீவனை
மாசுபடுத்தி விடாதீர்கள்!

இயற்கையின்
பரிசுத்தக் காற்றை
எங்கள் எண்ணம் போல்
சுவாசிக்க விடுங்கள்!
மாசுபடுத்தப்பட்ட
செயற்கைக் காற்றை
எங்கள்
சுவாசப் பைகளில் ஏற்றி
அதன் ஆரோக்கியத்தைக்
கெடுத்து விடாதீர்கள்!

நாங்கள்
திரிகையில் வைக்கப்பட்ட
மண் திரள் அல்ல
விண்ணைக்
கை நீட்டித்
தொடத் துடிக்கும்
விருட்ச வித்துக்கள்!

நாங்கள் உருவாக
உங்கள்
கைபடத் தேவையில்லை
கருணை மட்டும் போதும்!

எங்களை
நாங்களாகவே
உருவாக விடுங்கள்
உங்கள்
வலிய நினைவுகளை
எங்கள்
மெல்லிய இதயத்தில் ஏற்றி
அதனை
இரும்பாக்கி விடாதீர்கள் !

**எஸ். அருளானந்தன்.**
*மட்/ மஞ்சந்தொடுவாய்,*
*பாரதி வித்தியாலயம்.*

அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் 2000" (தங்கப்பதக்கம் பெற்ற)
முதலாமிடம் பெற்ற கட்டுரை

செல்வன். ம. ரமணசுந்தரம் (மட்/ புனித மிக்கேல் கல்லூரி)

# முத்தமிழ் வளர்ச்சியில் கணனியின் பங்களிப்பு

ஆத்துமஞானம், இலக்கியம், விஞ்ஞானம் ஆகிய முத்துறைகளின் கூட்டுறவால் மனிதவாழ்க்கை முழுமை பெறுகின்றது. இவற்றுள் ஒன்றை நீக்கி மற்றொன்றின் வழிசெல்லினும் அதுமுழுமையற்ற மனித வாழ்வுக்கே அடிகோலுகின்றது என்றார் பெரும்பேறிஞரான வினோபாவே. அன்று காட்டிலே விலங்குகளோடு விலங்குகளாக அலைந்து திரிந்த மனிதன் இன்று ஆத்துமஞானத்தால் நாகரிகத்தையும் இலக்கியத்தால் பண்பட்ட மனத்தையும் விஞ்ஞானத்தால் ஒப்பற்ற கூரிய அறிவுத்திறனையும் கொண்டவனாக விளங்குகின்றான். **"விலங்கு மனிதன்"** இன்று எந்திர மனிதர்களை வடிவமைக்கவும் விண்வெளியில் செய்மதிக்கூடம் அமைக்கவும் பரிணாம வளர்ச்சி கண்டுவிட்டானென்றால் அது நிச்சயமாக விஞ்ஞானத்தின் பங்களிப்பாகவே உளதாயுள்ளது என்பதை மறுப்பதற்கு யாருமிலர். அப்படிப்பட்ட விஞ்ஞானத் தாய் ஈன்றெடுத்த குழவிகளில் சிரேஷ்ட பிள்ளையாகத் திகழ்வதுதான் கணனி.

18ம் நூற்றாண்டுக்கு முன் **"எம்.டூரிங்"** என்பவரால் வடிவமைக்கப்பட்டு **"சாள்ஸ்பப்பேஜ்"** இனால் மிகைப்படுத்தப்பட்டு தன் பிஞ்சுக்கால்களால் தத்தித்தத்தி நடக்கத் தொடங்கிய கணனிக்குழவி இன்று பல்வேறுபட்ட வளர்ச்சிப்படிகளை நோக்கியும் தாண்டியும் வீறுநடைபோட்டுக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே.

**"பாலுந் தெளிதேனும் . . . "** "எனத் தூங்கக் கரிமுகத்துத் தூமணியை ஔவையார்" **"சங்கத்தமிழ் மூன்றும் தா .."** என விளித்தாரன்றோ? **"சங்கத்தமிழ் மூன்று இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய முத்தமிழை எனக்குத்தா"** என ஔவையார் என்ற தமிழ் புலவரே விளிக்கும் அளவுக்கு மகத்துவமானது இம்முத்தமிழ் அன்று முச்சங்கம் அமைத்து வளர்க்கப்பட்ட தமிழுக்கு இன்று கணனியும் பங்களிப்புச் செய்கிறதா? என்று எள்ளிநகையாடுவோரும் அதை மறுத்துரைக்கும் பழைமைவாதிகளும் இன்றும் எம்மிடையே விரலிட்டு எண்ணக்கூடிய அளவில் உள்ளனர். அவர்தம் கருத்தை மாற்ற இது கோள்கோலிடும் என்ற நம்பிக்கையில் இது தொடர்கிறது.

இயற்றமிழ் வளர்ச்சிக்கு கணனி எவ்வாறு உதவுகின்றது என்பதைச் சற்றே ஆராய்வோமாக. புதிய சகத்திரத்தின் முதலாவது கணனி நிகழ்ச்சி மென்தொகுப்பு **"வின்டோஸ் 200"** என்பதை யாவருமறிவோம். ஆனால் அது உயிர்பெற்றெழும் முன்னே எமது தமிழில் அதே நிகழ்ச்சி மென்தொகுப்பு **"அக்னிநட்சத்திரம்"** என்ற பெயரில் வெளிவந்ததை அறிந்தவர் ஒரு சிலர். புலம்பெயர்ந்தோருக்கு அவருடைய இலக்கியத்திறனை வளர்க்கக் கணனி அரும்பெரும் சாதனமாகத்திகழ்கின்றது. குமுதம், ஆனந்தவிகடன் முதலான இந்தியச் சஞ்சிகைகளும் எமது நாட்டின் வீரகேசரி முதலான பத்திரிகைகளும் வெளியாகும் அன்றே கணனி இணையத்தில் பார்க்கக் கூடியதாகவும் அவர்கள் **''இலத்திரனியல் அஞ்சல்''** மூலமாகவும் அனுப்பும் இலக்கியதாகமுள்ள சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகியன அச்சுருப்பெற்று தாகம் தணிவதும் இயற்றமிழ் வளர்ச்சியை கணனி ஊக்குவிக்கும் பாங்கு வெள்ளிடைமலையாகின்றது ஏன்? இன்று உலகளாவிய ரீதியில் ஆங்கில இணையத்துக்கு அடுத்தபடியாக 2வது இடத்திலிருப்பது எமது தமிழ் இணையமே என்று கூறும்போது தமிழன் ஒவ்வொருவனுக்கும் மேனிமயிர் பொடிப்பதுவும் உடல் விதிர்விதிர்ப்பதும் இன்னும் எத்தனை எத்தனை இன்று உலகளாவிய ரீதியில் தமிழ் இணைய மகாநாடுகள் நடைபெறுவதையும் அங்கு தமிழ் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கலந்தாலோசிக்கப்படுவதும் அவற்றுக்கான சுமுகமான தீர்வுகள் எடுக்கப்படுதலும் தமிழ் வளரவழிவகை செய்தலும் கணனியின் பங்களிப்பால் தான் என்று கூறினால் அது மிகையன்று.

அடுத்ததாக இசைத்தமிழ் வளர்ச்சியும் கணனியும் என்ற தலைப்பை நோக்குவோம். மேலைத்தேய இசையும் கர்நாடக சங்கீதத்தையும் பின்னி இன்று **''ஷேக்ஸ்பியர்''** என்ற ஹொலிவூட் படத்திற்கு இசையமைக்க

தெய்வத்தானாகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலிதரும்.

எம்மவர்கள் அழைக்கப்பட்டதற்கும் இணையம் மூலம் செவிமடுக்கப்பட்ட எம்மவர்களின் இசைவடிவம் தான் காரணம்.

புதிய இசைவடிவம் செவிகளுள் கலந்து இதயத்தில் பதிந்து என்னை ஏதோ செய்தது. கர்நாடக சங்கீதம் உண்மையில் என்னை இலயிக்க வைத்தது. நான் அப்போதே தீர்மானித்தேன் ஓர் இசைத்தொகுப்பொன்றை வெளியிட அதுவும் கர்நாடக மேலைத்தேய இசைச்சங்கமத்தில் . . என்று இங்கிலாந்து இசையமைப்பாளர் ஒருவர் கர்நாடக சங்கீதத் தொகுப்பை இணையம்மூலமாகச் செவிமடுத்து கர்நாடக சங்கீதத்தில் இலயித்து அத்தொகுப்பை வெளியிட்ட **இசையமைப்பாளரான ஏ.ஆர். ரஹ்மானை** இலண்டன் வரவழைத்துத் தமிழ் மணங்கமழும் இசையான கர்நாடக இசைகலந்த இசைத்தொகுப்பை ஆக்கி வெளியிட்டு வெள்ளைக்காரன் வியந்து போகுமளவிற்குச் சாதனை புரியவைத்தது கணனியின் ஒரு பாகமான இணையமேதான். ஏன் இன்று இந்தியாவில் ஒரு பாடல் வெளியிடப்படும் அதே கணத்தில் வெளிநாட்டிலிருக்கும் ஒருவர் அதனை இணையம் மூலமாகவும் செவிமடுப்பதும் மும்பையில் உள்ள பாடகர் மும்பையிலிருந்தபடியே பாடத் தமிழ் நாட்டிலுள்ள இசையமைப்பாளர்கள் அதனைத் தமிழகத்திலி ருந்தவாறே ஒலிப்பதிவு செய்த கணனியின் புதிய அம்சங்களால் இசையை மென்மேலும் மெருகேற்றும் பாங்கிலும் இசைத்தமிழ் வளர்ச்சிக்குக் கணனியில் பங்களிப்பை உணரக்கூடியதாக உள்ளது.

அடுத்து நாடகத்தமிழ் பீ.பீ.சி. இன் தமிழோசை என்று செய்திகளுடன் தரமான நாடகங்களை ஒலிபரப்பாக்கும் பீ.பீ.சி யை யாராலும் மறக்க முடியாது. கணனி மூலம் வடிவமைக்கப்பட்டு அவற்றின் இயக்கங்கள் கணனியால் கட்டுப்படுத்தப்பட்டு செய்மதிகள் மூலம் ஒலிபரப்பாகும். பீ. பீ. சி ஐப் போலவே வெரிற்றாஸ், ஐ.பி.சி. ஆகியவற்றையும் சர்வதேச வலையமைப்பினூடாக ஒலிக்கும் கீரவாணி, சக்தி எப். எம். போன்ற வானொலிகளும் இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழர்களைச் சங்கமிக்க வைக்கிறது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படுதல் வேண்டும் என்ற பாரதியின் வாசகத்தினை கருத்திற்கொண்டு இந்திய இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்கள் ஷேக்ஸ்பியரின் தமிழில் மொழிபெயர்க்கப்படாத நாடகங்களை இணையம் மூலமாக மொழி பெயர்க்க முனைந்திருப்பதற்குக் கணனியே காரணமாகும். சினிமாவைக்கூட நாம் நாடகத் துறையுடன் பொருந்திப் பார்க்கலாம். இன்று சினிமாவில் வரும் "**கிராபிக்ஸ்**" என்ற நுணுக்குக் காட்சிகளை வடிவமைக்கவும் கணனி அளப்பெரிய சேவையாற்றுவதையும் யாரும் மறுப்பதற்கு இலர். இவ்வாறு கணனியின் நாடகத் தமிழ் வளர்ச்சி பற்றிப் பலவற்றைப் பறைசாற்றலாம்.

அன்று முச்சங்கம் அமைத்துப் புலவர் தமிழ் வளர்த்தனர். இன்று இணையம் வலைப்பின்னல் அமைத்து கணனிக்குழவி புலவனாகப் பரிணமித்துத் தமிழ் வளர்த்தது. வளர்த்துக்கொண்டிருக்கிறது. வளர்க்கும் என்பதை யாராலும் மறுக்கமுடியாது தமிழ்வாழவும் அதற்குப் பங்களிப்புச் செய்யும் கணனிப்பணி வாழவும் நாமும் வாழ்த்துவோம். தேமதுரத் தமிழோசை தரணியெங்கணும் பரவ வகைசெய்திடல் வேண்டும்.

**வாழ்க வண்றமிழ் ! வளர்க கணனியின் பணி !**

## அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் - 2000

தேசிய நிலைப்போட்டி கொழும்பு மாநகரில் நடைபெற்று பின்வரும் நிகழ்ச்சிகளில் எமது மட்டக்களப்பு கல்விவலயப் பாடசாலை மாணவர்கள் முதலாமிடத்தினையும் தங்கப்பதக்கங்களையும் பெற்றுக்கொண்டனர்.

1. வாசிப்பு 2ம் பிரிவு - **செல்வி. க. கிருத்திகா** மட்/ வின்சன் மகளிர் தேசிய பாடசாலை
2. இசை - தனி - 03ம் பிரிவு - **செல்வி. நா. சுஜீத்தா** மட்/ வின்சன் மகளிர் தேசிய பாடசாலை
3. இசை தனி - 04ம் பிரிவு **செல்வி. பு. கலிஸ்ரா** மட்/ வின்சன் மகளிர் தேசிய பாடசாலை
4. இசைக் குழு - திறந்தபோட்டி - மட்/ புனித மிக்கேல் தேசிய பாடசாலைக் குழுவினர்
5. தமிழியற் கட்டுரை வரைதல் - 05ம் பிரிவு - **செல்வன். ம. ரமணசுந்தரம்** மட்/ புனித மிக்கேல் தேசிய பாடசாலை

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தன்னினும் தள்ளாமை நீர்த்து.

**திருமதி. பீ.எம். உதுமான்சாஹீப்**
இணைப்பாளர் - ஆசிரியர் நிலையம்
மட்டக்களப்பு கல்வி வலயம்.

# ஆசிரியர் நிலையம் வழங்கும் தொடருறு ஆசிரியர் கல்வி ~ 2000

மட்டக்களப்பு வலய ஆசிரியர் கல்வி நிலையத்தினால் 2000 ஆண்டில் நடாத்தப்பட்ட தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் தலைப்புக்கள் பற்றி நிலைய இணைப்பாளரின் அறிக்கை.

| இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் |
|---|---|
| 01. | தரம் 03க்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கட்கு ஆங்கில மொழித்திறன் விருத்தி. |
| 02. | தரம் 01க்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கட்கு வாய்மொழிமூலம் ஆங்கிலம் கற்பித்தல். |
| 03. | தரம் 04க்கு அழகியற்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கட்கு அழகியல்கல்வி கற்பித்தல் திறன்விருத்தி. |
| 04. | 10ம், 11ம் தரங்களில் சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கட்கு படவரையியல் கல்வித்திறன் விருத்தி. |
| 05. | 07ம், 09ம் தரங்களில் வாழ்க்கைத் தேர்ச்சிப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கட்கு வாழ்க்கைத் தேர்ச்சிப்பாடம் கற்பித்தல் திறன்விருத்தி. |
| 06. | 10ம், 11ம் தரங்களில் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்கட்கு ஆய்வுகூடப்பராமரிப்பும் உபகரணப்பயன்பாடும், செயன்முறைக்கல்வி. |
| 07. | தரம் 6 – 11க்கு இடைப்பட்ட ஆசிரியர்கட்கு தகவல் தொழில்நுட்ப அறிமுகம் (கணனி) |
| 08. | புதிய நியமனம் பெற்ற பயிற்றப்படாத ஆசிரியர்கட்கு பாடத்திட்டம், பாடக்குறிப்பு தயாரிப்பு பற்றிய புதிய நுட்பங்கள். |
| 09. | தரம் 06 தொடக்கம் 11 வரையிலான புதிய பயிற்றப்படாத ஆசிரியர்கட்கு பாடசாலை மட்டக்கணிப்பீட்டுக் கல்வி. |
| 10. | தரம் 02க்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாய்மொழி மூலம் ஆங்கிலம் கற்பித்தல். |
| 11. | தரம் 10, 11க்கு மனையியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆய்வுகூடப்பராமரிப்பும், செயல்முறைக்கல்வியும், மனையியல்பாடம். |
| 12. | தரம் 03க்கு அழகியற்கல்வி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கட்கு அழகியற்கல்வி (இசையும் அசைவும்) கற்பித்தல்நுட்பங்கள். |
| 13. | தரம் 04க்கு ஆக்கற்றொழிற்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கட்கு ஆக்கற்றொழிற்பாடக்கல்வி கற்பித்தல் நுட்பங்கள். |
| 14. | தரம் 06க்கு ஆங்கிலக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கட்கு பரிகாரகக்கற்பித்தல் திறன்விருத்தி. |
| 15. | தரம் 05க்கு கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்கட்கு புதிய கற்பித்தல் நுட்பங்கள் கணிதபாடம். |

(முரண்பாடு தீர்வுக்கல்வி சென்ற இதழின் தொடர்ச்சி)

த. மோகன்ராஜ்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வ.க. அலுவலகம், மட்டக்களப்பு.

எண்ணக்கரு - 1

# மனதை ஒரு நிலைப்படுத்தல்

எந்தக் காரியங்களைச் செய்ய முயலும் போதும் மனதை ஒருநிலைப்படுத்து கின்றோம் (இறைவணக்கம், மௌனம் இசைத்தல், பாடல், பேசுதல், நடித்தல், உணர்வுபூர்வமாக வாசித்தல்) இவைகளினால் நாம் செய்யப் போகும் காரியங்களுக்கு எம்மை தயார் நிலையில் வைத்துக் கொள்ள முடியும்.

மனதை ஒரு நிலைப்படுத்தினால் மனம் சாந்தியடைந்து புதுப் பொலிவுபெற்று கற்றல் / கற்பித்தலுக்கு இலகுபடுத்தப்படுவதுடன்

உடல் ஓய்வாகவும்
மனம் ஒரு நிலைப்பட்டும்
உறுதியான மனப்பாங்கும்
முகமலர்ச்சியும் அடைந்து செய்யப்போகும் அனைத்துக் காரியங்களும் பூரண சித்தியடையக் கூடிய நிலையை நாம் அடைந்து கொள்ள முடியும். ஒவ்வொரு தனியாரின் மனநிலை பூரிப்படைவதினால் மாணவர்கள் சமூகமயமாக்கப்பட்டு, சமூகத்தேவைகளை நிறைவேற்றுவதுடன் மாணவர்களின் வெளியீட்டுத்திறன்களையும் மேம்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

ஒரு நிலைப்படுத்தப்பட்ட மனநிலையில் செய்யப்படும் அனைத்துக் காரியங்களும் சிறந்த வெற்றியை ஈட்டும் என்பது இவ் எண்ணக்கருவின் முக்கிய நோக்கமாகும்.

எண்ணக்கரு - 2

# அவதானமாகச் செவிமடுத்தல்

வகுப்பறைக் கற்றல் / கற்பித்தலில் ஆசிரியர்கள், மாணவர்கள் அவதானமாகச் செவிமடுக்கும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும் அவதானமாகச் செவிமடுக்கும் போதே ஆசிரியர் - மாணவர்களிடம் பயன்தரும் தொடர்பாடல் ஏற்படுத்தப்பட்டு கற்றல் / கற்பித்தல் ஏற்படுத்த முடியும்.

மாணவர்கள் அவதானமாகச் செவிமடுக்கும் வகுப்பறைச் சூழல் ஒன்றினை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஆசிரியர்களால் செய்யக் கூடியவைகள்.

- முன்மாதிரியாக நடத்தல்
- சிறந்த தொடர்பாடல்
- நல்லுறவை வளர்த்தல்
- கருத்துப்பரிமாற்றம்
- விடயங்களைக் கிரகித்தல்
- கற்றலை மேம்படுத்தல்
- ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல்
- அமைதியான வகுப்பறைச் சூழ்நிலை
- தேவைகளை நிறைவேற்றுதல்
- கவர்ச்சியான கற்பித்தல்

- குழுச்செயற்பாடு
- கூட்டுவலிமையை ஏற்படுத்தல்
- பாராட்டுதலும், பரிசில்கள் வழங்குதலும்
- பின்னூட்டுதல்

இவைகளின் மூலம் வகுப்பறைச் சூழலைப்பயன்பாடுடையதாக உருவாக்க முடியும்.

அவதானமாகச் செவிமடுத்தல் மூன்று நிலைப்படுகின்றது என சார்ஸ் றோட்ஜஸ் கோட்பாடு கூறுகின்றது.

| | | |
|---|---|---|
| **செவிமடுத்தல்** | - | **வார்த்தைகள் மட்டும்** |
| **அவதானமாகச் செவிமடுத்தல்** | - | **வார்த்தைகள், மெய்ப்பாடுகள்** |
| **உணர்வுபூர்வமாகச் செவிமடுத்தல்** | - | **வார்த்தைகள், மெய்ப்பாடுகள் உணர்** |

அவதானமாகச் செவிமடுத்தல் எண்ணக்கரு மாணவர்களிடம் வளர்க்கப்படும் போது அவர்களின் மனக்கிடக்கையில் மலர்ச்சியும் தன்னை உணர்தல், பிறரை மதித்தல், நம்பிக்கையை ஏற்படுத்தல், உறுதியான வெளிப்பாடு, முரண்பாடு பகுப்பாய்வு, முரண்பாடு தீர்த்தல், நடுநிலைமை செய்தல் போன்ற முரண்பாடு தீர்வுக் கல்வியின் பண்புகள் இவர்களிடையே வளரும். இதனால் பயன்தரு பாடசாலையைக் கட்டியெழுப்ப முடியும்.

முரண்பாடு தீர்வுக் கல்வி எண்ணக்கருக்களை நோக்கும்போது மாணவர்களின் மனப்பாங்கில் ஏற்பட்ட, ஏற்படும் மனப்பூசல்கள், முரண்பாடு, நெருக்கடி, யுத்தம் போன்ற விரும்பத்தகாத பண்புகளை ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்றல்/ கற்பித்தல் செயற்பாடுகளின் போதே படிப்படியாக அகற்றி மாணவர்களின் நடத்தை மாற்றங்களின் மூலம் பயன்தரு பாடசாலைச் சூழலைக் கட்டியெழுப்புவதே முரண்பாடு தீர்வுக் கல்வியின் முக்கிய நோக்கமாகும்.

*முரண்பாடு தீர்த்து உடன்பாடு காண்போம்*

## ஆயுதப் போராட்டத்தினால் பிள்ளைகளிடம் தோன்றும் முரண்பாடுகளும் - தீர்வும்

பிள்ளைகளிடம் மணப்பாங்கு, உடன்பாடுகாணாத போதே முரண்பாடுகள் தோன்றுகின்றன.

தனியாள், குடும்பம், சூழல், வாழும் / வாழப்போகும் இடங்களில் ஏற்படும் சமூக மாற்றங்களினாலும் பிள்ளைகளின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்களினாலும், தேவைகள், விருப்புக்கள் நிறைவேற்றப்படாத போதும் முரண்பாடுகள் பிள்ளைகளிடம் தோன்றுகின்றன.

**பிள்ளைகளிடம் தோன்றும் முரண்பாடுகள் 4 வகைப்படும்**

| | | |
|---|---|---|
| 1) மனப்பூசல்கள் | : | எல்லோரிடமும் காணப்படும் இலகுவில் தீர்க்க முடியும். |
| 2) முரண்பாடு | : | தனியாளிடம் காணப்படும் பிணக்கு திட்டமிட்டுத் தீர்க்க முடியும். |
| 3) நெருக்கடி | : | முரண்பாடுகள் அதிகரிக்கும்போது தோன்றும். பேச்சுவார்த்தை, துணைபோதல் மூலம் தீர்க்க முடியும். |
| 4) போர் | : | அழிவுகள், நிரந்தரப் பகைமை தோன்றும் முழுமுயற்சியுடன் முயன்று சமாதானப்படுத்தலாம். |

**போர் 3 வகைப்படும்**

| | | |
|---|---|---|
| 1) நேரடியான போர் | : | பிள்ளைகள் ஒருவருக்கொருவர் நேரடியாகவே சண்டையிடல் பெற்றார், ஆசிரியர்கள், சக நண்பர்களினால் தீர்க்கமுடியும். நடுநிலையாளர்களாக செயற்படல் |

நம்பிக்கையை வளர்த்தல்.
இணக்கப்பாட்டிற்குள் கொண்டுவரல்.

2) மறைமுகமான போர் : ஒருவரை ஒருவர் மறைமுகமாகத் தூற்றுதல் புறம் கூறுதல், கோள் சொல்லுதல்
இருவருக்கும் புரிந்துணர்வை ஏற்படுத்தல்
ஒருவரை ஒருவர் அறியச் செய்தல்
காரணத்தை அறியச் செய்தல்
இணைப்பை ஏற்படுத்தல்.

3) இடம் பெயர்ந்த போர் : பிரச்சனைக்குரியவருடன் போரிட முடியாமையால் வலிமை குறைந்த பிள்ளைகளுடன் போரிடல்.
விருப்பு, வெறுப்புக்களை அறியச் செய்தல்
சகோதரத்துவத்தை ஏற்படுத்தல்
பிரச்சனைக்குரியவரை இனம் காணச் செய்தல்
பெற்றோர்களின் உதவிகிட்டச் செய்தல்.

**ஆயுதப் போர் :** சமூகமாற்றங்களுக்கான தேவைகள் விருப்புக்கள் பிள்ளைகளிடையே நிறைவேற்றப்படாதபோது நெருக்கடி அதிகரித்து நெறி பிறழ்வான நடத்தை ஏற்படும் நிலை, பிள்ளைகளிடம் ஏற்படும் இந்நிலை தனியாட்களிடையே சமவயதுக் குழுக்கள் ஒன்று சேர்ந்து ஆயுதக் கலாசாரத்தின் மூலம் தீர்வு காணத்தலைப்படுவர்.
ஆயுதக் குழுக்கள் அனைவரும் ஒரே நோக்கை அடைய பொது இலக்குக்காகப் போரிடத் தொடங்குவர். போர் தனியாள், குடும்பம், சூழல் போன்றவைகளைப் பாதிப்படையச் செய்யும்.

## பிள்ளைகளின் நெருக்கடி - முரண்பாடு தீர்வு

1. பெற்றோர்கள், சமூகம் பிள்ளைகளின் தேவைகள் விருப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.
2. பெற்றோர்கள் பிள்ளைகளின் கருத்துக்களுக்கு செவிமடுக்கப்பழக வேண்டும்.
3. பிள்ளைகளின் நடவடிக்கைகளின் அவதானிப்பு அவசியம்.
4. குடும்பச் சூழல் நலமுடையதாக பிள்ளைகள் விரும்பக் கூடியதாக அமைதல் வேண்டும்.
5. பெற்றோர்கள் பக்கச் சார்பு இல்லாத நடுநிலையான தீர்வு காணக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.
6. முழுநேரமும் பிள்ளைகள் நல்லவற்றைச் சிந்திக்கச் செய்ய வேண்டும்.
7. முழு நேரமும் கற்பதற்கான சூழலை வளர்க்க வேண்டும்.
8. அறக்கருத்துக்களை நிதம் வலியுறுத்தி, போரின் கொடுமை, அழிவுகளைப் புகட்ட வேண்டும்.
9. பிள்ளைகளைப் பெற்றோர்கள் நன்கு அறிந்து அவர்களின் விருப்பு, வெறுப்புக் கேட்ப துணை போதல் வேண்டும்.
10. பெற்றோர்களின் நடவடிக்கைகளினால் பிள்ளைகளிடம் மனப்பூசல், முரண்பாடு, நெருக்கடி போர்நிலை தோன்றாது பாதுகாத்துக் கொள்ளல்.

# ஒரு இலக்கியத்தின் தோற்றம்

M.P. ரவிச்சந்திரா பண்பாட்டலுவல்கள் உத்தியோகத்தர்

இலக்கியம் என்பது சமுகப் பொறுப்புள்ள எழுத்தாளர் ஒருவரின் படைப்பு. ஏனெனில் இலக்கியம் காலத்தின் கண்ணாடியாக இருக்கின்றது. அதன் வளர்ச்சி அறிவுத்துறையைப் புறக்கணித்த வளர்ச்சியாக இருத்தல் இயலாது. ஏனெனில் முன்னேறாத ஒரு மொழியின் இலக்கியம் முற்போக்கானதாக அமையாது.

இலக்கியத்தின் பெருமானம் என்னும்போது இலக்கியம் என்றால் என்ன என்பது பற்றிய தீர்க்கமான கருத்துத் தேவைப்படுகிறது இலக்கியம் பற்றிச் சொல்லும்போது விஞ்ஞானம் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. இலக்கியம் என்பது சமுதாய நிலைமைகளினின்றும் ஊற்றெடுப்பது. அது தன்னுள் தான் முடிந்த முடிவு அன்று அது தான் தோன்றுகின்ற சமுகத்தின் வரலாற்றோடு இணைந்த ஒன்று. அது அனுபவத் தேறலின் கரைசல். ஓர் இலக்கியத்தில் ஆசிரியனின் உள்ளுணர்வு, கலைத்திறன், ஆளுமை என்பன அதன் பெருமானத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. இவற்றுடன் அதன் கட்டுக்கோப்பு அல்லது உள்ளமைதி தேவைப்படுகிறது. இலக்கியத்தின் இயல்பு பற்றிய சிந்தனையில் அதன் வகை, வடிவம், உள்ளடக்கம் முக்கிய இடம் பெறுவதோடு கையாளப்படும் மொழிநடைக்கும் ஒரு பெறுமானம் உண்டு. ஓர் நல்ல இலக்கியம் தோன்ற ஆக்கபூர்வமான படிப்பும் விமரிசனமும் தேவை.

இலக்கிய மொழியும் குறியீடுகளின் கோவையே சொற்கள் எல்லாம் குறியீடுகளே ஆனால் இக்குறியீடுகளுக்குப்பின்னால் உள்ள பொருள்களை மாத்திரமன்றி குறியீடுகளாகிய சொற்களின் அமைப்பையும், வடிவையும், பண்புகளையும் நோக்குகின்றோம். கனிவு, வலிமை, கரகரப்பு, மடமடப்பு முதலான ஒலிப்பண்புகளை நாம் கவனிக்கின்றோம். எதுகை, மோனை முதலான ஒலிப் பண்புகளை நாம் அவதானிக்கின்றோம். சுருங்கச் சொல்வதானால் உலக வாழ்க்கையின் சிறப்பு நிலைக் கூறுகளைப் புறக்கணிக்காது பேணுவது இலக்கியத்தின் பிரத்தியேக இயல்புகளில் ஒன்று மற்ற இயல்பு குறியீடுகளின் அமைவுக்கோலம் பற்றியும் அக்கறை கொள்வதாக இலக்கிய மொழி இருப்பதாகும். இவ்வாறு இலக்கியம் இருப்பதனால் அது நமது நயப்புக்குரிய தாகின்றது. நாம் நமது பொது வாழ்க்கையிலே வெறும் சிந்தனையாளர்களாக இருப்பதில்லை பல்வேறு வகையான உணர்ச்சிகளுக்கு நாம் ஆளாகின்றோம். கலைத்துறையிலும் இலக்கியத்திலும் நாம் மேலும் பலவாழ்வுகளை வாழ வல்லவர்களாக மாறுகின்றோம். இவ்வாறு புதுப்புதுக் குறியீட்டு நிலை அனுபவங்களை வழங்குவது இலக்கிய நயப்பின் பயன்களுள் ஒன்றாகும்.

எல்லா இலக்கியங்களிலும் பண்புகள் யாவும் ஒரே அளவில் அமைந்து கிடக்கும் என என்னுதல் தவறாகும் இலக்கிய வடிவங்கள் பலவகைப்பட்டன. அந்த வடிவ வேறுபாடுகளுக்கு ஏற்ப அந்தப்பண்புகளும் வேறுபடும். (உ+ம்) நாடகம் என்னும் வடிவம் நடைமுறை வாழ்க்கையுடன் மிக நெருங்கிய ஒற்றுமை பூண்டது. அத்துடன் சுருக்கமும் செறிவும் அடர்த்தியும் வாய்ந்தது. ஆனால் நாவல்கள் அவ் வளவு செறிவானவை அல்ல என்றாலும் மனித உறவுப் பின்னல்களை விரிவாகவும், விளக்கமாகவும் காட்டும் ஆற்றல் நாவலுக்கு உண்டு. காலத்தையும், இடத்தையும் விஸ்திரமாகப் படம்பிடித்து

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்.

காட்டும் வாய்ப்பு நாவலில் உண்டு. அதாவது நாவலின் பின்னணியும் களமும் வெகுதெளிவாகவும் அச்சொட்டாகவும் பரந்தமுறையிலும் அமையும், மேலும் இலக்கிய வடிவங்களின் பண்புகள் மாறுந்தன்மையை உடையனவாகையால் சகல இலக்கியப் படைப்புக்களையும் ஒரேவிதமான மனப்பான்மையோடு நாம் அணுகுதல் பொருந்தாது. இந்த வேறுபாடுகளை உணர்ந்து கொள்வது நேரிய இலக்கிய நயப்புக்கு உறு துணையாக அமையும்.

இலக்கியமென்பது வேறுபாடுகளை வற்புறுத்திக் காட்டும் நோக்கத்தினை மட்டும் உடையதன்று. விஞ்ஞானி காண்பது போன்ற பெறுமைப்பாடு உண்மைகளைக் கண்டறிந்து உணர்த்துவதும் இலக்கியத்தின் பணிகளுள் ஒன்றாகும். இலக்கியப் படைப்பாளியின் நிலை அவ்வளவு புறவயமானதன்று இலக்கியப்படைப்பாளியின் தனிப்பட்ட அபிப்பிராயங்களுக்கும் இலக்கியத்தில் இடமுண்டு. தனியாளுமை வெளிப்பாடு மாத்திரமே இலக்கியத்தின் பண்பும் பயனும் என்று கொள்ளத் தேவையில்லை. இலக்கியத்தின் நடுநாயகமாக மிளிரும் பிரதான செய்தி அல்லது அடிக்கருத்து ஒரு சமுதாய விளை பொருளே ஆகும்.

இலக்கியத்தின் பெறுமதி மற்றுமொரு முக்கிய அம்சத்திலேயே தங்கியுள்ளது. அதுவே அதன் உள்ளமைதி அல்லது கட்டுக்கோப்பு இலக்கியத்தின் பல்வேறு கூறுகளுக்கு மிடையே உள்ள தொடர்புகளே அடிப்படையின் அழகை நிருணயிக்கின்றன. அழகான வடிவத்தில் அமைவதே சிறந்த இலக்கியம் அதாவது இலக்கியத்தின் பல்வேறு கூறுகளும் அடிக்கருத்துக்குத் துணை புரிவனவாக அமைத்திருத்தல் வேண்டும். அணிநயம் பொருந்த இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் அப்படி அமையும்போதுதான் இலக்கியம் வலிமையுடையதாகும்.

இலக்கியம் என்பது சமுதாய நிலைமைகளினின்றும் ஊற்றெடுப்பபது அந்த வகையிலே அதுவும் வாழ்க்கையிலே ஓர் அம்சமாக ஓர் அங்கமாக இருக்கிறது. வாழ்க்கையை இயக்கும் மிகப் பிரதானமான சக்தியாக அது இல்லையாயினும் அதுவும் கணிசமான தாக்கத்தை உடைய ஒரு துணைவலுவாக உள்ளது. இலக்கியங்கள் வெளிப்படையாகவும் நேரடியாகவும் அபிப்பிராயங்களை மாற்றுவதில்லை ஆயினும் அவை சிறுகச்சிறுக, மெல்லமெல்ல நம்மைத் தம் பக்கம் இழுத்து வசப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் உடையவை. மேலும் இலக்கியத்தில் இடம்பெறும் இலட்சியங்கள் அங்கு அமைந்து கிடக்கும் தன்மையையும் அவை பெறும் முனைப்பையும் பொறுத்து மூவகை நூல்கள் எமக்குக் கிடைக்கின்றன. அவை நீதிநூல், புனைகதைநூல், நட்பியல் நூல் ஆகும்.


இலக்கியங்கள் ஆற்றல் மிக்கவை, வலிமை பொருந்தியவை அவையே பொருளையும், இன்பத்தையும் திறம்படக் கையாளவல்லவை. அறங்களுள் எல்லாம் சிறந்ததான பொதுமையறத்தை வரவேற்கும் வன்மையும் பெற்றவை. சமதருமத்தை நோக்கிய முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தத் தக்கவை. இலக்கியம் உணர்த்தும் இலட்சியங்கள் பற்றிய இப்பரிசீலனையை


**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை**

என்ற வள்ளுவனின் குறள் மூலம் பூர்த்தி செய்தல் பொருத்தமாகும்

# மட்டக்களப்பு வலயத்தில் 2000ம் ஆண்டில் இடம்பெற்ற சில நிகழ்வுகள்












## *திரு. எஸ். எஸ். மனோகரன் ஐயா அவர்கள்*

**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றமையிட்டு மட்/ வலயக்கல்வி அலுவலகம் நடாத்திய பாராட்டு வைபவத்தின்போது வாசிக்கப்பட்ட கவிதைகளில் ஒன்று.**

### சேவையின் வழியே . . .

எந்த இடர் வரினும் இலக்கினை எத்தனை பேர் தடுத்தும்
எண்ணிய கொள்கைதனை இறுதியில் எய்திடும் நெஞ்சுரமும்
சொந்த முயற்சி துணையாக சேவையில் தோய்ந்திடவே
சொல்லம்பு ஆயிரங்கள் துளைத்தும் சோர்ந்திடா சக்தியுடன்
நிந்தை பல சுமந்து நிமிர்ந்து நிருவாக தேரிழுத்து
நல்லன செய்யக்கண்டோம் கல்வி நற்பயிர் தான்வளர
சொந்த தனிமனிதன் இவரின் சேவையின் பாதையிலே
பூத்த தடமலர்கள் காலத்தால் வாடா மணம் தருமே.

ஆடிக் கறத்தலிலும் அதையே பாடிக் கறத்தலிலும்
ஆணித்தரமான விளைவை ஆளுமையால் நிறுத்தி
தேடிப் பலதிசையும் நமது தேவைகள் தாமுணர்ந்து
தேக்கி வளம் கொழிக்க சேவை செய்ததைச் சொல்லிடவா
நாடிவந்தோர் நலனில் தினமும் நல்லன செய்தலிலே
நேயம் கலந்த பணியாற்றி நின்றதைச் சொல்லிடவா
ஓடிஓடி உழைத்து திணைக்களம் உன்னத பேரெடுக்க
உடல் பொருளாவி யனைத்தும் ஈந்ததைச் சொல்லிடவா.

யாருக்கு கல்விப்பசி அதுவும் எங்கெங்கு தோணுதென்று
ஆய்வுக்கு உட்படுத்தி அவரவர் தேவைக்கு ஏற்றபடி
வேருக்கு நீர்தரல் போல் விளைவது வெற்றி பெறவெனவே
வேர்வையே தோய்ந்துழைக்கும் திறன் வேறெவர்க்கிங்குவரும்
நேருக்கு நேர் பிழைகள் களைந்து நீண்ட பெரும்பணியால்
சீர் செய்த கல்விவளம் செறியும் சேரிகள் எல்லை வரை
பேருக்காய் தன் பதவி எதுவும் பேணாத காரணத்தால் பெறும்
பேருயர்வு இன்றுவரை வளர்ந்த பெருமை காணுகிறோம்.

மட்டுநகர் ஒருநாள் மட்டமாம் கல்வியிலே எனும்
சொட்டை செவிதுளைக்க துடித்தே, தன்னாலே ஆனமட்டும்
எட்டும் வரை முயன்று பட்டிதொட்டி எங்கும் தான் நுழைந்து
ஏழைகள் வாசலிலும் கல்விமணம் வீச வழிசமைத்தோன்
எட்டாக்கனியெனவே ப்லவளம் எப்படி இங்குவரும்
என்று தடை தருவோர் தனைச்சாடி உரிமையுடன் பறித்து
கொட்டிய பௌதிகமாம் வளங்கள் பூரிக்கசேவை செய்த
கோமகன் மனோகரனின் சேவை காலத்தால் வென்றிடுமே.

## மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் சஞ்சிகை 'வித்தியா' வின் முதல் வெளியீடு 01.12.1999ல் இடம்பெற்றமையை நினைவில் நிறுத்துவோம்.



'வித்தியா' வின் தோற்றத்திற்கு காரணகர்த்தாவாக இருந்த மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளரும், சிரேஷ்ட உதவிச் செயலாளருமான திரு.எஸ்.எஸ். மனோகரன் அவர்களிடம் இதழாசிரியர் வித்தியாவின் முதலாவது இதழின் பிரதி கையளிக்கிறார்.



பிரதிவலயக்கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். மாணிக்கராஜா அவர்கள் மங்கல விளக்கேற்றி வெளியீட்டு நிகழ்வை ஆரம்பித்துவைக்கிறார்.



'வித்தியா' வெளியீட்டு நிகழ்வின்போது திரு. ஏ.எம்.ஈ. பேர[illegible] பிரதிக் [illegible] கிறஸ்தவ நற்சிந்தனை வழங்குகிறார். எமது வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். மாணிக்கராஜா அவர்களும் புகைப்படங்களில் காணப்படுகிறார்.



'வித்தியா' முதல் இதழ் பற்றி கருத்துரை வழங்கிய கலாநிதி கமலநாதன் அவர்கள் இரண்டாவது பிரதியைப் பெறுகிறார்.

**மட்டக்களப்பு வலய கல்வி அலுவலகத்தின் சஞ்சிகை**

# *வித்தியாவின் இரண்டாவது இதழ் மணங்கமழ*

**பக்கபலமாகச் செயற்பட்ட சகலருக்கும்**

## *எமது உளமார்ந்த நன்றி*

- எமது சஞ்சிகை நிலையாக வளர்ந்தோங்க நல்வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய எமது மதிப்பிற்குரிய கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் **திரு. க. பரமேஸ்வரன்** அவர்களுக்கும்,

- வடக்குக்கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் **திரு. சிவானந்தன்** அவர்களுக்கும்,

- *'**வித்தியா**'* மலர் ஊக்குவிப்பும், வழிநடத்தலும் நல்கியதுடன் நல்வாழ்த்துச் செய்தியையும் வழங்கிய எம் மதிப்பிற்குரிய மட்டக்களப்பு வலயக்கல்விப்பணிப்பாளர் **திரு. ஆர். மாணிக்கராஜா** அவர்களுக்கும், எமது மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் (மட்டக்களப்பு மாவட்டம்) **திரு. ஏ. குணராஜரெட்ணம்** அவர்களுக்கும்,

- ஆக்கங்கள், செய்திகள் மற்றும் தகவல்கள் ஆகியவற்றைத் தந்துதவிய கல்விசார் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும்,

- கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் **சி. மௌனகுரு,** கலாநிதி **எஸ். யோகராஜா,** கலாநிதி **எம். செல்வராஜா** ஆகியோருக்கும்,

- ஆக்கங்களின் பிரதிகளை ஒப்புநோக்கி உதவியோருக்கும்,

- மனமறிந்து உதவும் **மக்கள் வங்கி, மட்டக்களப்பு** பிராந்திய அலுவலகத்தினருக்கும்,

- *'**வித்தியா**'* இதழ் மணங்கமழ அழகுப்பொலிவுடன் அச்சுருவில் மலரப் பெருந்துணை புரியும் **நியூ கீன் அச்சக முகாமையாளர், உதவியாளர் யாவருக்கும்,**

- *'**வித்தியா**'*வின் நோக்கம் நயந்து குணம் மேற்கொண்டு பேராதரவு வழங்கும் அன்பர்கள் யாவருக்கும்



***என்றும் நன்றியுடையோம்.***

சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினர்
வலயக்கல்வி அலுவலகம், மட்டக்களப்பு.

மக்கள் வங்கியின்
சேமிப்போடிணைந்த
மாபெரும் வெற்றித்திட்டம்

ஜனஜய

ரூபா 2000 வைப்புடன் கணக்கை ஆரம்பித்து
உங்கள் வாழ்வுக்கு வளமூட்டும் ஏராளமான
நன்மைகளைப் பெறுவதோடு
ஜயசிறி வெற்றித்திட்டத்துடனும்
இணைந்து கொள்ளுங்கள்

ஜயசிறி

வெற்றித்திட்டம்
நாள்தோறும் **10** வர்ணத்தொலைக்காட்சிகள்
வாரம்தோறும் ரூபா 500,000 பெறுமதியான கார்
இரு வாரங்களுக்கொருமுறை
ரூபா. 1,500,000 பெறுமதியான வீடு
மாதந்தோறும் தலா ரூ. 1,000,000 வீதம்
**4** பணப்பரிசுகள்

விபரம்

மக்கள் வங்கி கிளைகள்

*New Keen - B'caloa T. P : 22204*